தென்மொழி



சுவடி 7 ஓலை 9.

உலகத் தமிழ்க் கழக
முதல் மாநில மாநாட்டுச்
சிறப்பிதழ்.

உருபா ௧

நமக்கு வந்த மடல்கள்.

O 159. உலகத் தமிழ்க் கழக முதல் மாநில மாநாட்டிலே தங்களை முதன் முதலாகக் காணும் நல்வாய்ப்பைப் பெற்றேன். தங்கள் நேரிய பார்வையும் கூரிய விழிகளும் அரிமா நோக்கும் கண்டேன். கண்டு, தாங்கள் எடுத்த வினைப்பாட்டை முடிக்கும் திறம்பெற்றவர் என்பதை உணர்ந்தேன். தென்மொழியின் வளர்ச்சிக்கு எப்பொழுதும் உழைத்து வருகிறேன். தென்மொழிக்கு அரையாண்டுக் கட்டணத்தை வைப்பீர்களானால் அது நன்மை பயக்கும் எனக் கருதுகிறேன். ஒவ்வொரு உ. த. க. கிளையும் அருகில் உள்ள கிளை நூலகங்களில் தென்மொழியை இன்றியமையாத முறையிலும் மற்ற நற்றமிழ் இதழ்களையும் வாங்கிப் போடுமாறு கட்டளை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

மாநாட்டிற்கு வந்த நான் தங்களோடு பேசும் வாய்ப்பு கிடைக்க நல்ல சூழ்நிலை இல்லாது போய்விடினும் அடுத்த மாநில மாநாட்டிற்குத் தென்னார்க்காடு வரும் பொழுது தங்களை நேரில் பார்த்துப் பேசவும் தங்கள் குடும்பத்தோடு பழகவும் மிக்க அவாக் கொண்டுள்ளேன்.

உ. த. க. உறுப்பினர் அனைவரும் தென்மொழி உறுப்பினர் ஆதல் வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தல் தென்மொழியின் வளர்ச்சிக்கு நல்ல துணையாக இருக்க முடியும் என்பதையும் தெரியப் படுத்திக்கொள்கிறேன் கு. இராசகோபாலன், தேவகோட்டை.

O 160. தனித்தமிழ்க் காவல! 'தென்மொழி' இதழ்கள் தங்கள் ஆசிரியவுரைகளால் சிறப்புப் பெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆசிரியவுரையும் ஓராயிரம் தனித்தமிழ் மறவர்களைத் துடித்தெழச் செய்யும். ஆனால் ஆங்காங்கே ஓரிரு புல்லுருவிகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. ஏனெனில் புல்லுருவிகள் என்றுமே ஆணிவேருள்ள மரத்தைச் சாய்த்துவிடமுடியாது. அடுத்து, இன்னும் தமிழகத்தில் சாதி வேறுபாடுகள் தலைதூக்கிய வண்ணம் இருக்கின்றன. மதிப்பிற்குரிய மாணவ மணிகளிடத்திலேகூட அவ் வேறுபாடுகள் இருந்து வருவதாகச் சில கசப்பான செய்திகள் உணர்த்துகின்றன. உண்மையாகச் சொல்லுகிறேன். இதுவரை அரசின் சட்ட திட்டங்களால் சாதியைக் கொஞ்சங்கூட ஒழிக்க முடியவில்லை. ஆனால் 'தென்மொழி' சாதி ஒழிப்பில் மற்றெல்லா இயக்கங்களையும் மிஞ்சி நிற்கிறது. எனக்குத் தெரிந்து சாதி வேறுபாடு காட்டிய ஒருவர் 'தென்மொழி'யின் கருத்துரைகளைப் படித்த பிறகு தம் மனத்தை மாற்றிக் கொண்டு-நாம் எல்லோரும் தமிழர் என்ற எண்ணத்தை உறுதிப்படுத்திக்கொண்டுள்ளார். இப்படிப் பலர் இன்னும் மாறுவார்கள் என்பது உறுதி. இவ்வாறு தொண்டு செய்வதை விட்டுவிட்டு ஊர் சுற்றி வருகின்ற சிலர் 'தென்மொழி'யின் வினையாற்றலைத் தூற்றத் தொடங்கி இருக்கிறார்கள். எதிர்காலத்தில் சாதியற்ற குமுகாயம் ஒன்று அமையுமானால் அதற்கு வித்திட்ட பெருமை நம் 'தென்மொழி'யையே சாரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எத்தனையோ காந்திகள் தோன்றினாலும் அவர்கள் செய்ய முடியாத பணியைக் குறைந்த காலத்தில் 'தென்மொழி' செய்துள்ளது என்பதனை

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை: 9:

துலாம் தி. பி. உ000 (1969. -அக்டோபர்-நவம்பர்)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

திருக்குறள் தமிழ் மரபுரைச் சிறப்பு-1.

திருக்குறள் பொதுவாக உலகிற்கும்; சிறப்பாகத் தமிழர்க்கும் உலக முதற்றாய் மொழியாகிய தமிழ் மொழியில் கிடைத்த ஓர் ஒப்புயர்வற்ற வாழ்விலக்கியம் மட்டுமன்று; மாந்த இனத்திற்கே வழிகாட்டும் ஓர் அரும்பெரும் அறநூலாகும் என்பது உலகப் பேரறிஞர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பெற்ற உண்மையாகும். "உலகப் பொதுவாக எழுதப்பெற்ற மிகச் சிறந்த இவ்வற நூலைப்போல், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை" என்னும் உண்மையை, இசை, மருத்துவம், மெய்யுணர்வு, சமயவிலக்கியம் ஆகிய நாற்பெருந்துறைகளிலும் பண்டாரகர் பட்டம் பெற்றவரும், இவ்விருபதாம் நூற்றாண்டின் பேரறிவுக் கருவூலம் எனப் பாராட்டப் பெறுபவரும், 'நோபெல்' பரிசு பெற்றவரும் ஆகிய ஆல்பர்ட் சுவைட்சர் எனும் பேரறிஞர் அறுதியிட்டுரைப்

பர். இச் சிறந்த நூலின் நுண்ணறிவுத் திறனையும், சொற்செறிவினை யும் கண்டு வியந்த துரு (W. H. Drew) எனும் ஆங்கில அறிஞர், "தம் பெயருக்குப் பெரும் இழுக்கையும், பழியையும் தேடிக்கொள்ளாத முறையில் எந்த மொழி பெயர்ப்பாளரும் இந்நூலை எந்த ஐரோப்பிய மொழியிலும் பெயர்த்தெழுத முடியாது" (It could not be translated into any European Language without exposing the translator to infamy)என்று கூறுவர். "இந்நூல் இந்தியாவில் மட்டுமன்று, உலகில் உள்ள இலக்கியங்களிலேயே தலைசிறந்தது" (It is not only a great book of India, but of the World literature as well...) என வடவிந்திய அறிஞர் ஒருவர் (Manamohan Ghosh)உரைப்பர்.

தமிழர்க்கே உரிய பழம்பெருஞ் சொத்தாவதும்; உலகில் உள்ள மாந்த இனத்திற்கே பொதுமை யாவதும், தமிழரின் இனக்காப்புக்கு வல்லதோர் அரணாவதும், தமிழ்மொழிக்குள்ள செறிவையும் சிறப்பையும் எளிமையையும் இனிமையையும் என்றும் யாவருக்கும் புலப்படுத்திக் கொண்டிருப்பதும் ஆகிய திருக்குறளுக்கு இதுவரை எழுதப்பெற்ற உரைகள் ஏறத்தாழ நூறு ஆகும். இத்தனை உரைகளைப் பெற்றும் இந்நூலுக்கு மேலும் மேலும் உரைகள் எழுகின்றமைக்குத் தலையாய மூன்று கரணியங்களைக் கூறலாம். ஒன்று, இந்நூல் செய்யுள் வடிவானது: இரண்டு, இதுவரை எழுதப்பெற்ற உரைகள் எல்லாமும் நிறைவுற்றிராமையுடன் குறைவுற்றிருப்பதாகவே யாவரும் கருதுவது. மூன்று, ஒப்புயர்வற்றதும் உலகப் பெரும்புகழ் பெற்றதுமான இந்நூலுக்கு உரையெழுதும் முகத்தான் ஓர் அறிஞரென மதிக்கப் பெற மாட்டோமா என்ற புகழ்நசையொடு முன்னையர் நின்ற வரிசையில் தாமும் நிற்க அறிஞர் சிலர் விரும்புவது. இம் முக்கரணியங்கள்தாம் இந்நூலுக்கு இத்தனையர் உரை வரைய அடிப்படையாக நின்றனவே யன்றி, மற்று, இந்நூல் யாவருக்குமே விளங்காப் பெரும் புதிரானதொரு நூலுமன்று; இதன் ஆசிரியர் எண்ணமும் இதனை எவருமே விளங்கிக்கொள்ளக் கூடாதென்பது மன்று. இதற்குரையெழுதிய பலரும் இலக்கண இலக்கியவறிவு முற்றுப் பெறுதவரும், மொழித்திறன் முட்டறுக்க வியலாதவரும், வரலாற்றறிவு வாய்க்கப் பெறுதவரும்; காய்தல் உவத்தலன்றி ஆயும் நடுவுநிலைத்திறன் பிறழ்ந்தவரும், பரந்த நூலறிவு பெறுதவரும், தமிழினைக் காழ்ப்புக் கொண்டவரும், தமிழ் வரலாற்றைத் தப்புந்தவறுமாகப் படித்தவருமே யாவர். பொதுவாகக் காணுமிடத்து நமக்குக் கிடைக்கும் பழைய பத்துரைகளுட் சிலவும், அவற்றிற்குப் பின்னெழுந்த புத்துரைகள் பலவும் படிப்பாரை மயங்க வைக்கும் பித்துரைகளும் பிதற்றுரைகளாகவுமே காணப்படுவதன்றி

அவற்றுள் ஒன்றேனும் திருக்குறளுக்கு ஒத்த வுரையாகவோ ஒப்பற்ற வுரையாகவோ மதிக்கத் தக்கதாக இல்லை என்பது, அவ்வுரைகளை யெல்லாம் ஓரளவு ஒருங்கே வைத்து ஒப்பநோக்கினுர்க்கும் எளிதே புலப்படுவதாகும். என்றாலும் இதுவரை எழுந்த வுரைகள் யாவும் முற்றும் பயனற்றவை யென்றோ, அவற்றால் திருக்குறள் என்னும் மூலநூல் ஒருசிறிதும் விளங்கித் தோன்றவில்லை யென்றோ கூறுமளவிற்கு நான் நன்றி கொன்றவனும் அல்லன். அல்லதவற்றுள் தாம் ஒப்பாத உரையெழுதிய உரையாசிரியர் எவரையேனும் கொன்று தீர்த்தல் வேண்டும் என்று கூறுமளவிற்குப் பழிக்கஞ்சாப் பதடியுமல்லன். என் கருத்தெல்லாம் திருக்குறளுக்கு நேற்றுவரை நாம் மதித்துப் போற்றத்தக்கதாக, நம் அடங்கா அறிவெழுச்சியை அடக்கத்தக்கதாக ஏறத்தாழ ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உலகப் பேரறிஞர் திருவள்ளுவரின் உள்ளத்தைத் தம் நுண்மாண் நுழைபுல வன்மையினால் ஓரளவேனும் உண்மையாக உணர்ந்து காட்டவல்ல உரைநூலாக எதுவும் தோன்றியிருக்கவில்லை யென்பதே.

இஃதிவ்வாறிருப்பினும், நமக்கு இதுவரை கிடைத்த உரைகள் எல்லாவற்றுள்ளும் பரிமேலழகர் எழுதிய உரையே நூற்றுக்கு ஐம்பதல்லதறுபது இடங்களில் வள்ளுவர் கருத்தைத் தெள்ளிதின் காட்டும் உரையாக விருப்பதை எவரும் மறுத்தல் இயலாது. எனவே பரிமேலழகர்க்குத் தமிழ் உலகம் மிகவும் கடமைப்பட்ட தென்றே சொல்லுதல் வேண்டும், என்றாலும் திருக்குறளில் அவர் கலந்துள்ள பல நச்சுக்கருத்துகளை எண்ணுந்தொறும் அவர் எவ்வளவுக் கெவ்வளவு பாராட்டிற்குரியரோ, அவ்வளவுக் கவ்வளவும் அதற்கு மேலும் பழித்தற்கும் உரியவராவர் என்றே கூறவேண்டி யுள்ளது. இனி, அவரொழிந்த பிறவுரையாசிரியர் எல்லாரும் அவர் பிசைந்த சோற்றையே மேலும் பிசைந்தவராகவும், அவருமிழ்ந்த எச்சிலையே மேலும் சுவைத்தவராகவுமே காணப்படுகின்றனரன்றிப் புதுப்படையல் சாற்றினராகவோ, புதுச்சுவை அட்டினராகவோ காணப்படுகின்றிலர்.

இந் நிலைக்கெல்லாம் ஒரு முடிவு வைப்பது போலும், திருவள்ளுவத் துறையை மேலும் துலக்கியது போலும், திருவள்ளுவத்திற்கு மேலும் ஒளியேற்றியது போலும், தமிழர் மரபிற்கே கரைகண்டு காட்டியது போலும், மொழித்துறைக் கடலில் முற்றும் முழுகிப் பழித்துரைக்கில்லாப் பன்னூலறிவு கைவரப் பெற்றவரும், இயற்கையிலேயே நுண்மாண் நுழைபுல வன்மையும் நடுவுநிலையும் வாய்ந்த பேரறிஞருமாகிய **ஞானமுத்து தேவநேயப் பாவாணர்** அவர்கள் அண்மையில் எழுதி வெளியிட்ட வுரை நம்மை எல்லாவகையிலும் நிறைவிப்பதும் மகிழ்

விப்பதுமாக விருப்பதைக் காட்டுவதும் அவ்வுரைத்திறன் பற்றி ஒருசில உரைப்பதுமே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

தாம் எழுதிய, 'திருக்குறள் தமிழ்மரபுரையில்' பாவாணர் முந்திய வுரைகள் எல்லாவற்றினும் சிறந்த வுரை யெழுதிய பரிமேலழகரைப் பாராட்டி யுரைத்திருப்பதும் அவர் உரைத்திறனை மெச்சுவதுமே அவர் நெஞ்சம் எத்துணை நடுவுநிலைமையும் நன்றியும் வாய்ந்த நெஞ்சம் என்பதை யறியப் போதுமான சான்றுகளாம். அத்துடன் தாம் உரை எழுதப் புகுந்த கரணியத்தையும் தெளிவாகக் கூறியுள்ளமை, திருக்குறளுக்குத் தாமும் ஓர் உரை எழுதுவது வெறும் பொருளும் புகழும் பெறவேண்டும் என்ற நோக்கத்திற்காகவன்று; ஒரு கடமை நோக்கிற்காகவே யாகும் என்பதை யறிவுறுத்தும்.

"அது (பரிமேலழகர்உரை) பெரும்பாலும் ஏனையுரைகளெல்லாவற்றிலுஞ் சிறந்ததென்பதும், சில குறள்கட்கு ஏனையுரையாசிரியர் காண முடியாத உண்மைப் பொருளைப் பரிமேலழகர் நுண்மையாக நோக்கிக் கண்டுள்ளார் என்பதும் உண்மையே. ஆயின், பெறுதற்கரிய அறுசுவை யரசவுண்டியில் ஆங்காங்குக் கடுநஞ்சு கலந்து படைத்துள்ள தொப்ப, உண்மைக்கு மாறானதும் தமிழுக்குந் தமிழர்க்குங் கேடு பயப்பதுமான ஆரிய நச்சுக் கருத்துக்களை, முதலும் இடையும் முடிவுமாக நெடுகலும் குறிக்கோளாகக் கொண்டு புகுத்தியிருப்பது, இவ்வுரையை நடுநிலையுடன் நோக்கும் எவர்க்கும் புலனாகாமற் போகாது. இனி, சில குறள்கட்கு முழுத்தவறாகவும், சில குறள்கட்கு அரைத்தவறாகவும் பொருள் கூறியுள்ளார். சில தென்சொற்களை வடசொல்லாகக் காட்டியிருப்பதுடன், சில சொற்கட்குத் தவறான இலக்கணவமைதியுங் கூறியுள்ளார்."

என்று பரிமேலழகர் பிழைத்துள்ள இடங்களைப் பாவாணர் சுட்டிக் காட்டி யிருப்பதுடன்,

"இனி, இவ்வுரையைக் குறள்தொறும் பரிமேலழகருரையொடு ஒப்பு நோக்கினும், பலவிடத்துப் பல வகையில் திருத்தமும் வேறுபாடும் கண்டு இப்புத்துரையின் தேவையை உணரலாம்"-என்று தாம் "திருக்குறள் தமிழ்மரபுரை" எழுதியதற்குக் கரணியமும் கூறியுள்ளார்.

இனி, உரையெழுதப் புகுந்த உரையாசிரியர் இதுவரை திருக்குறளுக்கு எழுதப்பெற்ற உரைநூலாசிரியர்களைப் போலன்றி, மூலநூலின் தன்மையை நன்கு நுணித்துணர்ந்து, அந்நூலின்வழி நூலாசிரியரின் நுட்பமான மதிப்புலனையும், திட்பமான அறிவுச் செறிவையும் நன்கு ஆய்ந்து கண்டு, அவரின் மெய்நோக்கு இத்தகையதாகத்தான் இருத்தல்

வேண்டுமென உய்த்துணர்ந்து உரைகூறிய திறனை, நூல் முழுவதும் பரக்கக் காணலாம். தாம் எடுத்துக்கொண்ட மூலநூலுக்கு உரையெழுதுமுன், இதுவரை முன்னைய உரையாசிரியர் எவரும் கைக்கொண்டிராத வகையில் தமக்கேயுரிய சில வகுமுறைகளை அவர் வகுத்துக்கொண்டிருப்பது, அவர் எந்தக் கருத்தினையும் முறைப்பட வெண்ணி முடிபுற நிறுத்துபவர் என்பதை நமக்கு உறுதிப்படுத்துவதாகும். இவ்வகையில் திருக்குறள் உரையுடன் நமக்கு முப்பத்து நான்கு பக்க வரலாற்று முன்னுரையும், அறுபத்தாறு பக்க ஆராய்ச்சிப் பின்னிணைப்பும் கிடைத்துள்ளன. புத்துலக அறிவு மேம்பாட்டின் ஆய்வடிப்படையில் எழுந்த இந் நூறுபக்க விளக்கவுரை மூலநூலுக்கான ஓர் அரும்பெரும் ஆராய்ச்சியுரையாகத் திகழ்வதுடன், உரையாசிரியரின் அறிவுப் பரப்பையும், மூலநூலொடு அவர் மதிப்புலன் ஒட்டிநின்ற போகியல் முறையினையும் நமக்கு நன்கு வெளிப்படுத்திக்காட்டும். இம் முறையின் அடிப்படையில் இவருரை பயிலப் பெறுவதால், மூலநூல் ஆசிரியரின் உளக்கருத்துவழி உரையாசிரியரின் நுண்ணுணர்வு எவ்வாறு ஒன்றிச் செல்கின்றதோ, அவ்வாறே உரையாசிரியரின் கருத்து வழியும் பயில்வார் உணர்வும் ஒன்றிச் செல்வதாகின்றது.

இவ்விடத்து இன்னோர் உண்மையும் உணர்தற்பாலது. பத்தாம் வகுப்பு மாணவனொருவனுக்குப் பாட விளக்கஞ் செய்யும் ஓர் ஆசிரியர், அப் பத்தாம் வகுப்பு மாணவனினும் மதிப்புலனும், நூற்பரப்பும் இயற்கையறிவும் வாய்ந்திருந்தாலல்லது குன்றுமுட்டிய குருவிபோல் இடர்ப்படும் மாணவனைத் தெளிவித்தல் இயலாது. அதுபோல் மூலநூல் ஆசிரியனது அறிவுப் பரப்பினும் உரையாசிரியனின் அறிவுப் பரப்பு மிக்கிருந்தாலன்றி மூலநூலின் உண்மைத்திறன் அவனால் கண்டு காட்டப்பட வியலாததாம். மெய்யறிவு என்ற ஒரு சொல்லை ஒரு நூலாசிரியன் பெய்துவிடல் மிகவும் எளிதே போல, அம்மெய்யறிவிற்கு உட்கூறும், உணர்வுக்கூறும், புறக்கூறும் சாற்றிக் கற்பாருக்குக் கடாவிடைகளான் விளங்க வைத்தல் அத்துணை எளிதன்று. சாவாமருந்து என்று வந்தவிடத்து, அது 'சாவை நீக்குவதொரு மருந்து' என்றும், பின் அது நோவா மருந்து, மூவாமருந்து, சாவாமருந்து என்னும் மூவகை மருந்துகளுள் தலைசிறந்ததென்றும் உரையாசிரியன் உணர்ந்திருத்தல் வேண்டுமன்றோ? இனி, குன்றா விளக்கம் என்றுழி அஃது ஒளி குன்றாத நந்தா விளக்கு என்றதன் பொருளையும், பின்னர் அது நுந்தா விளக்கென்றும், நந்தா விளக்கென்றும் இரண்டாம் என்றதன் வகையினையும், அவற்றுள் நுந்தா விளக்கு என்பது தூண்டா விளக்கு என்றும்; நந்தா விளக்கு என்பது அவியா விளக்கு என்றும் அவற்றின் வேறுபாட்டினையும், பின்னர் அந் நுந்தா விளக்கு என்பது கோழி

முட்டை அல்லது எலுமிச்சம்பழ அளவாகவிருந்து பேரொளி விடும் பெறற்கருமணியாம் என்றும், நந்தாவிளக்கு என்பது அடிக்கடி திரி தூண்டப்படுதலாலும் எண்ணெய் விடுவதாலும் அவியாமல் தொடர்ந்து எரிந்துகொண்டிருக்குமொரு திரிவிளக்கென்றும் அவற்றின் பண்பையும் பயனையும், பின்னர் அவை பண்டைக்காலத்தே அரண்மனைப் பள்ளியறைகளிலும் கோயில்களின் உண்ணாழிகைகளிலும் இரவும் பகலும் ஒளியிருத்தற் பொருட்டு வைக்கப்பெற்ற விளக்கு வகைகளாம் என்னுமவற்றின் வரலாற்றினையும் அறிந்திருந்தாலன்றோ ஓர் உரையாசிரியன் மூலவாசிரியரின் குன்றாவிளக்கத்திற்குப் பொருள் காணுதல் கூடும்? அவ்வாறின்றி உரையாசிரியன் மூலநூலாசிரியரின் அறிவு மரத்தின் அடியைமட்டும் அல்லதோர் இலையைமட்டும் கண்டு காட்டும் குறைமதியனாய் இருப்பின் அவனினும் குறைமதியாளராகிய மாணவர்க்கு அறிவு கொளுத்துதல் எங்ஙன் இயல்வதாகும்?

மேலும் மூலநூலாசிரியர் தம் காலச் சூழலாலும் அற்றை மக்களின் உணர்வுப் பழக்கத்தாலும் அக்கால் தமக்குக் கிடைத்த நூற்களைத் தவிராது கற்றுநின்ற கரணியத்தாலும், தாம் எடுத்துக் கொண்ட நூற்பரப்பின் விரிவு கண்டஞ்சிச் சுருங்கிய ஓரிரு சொற்களால் குறிக்கும் ஒன்றின் பொருளை, அவர் விட்டுச்சென்ற ஓரிரு சொற் குறிப்புகளை மட்டும் கொண்டு, தம் அறிவுப்பரப்பால் உய்த்துணர்ந்து கூற வேண்டியது உரையாசிரியரின் குன்றாக் கடமையன்றோ? 'அற்றாரை'–(குறள்-506) என்ற விடத்து 'எஃது அற்றாரை' என்று முட்டுப் படாது, அம் மூலநூலாசிரியர் முன்னும் பின்னும் கூறியனவற்றையும் கூறுவனவற்றையும் அரிமா நோக்குப்போல் அறிந்து உரை காண்பதன்றோ உரையாசிரியரின் அறிவு நலத்திற்கோர் உரைகல்லாகும்? 'ஒழுக்க மற்றார்' (மணக்குடவர்) என்றும், சுற்ற மற்றார் (பரிமேல்) என்றும், பொருளும் கிளையும் கல்வியும் அற்றார் (பரிதி) என்றும், நண்பும் நயமும் அற்றார் (காலிங்கர்) என்றும் கூறுது, அவர் (நூலாசிரியர்) முன்பே அன்புடைமைக்கு முன் மக்கட்பேறு கூறியிருத்தலானும், அதன்பின் சுற்றந்தழால் கூறியிருத்தலானும்,

மகப்பேறும் உறவினரும் அற்றார் (பாவாணர்) என்று கூறுவதுடன், பின் "பிள்ளைகளைப் பெறுதவர்க்குப் பிறரிடத்து அன்புண்டாகாதென்பதும், உற்றார் உறவினரில்லாதவர்க்குப் பழிபளகு (பாவம்) பற்றிய அச்சமிராதென்பதும், பொதுவான உலக நம்பிக்கை. ஆதலால், அத் தகையோரை வினைக்கமர்த்தின், குடிகள் கெடுவதோடு பொறுப்பற்ற வினையால் அரசுங் கெடும் என்பதாம்" என்று விரிவுரை கூறி அமைவு

கூறுவதும் நோக்கின் பாவாணரின் அறிவுப் பரப்பும் உலகியல் தெரிவும் நன்கு புலப்படுமன்றோ?

இனி, திருக்குறளில் ஆங்காங்கே அற்றைத் தமிழக வரலாற்றுக் கொத்த செய்திகள் வருமிடத்து உரையாசிரியன் அவற்றினைத் தொகுத்தறிய மாட்டாது அக்குறட்பாவில் கூறப்பட்ட சொற்களுக்கு மட்டில் உரை கூறுவானாகில் அவ்வுரை வெறும் சொல்லுக்கு உரையாக நிற்குமேயன்றி நூலுக்கு உரையாகாதன்றோ?

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்" (தொல்-1316)

–என்ற நூற்பாவால் மூவேந்தரும் தலைமை குன்றாத தொல்காப்பியர் காலநிலை வேறு என்றும்,

பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பு மில்லது நாடு (குறள்-735)

–என்று வேளிருங் கோசருமான குறும்பரால் மூவேந்தரும் அலைக்கப் பட்ட திருக்குறள் காலநிலை வேறு என்றும் உய்த்துணராத உரையாசிரியர் எங்ஙன் திருக்குறளுக்கு உண்மையுரை கூறமுடியும்? பாவாணர் போன்ற வரலாறும் மொழியும் கற்றுணர்ந்த மெய்யுணர்வாளரே திருக்குறள் போன்றதொரு காலமும், வரலாறும் கடந்து நிற்கும் நூலுக்கு உரையெழுதல் சாலும் என்பது **திருக்குறள் தமிழ்மரபுரை**யால் நன்கு தெளிவாகின்றது. இவ்வாறன்றி வெறும் சொற்களுக்கு மட்டுமே உரை கூறுபவரை எங்ஙன் உரையாசிரியர் என்று கூற முடியும்? அவர்தம் மினும் அச்சொற்களுக்குரிய பொருள்களை அகரமுதலிகளும் நிகண்டு களுமே விரிவாகவும் விளக்கமாகவும் கூறிநிற்குமே!

இனி, ஓர் உரையாசிரியரின் பணி மூலநூலின் ஒவ்வொரு பாடல் வரிக்குமட்டும் உரையெழுதுவதோடு தீர்வதன்று. அப்பாடல்கள் யாக்கப்பட்ட நூலுட் கூறப்பட்டுள்ள மொத்த கருத்துகளையும், அவற்றினின்று போதரும் அக்கால அரசியல் பொருளியல் குமுகவியல் நிலைகளையும் அவையுள்ளிட்ட அக்கால மக்கள் அமைப்பையும் அவருள்ளிட்ட அந்நிலத்து வரலாற்றையும் அவற்றின் எழுச்சி வீழ்ச்சிகளையும் ஒருவாறு கணித்துச் செல்வதாலும் முற்றுப் பெறுவதாகும். இம்முறை பாவாணர்க்கு முந்திய பழைய அல்லது புதிய திருக்குறள் உரைகாரர் ஒருவராலும் கைக்கொள்ளப்படவில்லை. பாவாணரே இவற்றையும் உள்ளிட்ட முழுமை உரையாகத் தம் தமிழ் மரபுரையை ஆக்கியுள்ளார். அக்காலத் தமிழ் மரபுபற்றி அவ்வுரை யெழுதப்பட்ட கரணியத்தா

லேயே அவ்வுரைக்குத் திருக்குறள் தமிழ்மரபுரை என்று பொருத்தமும் திருத்தமும் தோன்றுவதொரு தலைப்பைக் கொடுத்துள்ளார். இத் தலைப்பே பிறருரையெல்லாம் தமிழ் மரபு தழுவாத உரையென்று கூறப் போதுமானதாக அமைந்துள்ளது.

இனி, பாவாணரும் ஒருசில விடங்களில் பரிமேலழகரையே தழுவி உரை கூறியிருந்தாலும், அவ்விடங்களெல்லாம் பரிமேலழகர் உரையினும் செப்பமும் நுட்பமும் திட்பமும் செறிந்து விளங்குவனவாகவே உள்ளமை உன்னத்தக்கது.

(எ-டு) அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (குறள்-401)

(பரிமேலழகர்) அரங்கு இன்றி வட்டு ஆடியற்று-அரங்கினை இழையாது வட்டாடினாற் போலும், நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல்-தான் நிரம்புதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் அவையின்கண் ஒன்றனைச் சொல்லுதல். (பாவாணர்) நிரம்பிய நூல் இன்றிக் கோட்டி கொளல்-அறிவு நிரம்புவதற்கு ஏதுவான நூல்களைக் கல்லாது ஒருவன் (அவையின்கண்) சொற்பொழிவாற்றத் தலைப்படுதல்; அரங்கு இன்றி வட்டு ஆடிய அற்று-அறைகள் வகுக்காமலே வட்டாட்டம் ஆடுவதை யொக்கும். (தொடரும்)



பாவலர். பெருஞ்சித்திரனாரின்
அரிய தமிழ் நூல்கள்

			உரு. காசு.
1.	பாவியக்கொத்து	விலை	2 — 50
2.	எண்சுவை எண்பது	,,	1 — 50
3.	புரட்சிப்பாவலர் பாரதிதாசன்	,,	0 — 50

அஞ்சற் செலவு தனி

கிடைக்குமிடம்:- தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டம்.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கித் தனித்தமிழ்ச் செய்தித்தாள் திட்டத்திற்கு உறுதிமொழி விடுத்தற்குரிய கால வரையறை ஏப்பிரல் 30 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுப் பணிக்குத் துணைபுரியும் இத்திட்டத்திற் பங்குகொள்வதிற் புறக் கணிப்பாய் இராமல், அன்பர்கள் உடனே உறுதிமொழிகளை விடுக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

அமைச்சர்.

கவனிக்க: இவ்விதழ் 32-ஆம் பக்கத் தொடர்ச்சியை 52-ஆம் பக்கம் காண்க.

தேவநேயப் பாவாணரின்
"திருக்குறள் தமிழ் மரபுரைச்"
சிறப்புப் பாயிரம்.

[பெருஞ்சித்திரன்]

1. பத்துரைக்கு மேலும் பரிமே லழகரோ
டொத்தவுரை நூறுசெய்தும் ஒன்றுமே-மெத்ததிரு
வள்ளுவனார் நூலுக்கு வாய்மை உரைசெய்தார்
தெள்ளுதமிழ்ப் பாவாணர் தேர்ந்து.

2. நுண்ணிய நூலறிவும் நுண்மாண் நுழைபுலமும்
திண்ணிய கேள்வியுந் தீர்தலால்-எண்ணிய
தெய்வத் திருக்குறட்குத் தேவநே யன்செய்நூல்
உய்யக் கிடைத்த வுரை.

3. ஆர்ந்த தமிழ்மொழியோ டாரியமும் ஆங்கிலமும்
ஏர்ந்த பிறமொழியும் ஏய்வுறவே-ஊர்ந்தமதித்
தேவநே யன்செய் தெளிந்த குறளுரையால்
காவனே ருற்றதெனக் காண்.

4. சொல்லும் பொருளுந் தொகவாய்ந்து தொல்வரலா
றெல்லும் பலவகையா லோர்ந்துணர்ந்து-வெல்லும்
படியுரைத்த பாவாணர் பாரித்த வாற்றற்
கடியுரைத்தல் யார்க்கும் அரிது.

5. இனம்பேணற் கென்றெழுந்த வின்குறட்குத் தந்தம்
மனம்போன வாறு மயங்கிப்-புனைந்துரைத்த
பான்மை தவிர்த்துநூற் பாங்குரைத்தார் பாவாணர்
மேன்மை பிறங்கிற்று மேல்.

6. நரிதூ லுறவரிமா நல்கிதென் றே யற்றைப்
பரிமே லழகர் பயந்துரைத்தார்; ஒற்றைப்
புரிமேல் கரிநடந்த பொய்யைப்பா வாணர்
எரிமே லெறிந்தா ரிகழ்ந்து.

7. வல்லார்ந்த செந்தமிழில் வாய்ந்த திருக்குறள்போல்
சொல்லார்ந்த மற்றவற்றில் சொல்லரிதாம்-சொல்லார்ந்த
செந்தமி ழுள்ளுஞ் செய்வரிதாம் பாவாணர்
முந்துரை செய்நூன் முறை.

8. செந்தமிழுஞ் செங்கதிரால்; சீர்சால் திருக்குறளும்
அந்தமிழால் வீசும் அணிமதியால்;-அந்தமதிக்
கெட்டிநடை யிட்டவறி வேற்றமே பாவாணர்
ஒட்டிநடை யிட்ட உரை.

9 செப்பா லடித்தவொரு காசுக்குச் செந்தமிழை
எப்பாலும் விற்கும் இழிஞரிடை-முப்பாலுக்
கொத்த மரபுரையொன் றேதினுர் பாவாணர்க்
கொத்த கடனென் றுணர்ந்து.

10. தேவநே யன்என்னுந் தேர்ந்தமதிப் பாவாணர்
தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை-மேவியபின்
மற்றோர் உரைசெயவும் மானுவரோ? மானுவரேல்
கற்றோர் நகைப்பர் கலித்து.

அறிவிப்பு

உலகத் தமிழ்க் கழகத் தலைவர் மொழிப் பேரறிஞர். திரு. பாவாணர்: உ. த. க. பொதுச்செயலாளர் ("தென்மொழி" ஆசிரியர்) பாவலர் திரு. பெருஞ்சித்திரனுர் ஆகியோரின் ஒளியுருவப்படங்கள் (Photos) பல்வேறு நிலைகளில் அழகிய தோற்றத்தில் எடுக்கப்பட்டு விற்பனைக்கு அணியமாய் உள்ளன.

8"×6" அளவுள்ளது-விலை உரு. 4/-

6"×4" அளவுள்ளது-விலை உரு. 2/-

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

திரு. மகிழ்நன், (நா. நித்தியானந்தன்) இ/எ2/274
கைலாசபுரம், திருச்சி-14.

துரைமாணிக்கத்தின் உரைமாணிக்கம்!

மொழிஞாயிறு. ஞா. தேவநேயப்பாவாணர் க. மு.

தமிழ் இற்றைக்கு ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முந்தித் தோன்றிய உலக முதற்றாய் மொழியாதலாலும், அது தோன்றிய குமரிக் கண்டம் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே இந்துமாவாரியில் மூழ்கிப் போனமையாலும், அக்கண்டத்தில் வழங்கிய முதலிரு கழக நூல்களும் ஆரியர் வந்தபின் அழிக்கப்பட்டொழிந்தமையாலும், இற்றைத் தமிழ் நூல்களுள் முந்தியனவான தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலையும் திருக்குறள் என்னும் இலக்கிய நூலையும், வரலாறு மொழிநூல், மாந்தனூல் (Anthropology) ஆகிய முந்நூலறிவுடையாரே செவ்வையாய் ஆய்ந்துணர முடியும். இற்றைத் தமிழ்ப் புலவர் சிலர் பண்டாரகர் (Dr.) என்னும் ஆங்கிலப்பட்டம் பெற்ற அளவிலேயே, தம்மை முற்றறிஞராக இறைவனொடொப்பக் கருதி இறப்ப மதித்து, அப்பட்டம் பெறாதாரை யெல்லாந் தம்மினுந் தாழ்ந்தவராக எண்ணத் தலைப்பட்டு விடுகின்றனர்.

தமிழ்நாட்டு அரசியலிலும் பல்கலைக்கழகங்களிலும், இன்று, ஆரியம் வேரூன்றித் தமிழைத் தாழ்த்தியிருப்பதால், மதிநுட்பம் பரந்த கல்வி என்னும் இரண்டொடு நடுநிலை, அஞ்சாமை, தன்னலமின்மை, மெய்யறியவா ஆகிய பண்புகளை உடையார் உண்மையான ஆராய்ச்சி நூல்களை இடுநூலாக (Thesis) விடுத்து ஆராய்ச்சிப்பட்டம் பெறக்கூடிய சூழ்நிலையில்லை. அதனாலேயே, தமிழின் தொன்மை முன்மை தாய்மை தலைமையாகிய பெருமைகளை எடுத்து விளக்கும் நூல்களையே இடுநூலாக விடுத்து, ஆராய்ச்சிப்பட்டம் பெறவேண்டுமென்னுங் குறிக்கோள் கொண்ட என்போன்றார், அப்பட்டம் பெறாதிருக்கின்றனர். இன்று பெறப்படும் பண்டாரகர்ப்பட்ட இடுநூல், ஆரியத்தை யுயர்த்திக் கூறுவதாகவோ அதை முற்றுந்தழுவாததாகவோ இருக்கவேண்டியிருப்பதால், இற்றைப் பண்டாரகர்ப்பட்டம் அதைப் பெற்றவர் சில நூற்பாக்களையோ செய்யுட்களையோ பிற செய்திகளையோ ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க அல்லது எழுத முடியும் என்னும் ஆற்றலையே பெரும்பாலுங் காட்டுவதாகும்.

மேலும், அரசியலிலும் பல்கலைக்கழகங்களிலும் அவற்றைச் சார்ந்த கல்லூரிகளிலும் பெரும்பதவி தாங்குவோரும், கட்சிச்சார்பான

புலவரும் பேராசிரியரும், அதிகாரிகட்கும் கட்சித்தலைவர்க்குங் கட்டுப் பட்டே யிருக்கவேண்டி யிருப்பதால், ஆராய்ச்சியாளர்க்கு இன்றியமையாத மேற் குறித்த அறுபண்புகளையும் அவரிடத்திற் காணமுடியாது. ஆதலால், மறைமலையடிகள் போன்றாரே என் நூல்களை மதிப்பிடத் தகுதியுள்ளவராவர். பிறரெல்லாம் அவற்றைப் படித்தற்கும் பாராட்டற்குமே யுரியர்.

இனி, மொழிநூல் துறையிற் குழந்தைப் பருவத்திலுள்ள புலவர் சிலர் என் முன்நின்று சொல்லாராய்ச்சிபற்றிக் கூறுவதும், என் கூற்றை மறுப்பதும், "தேவதூதருங் கால்வைக்க அஞ்சுமிடத்திற் குள் முழுமக்கள் புகுகின்றனர்." ("Fools enter where angels fear to tread."), "தான் அறியாதான் என்பதை அறியாதான் முட்டாள்" ("He who knows not that he knows not is a fool.") என்னும் ஆங்கிலப் பழமொழியையும் பொன்மொழியையுமே நினைவுறுத்துகின்றன. இவ்விருபதாம் நூற்றாண்டில் பனிமலை போலப் பரந்தும் நீண்டும் உயர்ந்தும் தலைசிறந்து விளங்கிய தமிழ்ப்புலவர் மறைமலையடிகள் ஒருவரே. அவர்களே, ஒரு தமிழ்ப்புலவர் ஒருகால் தம் தவறான சொல்லாராய்ச்சி யொன்றைக் கூறியபோது, அது பொருந்தாதென்றென மறுத்துரைக்க, அஃது என்னாராய்ச்சி யென்று அப்புலவர் பொய்த்தபின், "அங்ஙனமாயின் நான் அதை ஏற்றுக்கொள்கின்றேன்." என்று திருவாய்மலர்ந்தார்களாயின், அவர்கள் என்னை மொழிநூற்றுறையில் எத்துணை மதித்திருந்தார்களென்பதை அறிந்துகொள்க. ஓர் அடிப்பட்ட கதையை மாற்றிப் பாவினப் பனுவல் பாடிய துணையானே, ஒருவர் தம்மைக் கம்பரென்றும் கம்பரினும் மிஞ்சிய கொம்பரென்றும் மதித்துக்கொள்ளலாம். ஆயின், தாம் கல்லாத துறையில் ஆழந்தெரியாதிறங்கி யமிழ்ந்துபோவது புல்லறிவாண்மையின்பாற் பட்டதாம். மொழிநூல் என்பது ஒரு தனிப்பட்ட அறிவியல் என்பதையும், அதற்குப் பன்மொழி யிலக்கண அறிவும் சொற்றொகுதி யறிவும் வேண்டுமென்பதையும், மொழியாராய்ச்சி யில்லாதவர் சொல்லாராய்ச்சியில் இறங்குதல் கூடாதென்பதையும், இன்னும் பல தமிழ்ப் புலவர் அறிவதில்லை. இசை, நாடகம், மருத்துவம், கணியம், முதலியன எங்ஙனம் மொழியினின்று வேறுபட்டனவோ, அங்ஙனமே மொழிநூல் என்பதும் வேறுபட்டதாகும். ஒவ்வொரு துறையிலும் அததிற் பயின்றவரே அறிவுடையவராவர். "அறிவார் அறிவர்? அறிவார் அறிவர்." என்பது பழமொழி.

"வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது."

என்னும் தனிப்பாடலை நோக்குக.

இனி, செய்யுளியற்றுந் திறத்தை நோக்கினும், பாரதிதாசனுக்குப்பின் பெருஞ்சித்திரனும் முடியரசனுமே சிறந்தவராவர் என்பதை நடுநிலைத் திறனாய்வாளர் அறிவர்,

இனி, கருத்துவேறுபாட்டிற் கிடமான ஒரு பொருள்பற்றி ஒரு கூட்டத்தில் இறுதியிற் பேசுபவர் கூற்றே வலிமையுள்ளதெனப் புல்லறிவாளராற் கொள்ளப்படுகின்றது. சொற்பொழிவாளருள் இறுதியிற் பேசுவார்க்கு ஏனையோர்க்கில்லாத வாய்ப்புண்டு. ஆயின், அவைத் தலைவர்க்கோ முன்னும் பின்னும் இடையும் பன்முறை பேசி எவ்வெவர் கூற்றையும் மறுத்துரைக்கப் போதிய வாய்ப்புள்ளது. ஆயினும், அறிஞர் ஓர் உரையின் உறுதியை உண்மை பற்றியேயன்றி இறுதி நிகழ்ச்சிபற்றி ஒப்புக்கொள்ளார். ஓர் அறமன்றத்தில் தீர்ப்பாளர் கூற்றே இறுதியாயினும், வட்டமன்றத் தீர்ப்பு மாவட்டமன்றத் தீர்ப்பாலும், மாவட்ட மன்றத் தீர்ப்பு மாநில மன்றத் தீர்ப்பாலும், மாநிலமன்றத் தீர்ப்பு நடுவண் மன்றத் தீர்ப்பாலும், தள்ளப்படுதல் காண்க.

எத்தகைச் செய்தியாயினும், ஒருவர் இன்னொருவரை உண்மையாகப் பாராட்டுதற்கு நடுநிலை இன்றியமையாததாகும். அந்நடுநிலையோ தன்னலமும் பொறாமையுமுள்ள விடத்தமைவது குதிரைக் கொம்பே. ஒருவன் தன் மகளுக்கு மணமகனைத் தேடுமாறு அல்லது திட்டஞ் செய்யுமாறு, மணப்பருவ மகளுள்ள இன்னொருவனை அனுப்புதல் கூடாது. அனுப்பின், அனுப்பப்பட்டவன் தன் மகளை உயர்த்தியும் தன்னை அனுப்பினவன் மகளைத் தாழ்த்தியுமே பேசுவான். அங்ஙனமே ஒருவர் ஒரு நூற்கு வரைந்த உரையைப் பாராட்டற்கும், அந்நூற்கே உரைவரைந்த பிறரை அமர்த்துதல் கூடாது. அமர்த்தின் ஏதேனும் ஒரு குற்றம் அல்லது குறை கூறத்தான் முயல்வர். அண்மையிற் பறம்புக்குடியில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக முதலாட்டை விழாவில் இத்தகைய செய்தியே நிகழ்ந்தது. மறைமலையடிகள் இல்லாத காலத்தில் என் "திருக்குறள் தமிழ் மரபுரை"யை ஒருவரும் பாராட்டத் தேவையில்லை. உண்மைத் தமிழர் அனைவரும் விலைக்குவாங்கும் முறையிலேயே அஃது எழுதப்பட்டுள்ளது. அதைப் பிறர் பழித்தாலும் விற்பனை குன்றாது; பாராட்டினால் விற்பனை கூடி

விடாது. அஃது என் அரைநூற்றாண்டுக் கல்வியாராய்ச்சியின் பயனாக மொழிநூல், வரலாறு, மாந்தனூல் என்னும் முத்துறை நூலறிவு கொண்டு நடுநிலையாக இறைவனன்றி வேறெவர்க்கும் அஞ்சாது எழுதப்பெற்றது. பரிமேலழகருரையினும் விரிவாகவும் விளக்கமாக வும் உள்ளது. சிறப்பாகப் பழைய உரைகளின் ஆரியநஞ்சை அறவே நீக்கித் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் போற்றிக்காப்பது. அவ் வுரையைப் பாராட்டத் தாமரைத்திரு. வ. சுப்பையா(ப்பிள்ளை) அவர் களையே குறித்திருந்தேன். அவர்கள் உடல்நலக் குறைவால் வரவிய லாதுபோயிற்று. ஏனை மூவரை விழாக்குழுவாரே அமர்த்தினர். அஃது என்குற்றமன்று. அம்மூவரும் தத்தம இயல்பிற்கேற்பப் பேசினர். அதுவும் அவர் குற்றமன்று; அவரை அமர்த்தினவர் குற்றமே.

அன்று பெருஞ்சித்திரன் என்னும் துரைமாணிக்கம், மாணிக்கத் தையும் சிறிது உரைத்து மாசுபோக்கும் முறையில் இறுதியிற் பேசி யிராவிடின். ஆராய்ச்சியில்லாத இளைஞரும் பொதுமக்களும் நடுநிலை யறிஞர் வாயினின்று உண்மை தெரிந்து கொள்ளும்வரை, என் 'திருக்குறள் தமிழ் மரபு' உரையைச் சற்றுத் தாழ்வாகவே கருதியிருக் கலாம். ஆயின், அதன்பின்பும் பண்டாரகர் வ. சுப. மாணிக்கனார், பெருஞ்சித்திரன் வரைந்த பெருஞ்சித்திரத்தைக் கலைப்பதுபோன்றும். துரைமாணிக்கம் வீசிய பேரொளியை மறைப்பது போன்றும் வேண்டாத சில சொல்லித் தம் முன்னுரையின் சிறப்பைக் கெடுத்துக் கொண்டது மிகமிக வருந்தத் தக்கதாகும்.

நச்சினார்க்கினியர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், பரிமே லழகர் முதலிய பண்டையுரையாசிரியரின் உரைகளைப் பன்முறை படித்துணர்ந்து பயன்பெற்றபின், அவ்வுரைகளெல்லாம் தேவை யற்றவை என்று கூறுவது நன்றியறிவின்பாற்படாது; உண்மை நவிற்சியுமாகாது. அவ்வுரைகள் வேண்டாதன வென்பார் அவற் றைப் பாராதே தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்துப் பொரு ளுணர்ந்திருத்தல் வேண்டும்.

"பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே (1336)
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்"

என்று தொல்காப்பியங் கூறுவதால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே கூர்ங்கண்ணும் எஃகுச்செவியும் நுண்மாண் நுழைபுலமுங் கொண்ட குமரிநாட்டுத் தமிழ்மக்கட்கும் உரை வேண்டியிருந்ததென் பது புலனும். ஆதலால், உரைத்துணையின்றி மூலத்தையே படிப்ப வர், மூலநோயாளிகள் என்னுமளவு பலவிடத்தும் பொருளுணராது இடர்ப்படுவர் என்பது தேற்றம்.

இனி, அறிவையன்றிப் பட்டம், பதவி, செல்வம், கட்சிச்சார்பு முதலியவற்றை அளவையாகக் கொண்டு ஒரு புலவனையும் அவன் நூல்களையும் மதிப்பதும், அறியாமையின்பாற்பட்டதே யென்று அறிந்துகொள்க.

O

தி. பி. 2000 சிலை, கஉ (28-12-69) ஆம்நாள்

ஞாயிறன்று பறப்புக்குடி உ. த. க. மாநாட்டில்

திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள்

ஆற்றிய

சொற்பொழிவு

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய தலைவர் அவர்களே! பெருமைக்குரிய தமிழ்த்தலைவர் பாவாணர் அவர்களே! பர். இலக்குவனார் அவர்களே! பேராசிரியர் சொக்கப்பனார் அவர்களே! புலவர் குழந்தை அவர்களே! தமிழன்பர்களே! தாய்மார்களே!

உங்கள் எல்லாருக்கும் என்னுடைய தலைதாழ்ந்த வணக்கங்கள். இந்தச் சொற்பொழிவு இந்த மாநாட்டின் இறுதிச் சொற்பொழிவு. பல வகையான கருத்துகளை யிந்த இரண்டு நாட்களிலும் கேட்டிருப்பீர்கள். பல உங்களுக்கு உடன்பாடாக இருக்கும்; பல மறுப்புக்குரியனவாக இருக்கலாம்.

நான் சில செய்திகளை இன்றியமையாத நிலையிலே சொல்ல விரும்பினேன். நேரம் மிகக் கடந்துவிட்டது; அதனால் சொல்லவந்த செய்திகளை விடுத்து, சொல்லவேண்டிய சில செய்திகளைச் சொல்லி விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று இருக்கின்றேன்.

பாவேந்தர் பாரதிதாசனார், உங்களுக்குத் தெரிந்திருக்கும்; மிகவும் கண்டிப்பானவர்; அதாவது அவருடைய வீட்டில் அன்று; வெளியிலும் அன்று; தமிழ் என்ற நிலையிலே அவரைவிடக் கண்டிப்பான புலவர் ஒருவரை-ஓர் உள்ளத்தை நான் பார்த்ததில்லை. அவரிடத்திலே ஆறாண்டுகள் மிகவும் நெருங்கிப் பழகியவன் என்ற காரணத்தினாலே ஒரு சில உண்மையான செய்திகளை இங்கு நடைபெறுகின்ற இந்த விழாவையொட்டி வெளிப்படுத்த விரும்புகின்றேன். இஃது எனக்கு மட்டுந்தான் தெரிந்த செய்தி. இன்னொருவர் தெரிந்திருந்திருப்பார்; அவர் இப்பொழுதுமிருக்கிறார். அவர் (பாவேந்தர்) திருக்குறளுக்கு ஓர் உரை எழுதினார். அந்த உரை பிற்காலத்திலே குயிலில் வெளியிடப்பெற்றது. அந்தத் திருக்குறளுரை அச்சானது; பதினைந்து படிவங்கள் அச்சாயின; ஒரு படிவம் என்பது பதினாறு பக்கம்; இந்தப் பதினைந்து படிவங்கள் அச்சாகிக் கொண்டிருக்கின்ற பொழுது நான் புதுவையில் இருக்கின்றேன். உரை முழுவதும் எழுதி

விட்டார்; உரை இருக்கிறது. அப்படியே; யாரும் அழித்துவிடவில்லை, வெளிவரும். அவரிடத்திலே நான் மிக நெருங்கிப் பேசியவன்; பழகியவன்; கருத்துகளைப் பரிமாறிக் கொண்டவன்; அந்த உரை அச்சாகிக் கொண்டிருந்த தொடக்க நிலையிலே ஒருநாள் மாலையிலே அச்சகத்திற்குப் போனேன். அச்சாகிக் கொண்டிருந்த அந்த ஒரு படிவத்தை எடுத்துப் படித்தேன். ஒரு திருக்குறளின் உரை என் கண்ணிலே பட்டது. உடனே அச்சகப் பொறுப்பாளராக அப்பொழுது இருந்த சாமி-பழநியப்பன் என்கின்ற ஒருவர்-உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்; குன்றக்குடி அடிகளாரிடத்திலே செயலாளராக இருப்பவர்; இப்பொழுது இருக்கின்றாரோ என்னவோ, தெரியவில்லை-அன்று அங்கு இருந்தார். அந்த உரையைப் படித்தவுடனே அந்தத் தாளை அப்படியே மேசைமேலே வைத்துவிட்டேன்; வைத்துவிட்டு "ஒன்றும் புதியதாகக் காணோமே; பழைய செய்திகளைத்தானே இவரும் திருப்பிச் சொல்லியிருக்கிறார்" என்று சொன்னேன். இந்தக் கருத்தை வேறு யாரும் சொல்லிவிட்டு அங்கு இருந்துவிட முடியாது. உடனே சாமி-பழநியப்பன். 'என்னங்க ஐயா. அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எப்படி இருக்கிறது?" என்று கேட்டார். "இல்லை; பொதுவாகவே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைதான் சிறந்த உரை; அதற்கு விலக்கே கிடையாது. அவர் ஆரியச் சார்பான கருத்துகளைச் சிற்சில வாய்ப்பான இடங்களிலே வைத்துப் போய்விட்டார். மற்றபடி சிறந்த உரை அது. அந்தக் கருத்துகளை மட்டும் மறுக்க விரும்புகிறவர் 1330 குறள்களுக்கும் உரையெழுதிக் கொண்டிராமல், எந்தெந்த இடங்களிலே அவர் பரிமேலழகர் உரைக்கோ, அல்லது இதுவரை வந்த உரைகளுக்கோ மறுப்பாக உரையெழுத வேண்டுமோ. அல்லது எந்தெந்த இடங்களில் கருத்து மாறுபடுகின்றதோ அந்தந்த இடங்களை மட்டுமே விளக்கி, நூறு இடங்களானாலும் சரி, அல்லது இருநூறு குறட்பாக்களுக்கு மட்டுமானாலும் சரி, அவற்றிற்கு மட்டும் உரையெழுதினால் போதும். இதற்காக முழுநூலுக்கும் உரையெழுதிக் கொண்டிருக்க வேண்டியதில்லை; அதுவும் பாவேந்தர் பாரதிதாசனார் அந்த உரையை மிகவும் புதுமையாக எழுதிவிடவில்லை; ஓரளவு மெய்யறிவு உணர்வோடு சாங்கிய நூல்களின் எடுத்துக்காட்டோடு சில உரைகளை எழுதியிருக்கிறார்; இது தேவையில்லையே!" என்று சொன்னேன். சொல்லிவிட்டுப் போய்விட்டேன்; போய்விட்ட பின்னாலே, சாமி-பழநியப்பன் பாவேந்தரிடத்திலே இந்தச் செய்தியைப் போய்ச் சொல்லியிருக்கிறார். "துரை-மாணிக்கம் அங்கு வந்தார்; இந்த

உரையை எடுத்துப் பார்த்தார், இப்படிச் சொல்லிவிட்டுப் போனார்'' என்று சொல்லியிருக்கிறார். பாவேந்தர் சிறிது நேரம் அப்படியே மலைத்து நின்றாராம். பாவேந்தரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும். எவ்வளவு பெரிய கூட்டமானாலும் எத்தனைப் புலவர்களிருந்தாலும் தாம் நினைத்ததை, தமக்குச் சரியென்று பட்டதைத் துணிவோடு சொல்லுகின்ற ஒரு பெரிய மறவுணர்வு, துணிவான அந்த ஆற்றல் பாவேந்தர் ஒருவருக்குத்தான் இருந்தது. மற்றபடி பிறரெல்லாரும் வெளியே போய்ச் சொல்லுவார்கள், வேறு இடத்திலே போய்ச் சொல் வார்கள்; எழுதுவார்கள்; அங்கேயே சொல்லமாட்டார்கள், நேருக்கு நேர் நின்று. உடனே அமைதியாக இருந்து விட்டு ''இதை எதற்கு அவனிடத்திலே காட்டினாய்?' என்றார். ''இல்லை, அவரே, மேசை மேலிருந்தது; எடுத்துப் படித்தார்'' என்று அவர் சொல்லியிருக்கிறார். ''உம், சரி, வைச்சுக்கோ, அதை!''-அவ்வளவுதான். இதைப் பற்றி என்னிடத்திலே அவர் இருந்தவரை கேட்டதில்லை. அந்த நூல் அச்சாவதும் நின்றுபோய்விட்டது. பதினைந்து படிவங்களோடு முடிந்தது, என்று நினைவு. எதிர்கால உலகம்-தமிழினுடைய எதிர்கால உலகம் நேற்றுப்போல் இருக்காது என்பதற்கு இந்த எடுத்துக் காட்டை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். புலவர் குழந்தை அவர்களும் பேராசிரியர் இலக்குவனார் அவர்களும் இந்த மேடையில் உட்கார்ந்திருக்கிறார்கள்: அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்காலத் தமிழ் உள்ளங்கள் உண்மையை மட்டுந் தான் ஏற்றுக்கொள்ளும்; அவ்வளவு திண்மை வாய்ந்ததாக அமையும்; அதை அமைப்போம் என்று சொல்லி இந்தக் கருத்தைச்சொல்லு கிறேன்.

''யார் வேண்டுமானாலும் திருக்குறளுக்கு உரையெழுதி விடலாம்; நீங்களும் எழுதலாம்; அவரும் எழுதலாம்; பெருஞ்சித்திரனும் எழுதலாம்; எல்லாரும் எழுதலாம்'' என்றெல்லாம் சொன்னார்கள். மிகவும் வருத்தமாக இருந்தது எனக்கு, எதற்காக இதை எல்லாம் சொல்லு கிறார்கள் என்று. பாவாணரைப் பற்றி ஆளுக்கொரு படம் போட்டு வைத்துக்கொண்டு இருந்திருப்பீர்கள்; இருப்பீர்கள்; அவர்களும் ஒரு வேளை என்னென்னவோ கருதலாம். தலைவரவர்கள் மிகவும் செப்ப மான முறையிலே, அவர்களுக்கு என்னமுறையிலே பாவாணர் தென் படுகின்றாரோ அந்த நிலையிலே, அந்த அறிவு நுண்மையை மட்டும் எடுத்துக்கொண்டு, எந்த அளவு விளக்க வேண்டுமோ அந்த அள

-விற்கு மிகவும் தெளிவாகவும் அழகாகவும் விளக்கி அமைந்து விட்டார். ஆனால் அந்த அளவோடு பிறர் பேச்சுகள் நில்லாமல் அளவு மீறிப் போனதினாலே, என்னுடைய உணர்ச்சிகளை எல்லாம் கட்டுப் படுத்திக்கொண்டு ஒரு சில உண்மைகளை மட்டும் உங்களுக்கு விளக்க விரும்புகின்றேன்.

பாவாணர் உரை என்று ஒன்று இந்தத் தமிழகத்திலே முளைத்த பின், இனி ஓர் உரை வருமா என்பது மிகவும் ஐயப்பாட்டுக்குரியது மட்டுமன்று; உண்மையாகவே அப்படி ஓர் உரை வருமானால், அந்த உரை பாவாணரைவிட மேம்பட்ட அறிவுடைய ஒருவரால் எழுதப்பட வேண்டுமே தவிர, என்னாலோ, அல்லது இங்கிருக்கின்ற யாராலோ எழுதப்படக்கூடாது என்று எச்சரிக்கின்றேன். (கையொலி) பாவாணருடைய உரை எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டைக் கொடுத்துவிட்டு, இதுபற்றிய இந்தச் செய்தியை இதோடு நிறுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

ஒரு மருத்துவர் பண்டுவர் (டாக்டர்) இருக்கிறார். அவரிடத்திலே ஒருவன் காதுவலி என்று மருந்திற்காகப் போகிறான். உடனே அவர், காதிலே கொஞ்சம் மருந்தை விடுகிறார்; மருந்துவிட்டு, "இந்த வலி சரியாகப்போகும்; நீங்கள் போய்வாருங்கள்" என்று சொல்லுகிறார். மறுநாள் காதுவலி நன்றாகப் போகிறது. ஆனால் தொண்டையிலே வலியேற்படுகின்றது, அவனுக்கு. உடனே மீண்டும் அந்த மருத்துவரிடத்திலே போய், "ஐயா, காதுவலி என்று வந்தேன்; நீங்களும் அந்த மருந்தை எனக்குக் காதிலே ஊற்றினீர்கள்; காதுவலி போய்த் தொண்டை வலிக்கிறது; இதற்கொரு மருந்து கொடுங்கள்" என்று கேட்டான். அதற்கு அவர், "ஐயா, நான் காது மருத்துவம் மட்டுந்தான் பார்ப்பேன்; தொண்டை மருத்துவம் பார்க்கமாட்டேன்; அதற்குத் தொண்டை மருத்துவரைப் போய்ப் பாருங்கள்" என்று சொல்லிவிட்டார். மறுநாள் அந்தத் தொண்டை மருத்துவரிடம்போய் மருத்துவம் பார்த்துக்கொண்டான். தொண்டைக்கு மருந்தைப் போட்டு, ஒரு மருந்தை உள்ளுக்கும் கொடுத்தார். அடுத்த நாள் வயிற்றிலே வலி வந்துவிட்டது. உடனே மறுநாள் அந்த மருத்துவரிடம் போய் "நேற்று தொண்டையில் வலி நன்றாகிவிட்டது; இன்றைக்கு வயிற்றிலே வலி தோன்றியிருக்கிறது; இதற்கு மருந்து கொடுங்கள்" என்று கேட்டான். அப்போது அவர், "எனக்குத் தொண்டைக்கு மட்டும்தான் மருந்து கொடுக்கத் தெரியும்; வயிற்று வலிக்கு வேறு ஒருவரைப் பாருங்கள்" என்று சொன்னார்.

இப்போது இருக்கும் தமிழ்ப் புலவர்கள், பேராசிரியப் பெரு மக்கள் எல்லாரும் ஏதாவது ஓர் உறுப்பை மட்டுமே பார்த்து மருந் திடக்கூடிய அளவிற்கு ஆற்றல் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மொழி என்பது கருத்து, அறிவு இரண்டுக்கும் அடிப்படையானது. பெட்டியிலே இருக்கின்ற கருவூலம் போன்றது. அந்தக் காலத்திலே, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நூலில் எழுதிவைத்த கருத்து-ஒரு நூலாசிரியருடைய கருத்து இப்பொழுது உணரப்படுகிறது என்றால் அந்த நூலிலே சூடு இருக்கிறது; குளிர்ச்சி இருக்கிறது; உண்மை தெரிகிறது; அந்தச் சொல்லிலே அவருடைய உள்ளம் தெரிகிறது. அதை எவன் ஒருவன் கண்டு காட்டுகிறானோ அவன் உரையாசிரியன். அந்த உரையாசிரியன் எப்படிப் பட்டவனாக இருக்கவேண்டும்? அந்தச் சொல்லை உணர்ந்தவனாக இருக்கவேண் டும். சொல்லை, மொழியை, அந்தச் சொல் அடைந்துள்ள மாற்றத்தை, அந்தச் சொல் வரலாற்றை, அந்தச் சொல் வழங்கிய நிலத்தின் வர லாற்றை, அந்த நிலத்தில் மயங்கிக் கிடந்த பல தொகுதிகளின் மக்கள் வரலாற்றை, அந்தச் சொல் வழங்கிய காலத்தை, இவற்றை யெல்லாம் அறிந்தால்தான் அந்தச் சொல்லில் இன்ன பொருளை அவர் வைத்து எழுதியிருக்க முடியும் என்பதை ஒருவாறு கணிக்க முடியும். நம்முடைய தமிழாசிரியர்கள் சொல்லை அறிந்தார்களா? அல்லது வர லாற்றை உணர்ந்தார்களா? அல்லது நிலவரலாறு தெரிந்தார்களா? அல்லது இந்த மொழித் தொடர்புடைய மேனாட்டு மொழிகள் சிலவற் றைத் தெரிந்து இந்தக் கருத்து வேறெங்காவது பரவியிருக்கிறதா என்றெல்லாம் தெரிந்தார்களா? தெரிந்து எழுத விரும்புகிறார்களா? என்றால் அதுதான் இல்லை; "திருக்குறளுக்கு நாமும் ஓர் உரை எழுதி வைப்போமே! என்ன கெட்டுவிட்டது; அதுதான் யார் வேண்டுமானா லும் உரை எழுதலாமே!" என்று எண்ணி எழுதிய முறைதான் இத் தனை உரைகளைத் தமிழகத்திற்குப் படைத்துத் தந்திருக்கிறதே தவிர திருவள்ளுவர் ஒன்றும் புரியாத புதிர் அல்லர். யாருக்குமே விளங்காத வகையிலே ஒரு நூல் எழுதி, ஏராளமான உரைகள் எழுதிக் குவிக்கப் படவேண்டுமென்ற நோக்கத்தில் அவர் எழுதவில்லை. அன்று வழங் கிக்கொண்டிருந்த மொழிமரபையொட்டி, அங்கிருந்த மக்களின் நடை முறைப் பழக்கத்தையொட்டி, அங்குத் தெரிந்த பழங்கதைகளையும் பரவலான செய்திகளையும் ஒட்டி, அந்தக் காலத்து மக்களின் எதிர்ப்புணர்ச்சியைத் தெரிந்து, அன்றிருந்த தமிழகத்தினு டைய நிலையை யறிந்து, இந்த நூல் வெளிவந்தால் என்னென்ன

விளைவுகள் ஏற்படும் என்பதை உய்த்துணர்ந்து, இயல்பான தம்முடைய அடக்க வொடுக்கத்தினுலே, அந்த நூலை மிக அழகாக, எதிர் காலத்திலே எல்லாத் தமிழருடைய கைகளிலும் அது கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்திருக்கிறார். அப்படிச் செய்திருக்கிறாரென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு அவர் பெயர் தெரியாமலிருப்பது தான். அவர் பெயர் தெரிந்திருந்தால் இந்த நூல் இருந்திருக்காது.

"யார் இதைச் செய்தது?" "கருப்பண்ணசாமிக் கவுண்டர் மகன் குப்பண்ணசாமி செய்ததா?" "அப்படியா! எப்படியிருந்தான் அந்தப் பய்யன்! ஒன்றுமே தெரியாமல் இருந்த அவன் இத்தனை செய்யத் தெரிந்து கொண்டானு?" என்றெல்லாம் இப்பொழுது சொல்லக்கேட்கிறோம். ஆனால் அந்தக் காலத்திலே, சாதியுணர்வும், ஆரிய மோதல்களும் நிறைந்திருந்த காலத்திலே, வள்ளுவருடைய உண்மையான பெயர் தெரிந்திருந்தால், "இந்த ஆளா இதைச் செய்திருப்பான்! அட்டே! இவனை ஒழித்துக்கட்டு" என்று சொல்லித் தடுத்திருப்பார்கள். இதனுலே வள்ளுவர் தம்முடைய பெயரையும் ஊரையும் பெற்றோர் பெயரையும் வெளிப்படுத்தாமல், வெகு அழகாக எது தேவையோ அந்த நூலை மட்டுமே செய்து கொடுத்திருக்கிறார். உலகத்திலே வேறு எந்த நூலுமே இப்படி ஆசிரியர் பெயர் தெரியாத, வரலாறு தெரியாத நூலாக எழுதப்படவில்லை. அஃது அப்படியே இருக்கட்டும். அந்த நிலையிலே இருக்கின்ற ஒரு நூல் வழி, அன்றிருந்த நிலையை இன்றைக்கு நாம் தெரிந்து கொள்ள முடியும் என்றால், தொலை நோக்காடி வைத்தன்று! மொழிநூலறிவு இருக்கவேண்டும்; ஒரு சொல்லைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்; அந்தச் சொல் எந்தெந்தக் காலத்திலே எப்படியெப்படி மருவி வழங்கியிருக்கிறது என்று தெரிந்திருக்க வேண்டும்; அந்தச் சொல் வழங்கிய நிலப்பரப்பினுடைய எல்லை தெரிந்திருக்க வேண்டும்; அந்தச் சொல் மருவி மாறிவரும் நிலத்தின் எல்லை தெரிந்திருக்க வேண்டும்; அந்தச் சொல்லின் அற்றைய பொருள் தெரிந்திருக்க வேண்டும். "நாற்றம்" என்ற ஒரு சொல் இருக்கிறது. நாற்றம் என்ற சொல் இப்பொழுது சொல்லப்படுமானால் அது தீநாற்றத்தை மட்டும்தான் குறிக்கும். அதையே வள்ளுவர் காலத்தில் சொன்னால் அது மணத்தை மட்டுந்தான் குறிக்கும். இப்பொழுது தீநாற்றத்தைக் குறிக்கின்ற இந்தச் சொல்லை வைத்துக்கொண்டு, நாற்றம் என்ற சொல்லுக்குத் தீநாற்றம் என்று எழுதினால் எப்படிப் பிழையோ அப்படிப்பிழை திருக்குறளுக்கு எல்லாரும் விருப்பத்தினுலே உரையெழுது

வ்து. பாவேந்தர் எப்படிப்பட்ட நிலையிலிருந்தவர்; எப்படிப்பட்ட உணர்ச்சியிலிருந்தவர் என்பது உங்களுக்குத் தெரியும். அந்த நிலையைக் கண்டித்து "இவர் இப்படி எழுதியிருக்கவேண்டாமே!" என்று அவர் காதுபடுப்படிச் சொன்னவன் நான். எதற்கும் அஞ்சாதவன்! அதை அவர் விரும்பினர்; பாராட்டினர் அதே வழக்கு முறையை-எனக்கு என்னுடைய ஆசிரியராகிய பெருமைக்குரிய பாவாணரவர்கள்- அதே வழியைக் காட்டியிருக்கிறார். "யாருக்கும் அஞ்சாதே! உண்மையை எந்த இடத்திலுமே எடுத்துச் சொல்; எவர் முன்னிலையிலும் சொல்! உனக்கு உண்மையென்று படுவதைச் சொல்!" எனக்குச் சொல்லியிருக்கின்ற மந்திர மொழிகள் இவை! அதனாலே இதைச் சொல்லுகின்றேன். இந்த உரைநூல் முயற்சி அப்பொழுது தொடங்கி இப்பொழுது முடிவடைகிறது. இதற்குப்பின் எவராவது ஒருவர் திருக்குறளுக்கு உரையெழுத விரும்புவாரானால், அவர் உண்மையாகவே மிகவும் இரங்கத்தக்கவராகப் போய்விடுவார் என்பது என் கருத்து. இந்த வுரை மிகச் செப்பமாக எழுதப்பட்டிருக்கிற ஓர் உரை. இறைவனுடைய கொள்கை-இறைக் கொள்கை அதில் இருக்கிறது என்பதற்காக இப்பொழுது பெரியார் வருத்தப்படலாம்; பேரா சொக்கப்பனார் அவர்கள் வருத்தப்படலாம்; புலவர் குழந்தை அவர்கள் வருத்தப்படலாம்; பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் வருத்தப்படலாம்; நான் வருத்தப்படலாம்; நீங்களுங்கூட வருத்தப்படலாம். ஆனால்-வள்ளுவர் காலத்தில் அஃது இருந்தது; வள்ளுவருக்கும் உடன்பாடாக இருந்தது என்பதை நாம் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டுமே தவிர: இன்றைக்கு ஒரு பெரியார் பிறப்பார்; அவர் விரும்பும்படி நாம் ஒரு நூலை எழுதவேண்டும் என்று அன்று திருக்குறள் எழுந்துவிடவில்லை; திருவள்ளுவர் அதை எழுதிவிடவில்லை. புலவர் குழந்தை அவர்கள் நூலிலே "செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற அந்தக் குறளுக்கு உரையாக, "செயற்கரிய செய்வர் பெரியர்-நம்முடைய பெரியாரைப்போல" என்று உவமை காட்டிச் சொல்லியிருக்கின்றார். அதெல்லாம் விருப்பு வெறுப்புகளை உரை நூலிலே காட்டியதாகும். உரைநூல் எழுதுகிறவர் நூலாசிரியரைப்போலப் பொதுவான நோக்கு வைத்துச் செய்யவேண்டும். நான் அவரைத் தாக்கவேண்டும், அவரைப் பற்றித் தப்பான நோக்கத்துடன் சொல்ல வேண்டும், என்று சொல்லவில்லை.

பாவாணர் அவர்களின் அறிவு, இன்றைய நிலையிலே இங்கு பயன்படக்கூடிய அறிவு, நமக்கெல்லாம் தேவையான அறிவு; எதிர்

காலத்திலே எல்லாரும் வியந்து பாராட்டக்கூடிய அறிவு, அவ்வளவு சிறந்த நுண்மாண் நுழைபுலம்! மறைமலையடிகளாரே பாராட்டியிருக் கின்ற மிகச் சிறந்த பேராற்றல்! அந்தப் பேராற்றலிலே மூங்கி யெழுந்த ஓர் உணர்வு உண்மையான வரலாற்றைக்காண உதவியது. அப்படிப்பட்ட அந்த நிலையிலே யிருந்து எழுதப்பட்ட இந்த நூல் எப்படிப்பட்ட சிறப்புடையது என்பதை எல்லாரும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் ஒன்று உண்டு. அதனால் அதை அத்து டன் நிறுத்திக்கொண்டு இனி எல்லாரும் உரை எழுத விரும்ப வேண்டா; இந்த உரையோடு நாம் நிறுத்திக்கொண்டு இதை மிகச் சிறந்த உரையாகப் பேணிக் காக்கவேண்டும்; ஆனால்–அதற்காக அறிவைத் தடை செய்துகொள்ள வேண்டுமென்று நான் சொல்ல வில்லை; எல்லா நிலைகளையும் நீங்களே உணர்ந்தீர்களேயானால் அவர் எல்லா உறுப்புகளுக்கும் மருத்துவம் செய்கின்ற அந்த மருத்துவர் போல், காதுவலிக்கு மட்டுமன்று; கண்களுக்கு மட்டுமன்று; வயிற்று வலிக்கு மட்டுமன்று; எல்லா நோய்களுக்குமே மருத்துவம் செய்கின்ற மருத்துவர்போல்–மாந்த வரலாறு; மொழி வரலாறு, இன வரலாறு. நில வரலாறு, இலக்கிய வரலாறு, இலக்கண வரலாறு, இலக்கிய அறிவு, இலக்கண அறிவு, வரலாற்று அறிவு எல்லா நிலைகளையுமே உணர்ந்து சமய அறிவு. இத்தனையும் உள்ளடக்கிச் செய்ததனால் தான் உண்மைகள் சிலவற்றைத் துணிந்து சொல்ல வேண்டியிருக்கி றது. தங்களுக்குள் எல்லை வைத்துக்கொள்ள வில்லை; அதைத் தாண் டிப்போக வேண்டியிருக்கின்றது. அதனால் நீங்களெல்லாரும் நான் அவரை அவர் முன்னிலையிலேயே பாராட்டி அவர் மகிழும்படி சொல் லுகிறேனென்று எண்ண வேண்டா. அதே போல மற்ற பேராசிரியர் களும் அவர் முன்னே அவர்களைக் கொஞ்சமேனும் தாழ்த்திச் சொன் னதாகக் கருத வேண்டா. தமிழ் வளர்க்கவேண்டுமென்று உண்மை யாக நீங்கள் விரும்புவீர்களானால், உண்மையான தமிழுணர்ச்சிக்கு என்று மதிப்புக் கொடுக்கிறீர்களோ அன்றிலிருந்துதான் தமிழ் வளரத் தொடங்கும்; இல்லையானால் முகமன் பாராட்டுகின்ற அந்த நிலை என்றுவரை இருக்கின்றதோ, அன்றுவரை தமிழ் வீழ்ந்துதான் கிடக்க வேண்டும் என்பதை யாரும் மறந்துவிட வேண்டியதில்லை.

இனி, திருக்குறளைப் பற்றி இன்னோர் உண்மையைச் சொல்ல விரும்புகின்றேன். திருக்குறள் வேறு வடமொழி நூல்களிலிருந்து (இன்னும் ஐந்தே ஐந்து நிமையங்களில் முடித்து விடுகிறேன்)

நூலைப் பார்த்து எழுதப்பட்ட கருத்து-நூல் என்று எவ்வளவோ சொல்லப்பட்டிருக்கிறது. உங்களுக்கு ஒன்றே ஒன்றைமட்டும்-இதை நினைவிலே வைத்துக்கொள்ளுங்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன். அறத்துப்பால் மநுதர்மம், சுக்கிர நீதி இரண்டையும் பார்த்து எழுதியதாகச் சொல்லுகிறார்கள். பொருட்பால் அர்த்த சாத்திரம், காமாந்தகம் என்று ஒரு நூல்—அதாவது காமாந்தகர் என்று ஒரு முனிவர்; அவர் பொருட்பாலைப் பற்றி மிகச் சிறந்த நூல் ஒன்று வடமொழியிலே செய்திருக்கிறார்—காமத்துப்பால் வாத்சாயனர் எழுதிய காம சூத்திரம் இவற்றைப் பார்த்துச் செய்தார் என்று ஒரு கருத்து நிலவுகிறது.

அறத்துப்பால் எப்படி மநுதரும சாத்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட சரக்கு-கருத்து அன்று; திருவள்ளுவருடைய மூளையிலிருந்து நேராக இறக்கப்பட்ட கருத்து என்று காட்டப் பதினான்கு சான்றுகள் இருக்கின்றன. ஒன்று இரண்டல்ல—நன்றாகத் தெளிவான சான்றுகள் பதினான்கு. இந்தச் சான்றுகளை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக; அங்கங்கே சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லுகின்றேன். மாநாட்டிலே சரியானபடி நான் விளக்கவிருந்த நேரத்தை எடுத்துக்கொள்ள வில்லை; நேரம் எப்படியெப்படியோ போய்விட்டது; இருந்தாலும் இதைத் தெரிந்துகொண்டு போங்கள். திருக்குறளிலே புலால் மறுத்தல் ஓர் அதிகாரம். புலால் உண்ணாமையை மிக வன்மையாகச் சொல்லுகிறார்! அழுத்திச்சொல்லுகிறார். இதை அவர் அவ்வளவு வலியுறுத்திச் சொல்லுகிறார்; ஏன் தெரியுமா? மநு நூலிலே இது அழுத்தி வரவேற்கப்பட்டிருக்கிறது. அதைத்தான் அவர் மறுத்துச் சொல்லியிருக்கிறார். புலால் உண்ண வேண்டுமென்றே சொல்லியிருக்கின்றது, யாரை? பிராமணனை! புலால் உண்ணவில்லையானால் இருபத்தொரு முறை மாடாகப் பிறப்பான் என்று சொல்லியிருக்கிறது. என்ன புலாலைத் தெரியுமா? அந்த மாட்டு இறைச்சியை! தெளிவாக இருக்கிறது. எப்பொழுது தெரியுமா? அதுவும் தன்னுடைய முன்னோர்களில் யாராவது இறந்த பொழுது அவர்களுக்காகப் படைக்கப்படுகிற அந்த உணவிலே, மாட்டை அடித்து அறுத்து அந்த இறைச்சியை வைத்துப் படைத்து அந்த உணவோடு அந்த மாட்டிறைச்சியை அவன் உண்ணவில்லையானால் 21 பிறவிகளில் அவன் மாடாய்ப் பிறப்பான்—பிராமணன் என்று, இருக்கிறது. இதுபோன்ற இடங்கள் மிகுதி, மநுநூலிலே, இப்படிப்

பட்ட மநுநூலைப் பார்த்தா திருவள்ளுவர் திருக்குறளை எழுதியிருப்பார். அதை மறுத்து எழுதியிருக்கிறார் என்றுகூடச் சொல்லலாம். இன்னுஞ் சொன்னால் திருவள்ளுவர் காலத்தைவிட மநுநூலார் காலம் மிகவும் பிந்தியது. அதை முதலிலே நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். திருவள்ளுவர்காலம் மிகவும் பிந்தியது என்ற ஒருகருத்து வையாபுரி காலத்திலே இருந்தது. இப்போது அஃது அடியோடு வெட்டி வீழ்த்தப்பெற்ற கருத்தாகப் போய்விட்டது. இனி ஓர் எடுத்துக்காட்டுக்காகக்கூட நாம் அதைப் பயில வேண்டா என்று உங்களை வேண்டிக் கொள்கின்றேன். இரண்டு, கொல்லாமை என்கின்ற ஒரு நிலை. அந்தக் கொல்லாமை என்கின்ற நிலையை எதிர்த்துப்பேசியிருக்கிறது மநுநூலிலே. யாகம் செய்வார்களில்லையா? அந்த யாகத்திலே, கொல்கின்ற அந்தப் 'பாவம்' இருக்கின்றதே, அது 'பாவமே' ஆகாது என்று இருக்கின்றது. தாராளமாக வெட்டி வீழ்த்தலாம் என்று இருக்கிறது. மூன்றாவது, (திருக்குறள் என்று நினைத்தவுடனே நமக்கு நினைவுக்கு வருகின்ற கருத்துகள் இவை; மநு என்று நினைத்தவுடனே உங்களுக்கு நினைவுக்கு வரவேண்டிய கருத்துகள் இவை என்பதற்காக இவற்றைச் சொல்லுகிறேன். இதற்கும் அதற்கும் தொடர்பில்லை என்பதை நீங்கள் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லுகிறேன்) கள்ளுண்ணல்–கள்ளுண்ணலைப் பற்றித் திருக்குறளிலே கண்டிக்கப்பட்டிருக்கிறது. கள்ளுண்ணல் கூடவே கூடாது; அவன் (கள்ளுண்டவன்) மகனாகவே இருக்கமாட்டான் என்று சொல்லியிருக்கிறது; அதிலே (மநுநூலிலே) கள்ளுண்ணல் பாராட்டப்பட்டிருக்கிறது. கள்ளுண்பதற்காகவே அந்தக் கள்ளால் மயக்கம் தருகின்ற சுரா என்ற குடியை (பானத்தை)ப் பிழிகின்ற அந்தச் செடிகள் விளைகின்ற நிலங்களை நிறையப் பிராமணர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அந்தக் கள்ளுண்டுதான் அவர்கள் அந்த யாகத்தைத் தொடங்க வேண்டும் என்று எல்லாம் குறிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது வருணப் பாகுபாடு. அதாவது நிறவேற்றுமை. இந்த நிறவேற்றுமை தெளிவாக அதிலே குறிக்கப்பட்டிருக்கிறது. பிராமணன் இப்படி, வைசியன் இப்படி, சத்திரியன் இப்படி, சூத்திரன் இப்படி என்று எல்லாம் பாகுபாடு கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதை அடியோடு மறுத்துரைக்கிறார் திருவள்ளுவர், எத்தனையோ இடங்களிலே–அ தை யெ ல் லா ம் சொல்லிக்கொண்டே போனால் நிறைய நேரம் ஆகும். ஐந்தாவது, ஐயா பேராசிரியர்

(தொடர்ச்சி 49-ஆம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழ்க் கழகம்

தி. பி. 2000, சிலைத்திங்கள் ௧௨, ௧௩-ஆம் நாட்களில் (27-12-69, 28-12-69-காரி, ஞாயிறு)

முகவை மாவட்டப் பறம்புக்குடியில்

மொழிநூற் பேரறிஞர். திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் தலைமையில் நிகழ்ந்த

மாநில முதல் மாநாடு

நிகழ்ச்சிச் சுருக்கம்

(தென்மொழிப் பார்வையாளர்)

தமிழ்நலங் காத்தலே தனது தலையாய நோக்கமாகக் கொண்ட நம் உலகத் தமிழ்க் கழகத்தின் முதல் மாநாடு, கழக முதலாண்டு நிறைவு விழாவையும், திருவள்ளுவர் 2000 ஆண்டு விழாவையும், "திருக்குறள் தமிழ் மரபுரை" வெளியீட்டு விழாவையும் கொண்டாடும் நோக்கத்துடன், தி. பி. 2000, சிலை-௧௨, ௧௩-ஆம் நாட்களில் பறம்புக்குடி நகரில் ஆயிர வைசிய உயர்நிலைப் பள்ளியில் சிறப்புற நிகழ்ந்தது. மாநாட்டிற் கலந்து கொள்ளும் பொருட்டுத் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், புதுவை, கருநாடகம் ஆகிய வெளி மாநிலங்களிலிருந்தும் தமிழன்பர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர்.

காரி கிழமை (சிலை-12) அன்று காலை 9-மணியளவில், பறம்புக்குடித் தலைச்சாலையில் அமைந்த காந்தி படிமத்தின் அருகில், உலகத் தமிழ்க் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்களும் பொருளாளர் திரு. செங்கை. செந்தமிழ்க்கிழார் அவர்களும் பல்வேறு மாவட்ட அமைப்பாளர்களும், கிளைக்கழகங்களின் தலைவர், செயலர், பொருளர்களும், மற்றும் தொண்டர்களும் ஆர்வத்துடன் குழுமி நின்றனர். வனப்புற ஒப்பனை செய்யப்பெற்றுத் திருவள்ளுவர், மறைமலையடிகள் ஆகியோரின் திருவுருவப் படங்களைத் தாங்கிய தேர் முன்செல்ல, உலகத் தமிழ்க் கழகத் தலைவர் திரு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களும், சேலம் நகராண்மைக் கல்லூரியின் வரலாற்றுப் பேராசிரியர், திரு. தி. வை. சொக்கப்பனார் அவர்களும் வீற்றிருந்த இன்னியங்கி அதன்பின் போக, தமிழ்த் தொண்டர்கள் அனைவரும் இருவர் இருவராய் அணிவகுத்துச் சென்ற காட்சி, காண்போர்க்

குப் பேருவகை தருவதாய் அமைந்தது குறிப்பிடத் தக்கதாகும். ஊர் வலம் பறம்புக்குடி நகரின் பல்வேறு சாலைகளின் வழியாய்ச் சென்ற போது, பள்ளியாசிரியர்களும், மாணவர்களும், அரசு அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும் ஆங்காங்குக் குழுமி நின்று, இப்புதிய இயக் கத்தின் அன்பர் உலாவினை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஊர்வலத் திற் கலந்துகொண்ட ஆர்வலர்கள் "தனித்தமிழ் வாழ்க" "மறைமலை யடிகள் வாழ்க" "பாவேந்தர் வாழ்க" "பாவாணர் வாழ்க" "வள்ளு வர் வாழ்க!" "குறள்நெறி ஓங்குக!" "பெருஞ்சித்திரனார்வாழ்க" "தென்மொழி வாழ்க" "மொழியடிமை நீக்குவோம்; முத்தமிழைக் காப்போம்" "இன அடிமை நீக்குவோம்; எந்தமிழைக் காப்போம்" "உலகத் தமிழ்க் கழகம் உண்மைத் தமிழ்க் கழகம்" எனப் பலவாறு எழுப்பிய முழக்கங்கள் மருங்கு நின்றார் உள்ளங்களில் தமிழுணர்ச்சிக் கனலை எழுப்பும் வகையில் அமைந்திருந்தன. ஊர்வலத்தின் முடிவில், தமிழ் அன்பர்கள் அனைவரும் ஆயிர வைசிய உயர்நிலைப்பள்ளியின் மன்றத்திற் குழுமி நிற்க, தலைவர். திரு. பாவாணர் அவர்கள் தமிழ்க் கொடி யேற்றிய காலை, தொண்டர்கள் அனைவரும், "தனித்தமிழ் வாழ்க!" "தமிழ்நாடு தமிழருக்கே" என முழங்கினர்.

பின்னர், ஆயிர வைசிய உயர்நிலைப்பள்ளிக் கலையரங்கில் காலை 10-மணி யளவில் மாநாடு தொடங்கப்பெற்றது. எழில்பெறப் புனையப் பெற்ற மேடைமீது தலைவர். திரு. பாவாணர், பொதுச் செயலாளர் திரு. பெருஞ்சித்திரனார், பேராசிரியர். திரு. தி. வை. சொக்கப்பனார் பேராசிரியர். திரு, நிலவழகனார், ஆகியோர் வீற்றிருக்க, பறம்புக்குடிக் கிளைச்செயலர். திரு. சுதி. அறவாழி தமிழ் வணக்கம் பாடினார்.

உலகத் தமிழ்க் கழகத்தின் பொருளாளர். திரு. **செங்கை. செந் தமிழ்க்கிழார், க. இ., ப. இ.** அவர்கள் தலைவரை முன்மொழிந்துபேசிய போழ்து, திருச்சிராப்பள்ளியில் சென்ற ஆண்டில் கன்னி–உ0-ஆம் பக்க லில் தோற்றுவிக்கப்பெற்ற உலகத் தமிழ்க் கழகம் ஓராண்டுக் கால எல்லைக்குள் பெருவளர்ச்சியுற்று மாநாடு நிகழ்த்துதலைக் காணத் தாம் களிப்புமிக எய்துவதாகவும், மறைந்த பேராசிரியர் தவத்திரு. மறை மலையடிகளார் சைவத்தை ஒரு கண்ணாகவும் தமிழை மற்றொரு கண் ணாகவும் கருதினாரெனின், தலைவர் திரு. பாவாணர் அவர்கள், தமி ழையே தம் இரு கண்களாகக் கருதிப் போற்றி வருவதாகவும், பாவா ணர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுள், தமிழின் சிறப்பை உலகுக்கு உணர்த்தியதும்; திருவள்ளுவர், தொல்காப்பியர் ஆகியோரின் காலங் களை அறுதியிட்டுக் கூறியதும், தமிழர்கள் கிரேக்க நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பார் கூற்றை மறுத்துக் குமரிநாட்டிற் றோன்றிய

பழந்தமிழரே பின்னர்க் கிரேக்கம் முதலிய நாடுகளிற் சென்று குடியேறினர் என நிலைநாட்டியதும் ஆகிய மூன்றும் குறிப்பிடத்தக்கனவா மெனவும் எடுத்துக்கூறி, மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு திரு. பாவாணர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

வழிமொழிந்து உரையாற்றிய திரு. த. வளங்கோ (புதுவைமாநில அமைப்பாளர்) அவர்கள், திருச்சிராப்பள்ளி நண்பர்களின் அயரா முயற்சியொடு வித்திடப்பெற்ற உலகத் தமிழ்க் கழகம் தக்க வகையில் வளர்ச்சிபெற்று, முதல் மாநாடு நிகழ்த்துவதைக் கண்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும், புதுவை வடவரின் பாசறையாக இருந்து வருவதாகவும், துணையாளுநரும்(Lieutenant governor)தலைமைச் செயலாளரும் (Chief Secretary) வடவரடிவருடிகளாய் இருப்பதாகவும், வடவர்கள் மிகுதியாக உறைகின்ற அரவிந்தர் பாழி (ஆசிரமம்) அனைத்து வகை ஊழல்களுக்கும் கேடுகளுக்கும் இருப்பிடமாய் உள்ளதாகவும், எனவே அக்கொடுமையினை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் புதுவை மாநில உலகத் தமிழ்க் கழகம் திட்டமிட்டிருப்பதாகவும், இவ்வாறே தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் எங்கெங்கே வடவரின் வல்லாண்மை நிலவுகிறதோ, அங்கெல்லாம் உலகத் தமிழ்க் கழகத் தொண்டர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று தாம் விரும்புவதாகவும், அதற்குத் தேவையான முடிவுகளை இம் மாநாட்டில் நிறைவேற்றித் தக்க வகையில் செயலாற்றுவது கழகத்தின் கடமையென்று தாம் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

தலைவரை வழிமொழிந்து பேசிய திரு, தி. கு. அன்பரசன் (சென்னை மாவட்ட உ. த. க. அமைப்பாளர்) அவர்கள், தமிழர் நலத்துக்கு இக்கால் முழுமூச்சோடு தொண்டாற்றுவோர் பெரியார் ஈ. வே. இ. ரா. அவர்களும், மொழிப் பேரறிஞர் பாவாணர் அவர்களும் ஆவர் என்றும், மொழித்துறையில் இருவர்க்கும் கருத்து வேறுபாடு இருப்பினும் குமுகாய, அரசியல், பொருளியல் துறைகளில் கருத்தொற்றுமை உண்டென்றும், பாவாணர் கொள்கைகளை வீடுவீடாகத் தெருத்தெருவாகப் பரப்புதல் வேண்டும் என்றும், தமிழ்மொழி நலமொன்றே தம் நலமாகக்கொண்டு கடந்த பல்லாண்டுகளாகத்தொண்டு புரிந்து வரும் பாவாணர் அவர்களை மாநாட்டுத் தலைமை ஏற்க வழிமொழிவதில் தாம் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்வதாகவும் கூறினர்.

வரவேற்புரை ஆற்றிய திரு. மு. தமிழ்க்குடிமகன் க, மு.(முகவை மாவட்ட உ. த. க. அமைப்பாளர்) அவர்கள், தாம் பாவாணரிடம் படிக்காவிட்டாலும், பாவாணரை நன்கு படித்தவர் என்றும், அதுமட்டுமன்றி, அவரை விடாது பிடித்தவர் என்றும், தமிழகத்தில் தமிழ் அறிஞர்கள் நான்கு சாரார் உள்ளனர் என்றும், முதற் பிரிவினர்

தமிழை வாழவைத்துத் தங்கள் வாழ்வை இழப்பவர்கள்; இரண்டாம் பிரிவினர் தமிழை வாழ்வித்துத் தாங்களும் வாழ்வு பெறுபவர்கள்; மூன்றும் பிரிவினர் தமிழால் வாழ்ந்துகொண்டே தமிழைப் பற்றிக் கவலைப்படாதவர்கள்; நான்காம் பிரிவினர் தமிழால் வாழ்ந்து தமிழை ஒழிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்கள் என்றும், இவர்களில் பிற்கூறிய இருசாராரை ஒழிக்க முற்பட்டால் அன்றி, முற்கூறிய இருசாராரைத் தமிழகம் அறிதல் இயலாதென்றும், இந்நாற் பிரிவினரில் முதற் பிரிவினருள் வைத்து எண்ணத்தக்க திரு. பாவாணர் அவர்கள் தமிழ்நலங்காக்கும் மாநாட்டுக்குத் தலைமை தாங்குவது பெரிதும் மகிழ்ச்சி தருவதாகும் என்றும். அவர்களை அன்புடன் வரவேற்றுத் தலைமை தாங்க வேண்டுதலில் தம் உள்ளம் கழிபேருவகை எய்துகின்றது என்றும் மொழிந்தார்.

பின்னர், உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளரும் தென்மொழி ஆசிரியரும் ஆகிய பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள், கழக ஆண்டறிக்கை படித்த போழ்து, கழகத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைக்குறிப்பிட்டு, கழகம் தொடங்கி ஓராண்டுக்குப்பின் அதன் வளர்ச்சி ஓரளவு மனநிறைவு தரும் வகையில் அமைந்துள்ளது என்றும், எனவே பொருளியலிலும், மற்றும் ஆக்க வேலைகளிலும் தக்க முன்னேற்றம் காணும் வகையில் கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் அமைதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய உ. த. க. தலைவர், மொழியியற் பேராசிரியர் திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்கள் தமது முன்னுரையில் ஆங்கிலர் ஆட்சியால் இந்தியர் அரசியற் றுறையில் முன்னேற்றம் அடைந்தனர்; இந்தியரின் உரிமைப் போராட்டம் நடத்திய பேராயக் கட்சியைத் தோற்றுவித்தவர் ஒ. ஏ. ஃயூம் என்னும் ஆங்கிலேயரே என்றும்; அவர்கள் வருகையால் இந்தியரின் வாழ்க்கை உயர்வுபெற்றது என்றும்; அவர்கள் வருவதற்கு முன்பு ஆரியச் சார்புக் கொள்கைகளே நாடெங்கிலும் பரவியிருந்தன என்றும்; மக்கள் அனைவரும் நான்முகன் படைப்பே என்று ஆரியப் பார்ப்பனர்கள் தவறுன கருத்தினை இந்திய மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்தனர் என்றும்; தாங்கள் நான்முகனின் திருமுகத்திலிருந்து தோன்றியதால், இறை வழிபாடும் மறையோதுதலுமே தங்கள் பணிகளாம் எனக்கூறி ஏனைய சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய மூன்று வகுப்பினரும் உடலால் உழைத்து வாழ்க்கை நடத்துதல் வேண்டும் என வரையறை செய்தனர் என்றும்; தொடக்கத்தில் பேராயக் கட்சியிற் பெரும்பாலோர் ஆரியப் பார்ப்பனர்களாகவும், அவர்களின் சார்புடையவர்களாகவும் இருந்ததால் வெள்ளைக்காரன் அயல்நாட்டான், இந்தியாவின் பொருள்

வளத்தைச் சுரண்டிவிட்டான் என்று, அரசியல் வேற்றுமை யடிப்படையில் தவறான கருத்தைப் பரப்பினர் என்றும்; நாட்டுப்பற்றை வற்புறுத்திக் காந்தியடிகள் போராட்டம் நடத்தியதைக் கண்டு, ஆங்கிலர் இந்தியர்க்கு உரிமை வழங்கித் தம்நாடு சென்றனர் என்றும்; பேராயக் கட்சியினர் செய்ததெல்லாம், சற்றுப் பிந்திச்செய்ய விருந்த ஆங்கில அரசை முந்திச் செல்லும்படி செய்ததேயாகும் என்றும்; பேராயக் கட்சியால் நாட்டிற்கு விளைந்த சில நன்மைகளும் உண்டெனினும், மொழிப்பற்றின்மை அவர்களிடத்திலுள்ள குறிப்பிடத் தக்க குறைபாடு என்றும்; "வணக்கம்" என்றால் வெறுப்புக் கொள்வதையும், சோறு என்பதற்கு மாறாகச் "சாதம்" என்று கூறுவதையும் எடுத்துக்காட்டாகச் சொல்லலாம் என்றும்; பேராயக் கட்சியினர் தமிழர்களின் தாழ்வுணர்ச்சியை நீக்குவதற்கு முன்பே ஆங்கிலர் இத்துறையில் கருத்துச் செலுத்தித் தக்க பணிபுரிந்தனர் என்றும் கூறினார்கள். அவர் மேலும் மலையாவில் நிகழ்ந்த முதல் உலகத் தமிழ் மாநாடு தமிழ் நாட்டில் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்றும்; மாநாட்டு வரவேற்புக் குழுவினர் சேதுப்பிள்ளை வழியினரைப் பங்குகொள்ளச் செய்து, மறைமலையடிகளின் வழியினரை மாநாட்டிற்கு அழைக்காமல் விலக்கிவிட்டனர் என்றும்; தமிழ்ச் சார்பாக நடக்கும் மாநாட்டிற்குத் தமிழ் நாட்டிலிருந்து எல்லாவகைக் குழுவினரையும் அழைத்திருத்தல் வேண்டும் என்றும்; அடுத்துச் சென்னையில் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டிலும், அரசியற்றுறையிற் சிறந்தவராயினும், மொழித் துறையில் தொடக்கநிலை யறிவேகொண்ட அமெரிக்கரும் செக்கோசுலேவாக்கியரும் ஆகிய மொழியாராய்ச்சியாளரையும், மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தப்புந்தவறுமாக மொழியாராய்ச்சி செய்யும் பேராசிரியர்களையும், பிறரையும் பங்குபெறச் செய்து, மெய்ம்மைத் தமிழாராய்ச்சியாளர்களை அழைக்காது விலக்கினர் என்றும்; திரு. ஆதிநாராயணன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மொழியியற்றுறைப் பேராசிரியர்கள் ஆரியத்தை அடிப்படையாக வைத்துத் தமிழாராய்ச்சி செய்ததால், தவறான பல முடிபுகளைக் கொண்டுள்ளனர் என்றும்; அவர்கள் புதிதாகக் கண்ட வண்ணனை மொழியியற்படி, தமிழ் பலவகைப்படும் எனக்கூறி, அவையாவன நாட்டுத் தமிழ், வட்டாரத் தமிழ், கூட்டத்தமிழ் எனக் காட்டி, இம்மூவகைத் தமிழையும் வைத்து மொழியாராய்ச்சி செய்கின்றனர் என்றும்;

"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடாமொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன"

(தொல். எழுத்து–மொழிமரபு–சக)

எனத் தொல்காப்பியர் மகர-னகரப் போலியைக் குறித்துக் கூறிய நூற்பாவைத் தவறுகப் புரிந்துகொண்டு, தான் என்பது ஒருமையை யும் தாம் என்பது பன்மையையும் குறித்தல்போல, முகன் என்பது ஒருமையையும் முகம் என்பது பன்மையையும், கடன்-ஒருமையையும் கடம் பன்மையையும் குறிக்குமென்றும் மொழிமரபு அறியாது கூறி வருகின்றனர் என்றும்; ஆரியத்திற்குத் தமிழே முதல்மொழி யென்றும், இவ்வுண்மையைத் தமிழர் இப்போது உணர்ந்து வருகின்றனர் என் றும், மறைமலையடிகள் காலத்தைவிட இக்கால் மொழியாராய்ச்சி சிறந்து வளர்ந்துள்ளது என்றும்; அடிகளார் இன்று நம்மிடையே இருந் திருப்பின் பெரிதும் மகிழ்வார் என்றும்; மொழியாராய்ச்சி யின்மை யால் தொல்காப்பியர் கூடத் தம்நூலில் பல தவறுகள் செய்துள்ளார் என்றும், உலகியல், அறிவியல் ஆகியவற்றை அறிதற்கு ஆங்கிலத்தை யும், பிறதுறைகளில் அறிவுபெறத் தமிழையும் பயின்றால் போதும் என் றும்; பேராயக்கட்சியின் ஆட்சி நீங்கிடத்தமிழர் (தி.மு.க.) ஆட்சிவந்த பிறகும் தமிழின் நிலை இரங்குதற்குரியதாகவே உள்ளது என்றும், **அரசு போக்குவரத்து** எனத் தமிழைப் பிழைபட எழுதியும், **திருவாட்டி** என்னும் சொல்லைக் கையாளாமல், **திருமதி** என்ற சொல்லைத் திருவா ளர் என்ற ஆண்பாற் பெயர்க்கேற்ற பெண்பாற் பெயராக ஏற்றுக் கொண்டும், இன்னும் இவைபோன்ற பலவழிகளிலும் அர சினரே தமிழ் வளர்ச்சிக்கு இடையூருக உள்ளனர் என்றும், எனவே தமிழைக்காக்கும் பொறுப்பை அரசை நம்பி ஒப்படைப்பதில் பயனில்லை என்றும், தனித் தமிழ்த் தாளிகைகள் தேவை யென்றும், **தென்மொழி** ஆசிரியர் பெருஞ்சித்திரனுர் அமைக்க விருக்கும் செய்தித்தாள் திட்டத் தில் தமிழர் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என்றும், விளங்க வுரைத்தார்.

அடுத்துத் "**தமிழ்மரபு**" என்னும் பொருள்பற்றிப் பேசிய **புலவர். திரு. இறைக்குருவனுர்** (மதுரை வெற்றித் தனிப்பயிற்சிக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்) அவர்கள், தமிழர்க்கு எல்லாவகையிலும் ஒரு வகை மரபு உண்டென்றும், "குட்டு(மறைபொருள்) வெளியாயிற்று" "**கம்பி நீட்டினுன்**" (ஓடிவிட்டான்) என்னும் தொடர்களின் பொருளை மரபின் அடிப்படையில் தமிழர் மட்டுமே அறிதல் இயலும் என்றும், இது மொழிமரபு ஆகுமென்றும், மறைந்து தாக்குதல் சேர்ந்து தாக்கு தல் போன்றவற்றைத் தவிர்த்தலே தமிழர் குமுகாய மரபு என்றும், உண்ணுநோன்புப்போராட்டம் தமிழர் சமய மரபுப்படி தவறேயாகும் என்றும், அஃது அறநெறிக்குப் புறம்பானதென்றும், காலம், திணை மயங்காமற் செய்யுள் இயற்றலே இலக்கிய மரபு ஆகும் என்றும், "வசந்தமுல்லை போலே வந்து"; "காலையில் மலரும் முல்லை" "குயில்

கூவ மயிலாட" என்னும் பாடல்கள் இலக்கிய மரபுக்கு மாறுபட்டன வாம் என்றும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் குறளில் 'பெய்யெனப் பெய்யும் மழை' என்றது வெறும் இலக்கிய மரபே யென்றும், தமிழர்கள் பலவகையிலும் தம்மரபினைப் போற்றிப் பின்பற்றல் வேண்டும் என்றும் கூறித் தம் உரையை முடித்தார்.

பின்னர், "தமிழ்வளர்ச்சியில் மகளிர் பங்கு" என்னும் தலைப்பில் திருவாட்டி தாமரை செல்லத்துரை அம்மையார் (தேவகோட்டை உ. த. க. கிளைச் செயலர்) உரையாற்றினார். அவர், தமிழ்க் கழகங்களில் முன்பு மகளிரும் பங்குகொண்டனர் என்றும், ஔவையார், காக்கை பாடினியார், குறமகள் இளவெயினி போன்றோர் இக்கூற்றுக்குச் சான்றுவர் என்றும், "மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்" என்ற பிசிராந்தையார் பாட்டிலிருந்து பழங்காலப் பெண்டிர் புலமை முற்றப்பெற்று விளங்கினரென அறியலாம் என்றும், தனித்தமிழ் வளர்ப்பதில் மகளிர்க்கு உள்ள பங்கு சிறுவர்களுக்கு மொழிப் பயிற்சி தருங்கால் தனித்தமிழ்ச் சொற்களைப் பயிற்றலே யென்றும், ஆங்கிலச் சொற்களைக் கையாளவேண்டிய தேவை ஏற்படின் முழுவதும் ஆங்கிலத்திலேயே தம் கருத்தைக் கூறிவிடலாம் என்றும், தம் பிள்ளைகட்கு ரமேஷ், மகேஷ், சுரேஷ் என்பன போன்ற பிறமொழிப் பெயர்கள் சூட்டுவதைத் தமிழ்த் தாய்மார் தவிர்த்தல் வேண்டும் என்றும், ஆங்காங்குச் "சிறுவர் மன்றம்" நிறுவித் தமிழ்ச்சிட்டு போன்ற தனித் தமிழ்த் தாளிகைகளைப் பயிலச் சிறுவர்க்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்,

அடுத்து திருவள்ளுவரும் மன்பதையும் என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றிய திரு. நிலவழகனார் (காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித்தலைமைத்தமிழ்ப்பேராசிரியர்) அவர்கள், திருவள்ளுவர் திருக்குறளை இயற்றிய நோக்கம் மன்பதை முன்னேற்றமே யென்றும்; எனவே, மதச் சார்பற்ற வகையில் அமைந்த திருக்குறள் விவிலியத்தினும், குரானினும் சிறந்ததாகும் என்றும்; குறள் கூறும் அறநெறி மனுநூல், பகவற்கீதை கூறும் அறம்போலாது எல்லார்க்கும் பொதுவாய் அமைந்தது என்றும்;

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே"

என்ற தொல்காப்பிய நூற்பாவிற் கூறிய, உயர்நிலையிற் சேர்க்கத் தகாத மாக்களுக்கும் உரிய பாக்கள் குறளில் அமைந்துள்ளன என்றும்;

"பொறுத்தல் இறப்பினை யென்றும், அதனை
மறத்தல் அதனினும் நன்று"

என்ற குறளில் "இறப்பு" எனக் குறிப்பிடப்பட்டது இத்தகைய மாக்கள் செய்யும் பிழையே என்றும்; அவர்மாட்டுக்கொண்ட இரக்கத்தால் அதனைப் பொறுத்தலும் மறத்தலும் வேண்டுமெனக் கூறிய வாற்றான் அம் மாக்களிடத்து வள்ளுவர் கொண்ட அருள்நோக்கு நன்கு புலனாகிறது என்றும், எளியோரிடத்து இரக்கம் காட்டுதல் வேண்டும் என்பதனாலேயே,

"சாதலின் இன்னாத தில்லை; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என வள்ளுவர் கூறினார் என்றும்; அரசன் தன்னால் ஆளப்படும் மக்களிடத்து அருளுடையவனாய், அவர்களது மனம் புண்பட்டுக் கண்ணீர் சிந்தாதவண்ணம் ஆட்சி நடத்துதல் வேண்டும் என்னும் நோக்கம் கொண்டே,

"அல்லற்பட் டாற்றா(து) அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என வள்ளுவர் கூறினார் என்றும்; அஃறிணை யுயிர்கள் மாட்டும் அன்பு காட்டுதலை வற்புறுத்த விரும்பிய வள்ளுவர் புலாலுண்ணலையும் அதன் பொருட்டு உயிர்க்கொலை செய்தலையும் தவிர்க்குமாறு அறிவுடையோர்க்கும் தம் நூலில் அறவுரை கூறியுள்ளார் என்றும், ஊன் உண்டலால் உடல் வளம்பெறும் என்பார்க்கு மறுமொழி கூறுவார் போன்று,

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி(து) ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என வியப்புடன் வினவுகின்றார் என்றும், தீய எண்ணம், பொறாமை, பேராவல் முதலிய குற்றம் உடையவர்களைப் பொதுப்படக் கண்டிக்கிறார் என்றும்; ஏனைய அறநூலாசிரியர்கள் பெண்களை இழித்தும் பழித்தும் கூறியிருப்ப, வள்ளுவரோ மன்பதையின் ஒரு கூறாகிய பெண்ணினத்தை உயர்வுபடுத்தும் வகையில்,

"இல்லதென் இல்லவள் மாண்பானால்?"-எனவும்
"மனைத்தக்க மாண்புடையாள்"-எனவும்

(தொடர்ச்சி - 52 - ம் பக்கம்)

மாநாட்டுப் பொருளாளர்,
சுதி அறவாழி.
தமிழ்வணக்கம் பாடுகிறார்.

கழகப் பொருளாளர்
திரு. செங்கை. செந்தமிழ்க்கிழார்
தலைவரை முன்மொழிந்து பேசுகிறார்.

வரவேற்புக்குழுத் தலைவர்
திரு. மு. தமிழ்க்குடிமகனார்
வரவேற்புரை நிகழ்த்துகிறார்.





வரவேற்புக்குழுத் தலைவர்
மாநாட்டுத்தலைவர் திரு. பாவாணர்க்கு
மாலை சூட்டுகிறார்.

மாநாட்டுத் தலைவர்
மொழிப்பேரறிஞர் திரு. பாவாணர்
அவர்கள்
முன்னுரை நிகழ்த்துகிறார்கள்.



அன்பர் கூட்டம் நிரம்பி வழிந்த
மாநாட்டு அரங்கின் ஒருபகுதி.



பொதுச்செயலாளர்
பாவலர். திரு. பெருஞ்சித்திரனார்
ஆண்டறிக்கை படிக்கிறார்.

துணைச்செயலாளர்
புலவர். திரு. இறைக்குருவனார்
'தமிழ்மரபு' பற்றிப் பேசுகிறார்.



பேராசிரியர். திரு. சொக்கப்பனார்
'திருக்குறள் தீட்டும் தமிழன் சித்திரம்'
என்பதுபற்றிச் சொற்பொழிவு
ஆற்றுகிறார்.

திரு. திருக்குறள் பெருமாள்
பாவேந்தரின் 'சத்திமுத்தப் புலவர்கதை'
நடித்துக் காட்டுகிருர்.





பட்டிமன்றத் தலைவர்
தவத்திரு. குன்றக்குடி அடிகளாரின்
விரிவுரை.

பாவலர். திரு. பெருஞ்சித்திரனுர்
பாட்டரங்கத் தலைமையுரை
நிகழ்த்துகிருர்.

பாழ்செய்யும் அரவிந்தர் பாழி (ஆசிரமம்)!

த, வளங்கோ
(புதுவை மாநிலத் தலைவர், உ. த. கழகம்.)

புதுவை மற்றெல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ளது போலவே தமிழரின் இந்நாள் அடிமைத் தன்மையை முற்றிலும் உலகுக்கு எடுத்துக்காட்டும் வண்ணம் வடவரையும், பார்ப்பனரையும் தலைமேல் வைத்துத் தவிக்கும் தகுதி (!)யையும் பெற்றுள்ளது. முதுநாள் தொட்டே தமிழரின் புறப்பகையான வடவரும், அகப்பகையான பார்ப்பனரும், சொல்லொணுத் துயரில் தமிழையும், தமிழரையும் ஆழ்த்தும் வண்ணம் அரும்பாடுபட்டு வந்திருப்பது தமிழக வரலாறு அறிந்தார்க்குத் தெளிந்த உண்மையாகும். ஆனால் அரசியல் துறையில் தமிழர் ஓரளவு இக்கால் விழிப்புற்று விட்டனர். பொருளியல் மற்றும் குமுகாயத் துறைகளில் முன்னேறவும் முடியாமல் தடுமாறுகின்றனர்.

தமிழ்நாடு, புதுவை இரண்டு மாநிலங்களையும் இன்று ஒரே கட்சிதான் ஆளுகின்றது. ஆனாலும் புதுவையில் அக்கட்சிக்குள்ள கடமைகள் மிகுதி!

புதுவை மாநிலம் பாவேந்தரை ஈந்த நிலம்; பாரதியாரைப் புரந்த மண்; கணக்கற்ற இந்திய விடுதலை மறவர்களுக்கு அடைக்கலம் அளித்த இடம்; இம்மண்ணில் ஆங்கிலரின் சட்டப் பிடிகட்குத் தப்பி வந்தவருள் திருமான் அரவிந்தரும் ஒருவர். அவர் இங்கு நிறுவிய பாழி (ஆசிரமம்) உலகுக்கு ஒற்றுமை எண்ணத்தையும், நல்லுணர்வையும், உழைப்பின் தேவையையும், மகிழ்வின் அமைதியையும் காட்டும் கண்ணாடியாக விளங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தொடக்கக் காலத்தே ஓகம் (யோகம்), இருக்கை (ஆசனம்) முதலான வழிமுறைகளில் இறைவனுடன் நெருக்கமுறப் போவதாக அரவிந்தர் பாழி அறிவித்தது. புதுவை வாழ் மக்களுக்கு இப்பாழியின் நோக்கங்கள் தெளிவாகவேயில்லை யென்றாலும், விருந்தோம்பும் கொடைமட்டத்தாலும் தந்நல நோக்கர்தம் கரவாலும் இப்பாழியை இங்கு நிறுவ ஒருப்பட்டனர். இப்பாழியின் கட்டிடங்கள் பலவற்றைச் செருமானிய, ஆங்கிலேய, பிரஞ்சுப் பொறியியல் வல்லுநர்கள் நுட்பமான

வழிகளையும், சுருங்கைகளையும் வைத்து (புதிர்க் கட்டிடங்களாகக்) கட்டினர். இவற்றுள் வடநாட்டுப் பெரும் பணக்காரர்களில் ஓய்வு தேடி வருவாரின் குடும்பங்களும், தொழில், வாணிகம் புரிய இடம் தேடி வருபவரின் ஆட்களும், மேனாட்டு வழிப் போக்கரில் பலரும் வந்து சிறுகச் சிறுக நிறைந்தனர். அரவிந்தரின் மறைவுக்குப் பின்னர், "அன்னை" என்று பாழியர் அழைக்கும் பிரஞ்சு மூதாட்டி ஒருவரின் தலைமையின் கீழ் பாழி நடைபெற்று வருகின்றது.

மேலோட்டமாகப் பார்ப்பவருக்கு இந்தப் பாழி புதிய உலகம் போன்றும், ஆண்டுறையும் மாந்தர் நிரம்பக் கற்ற நல்லறிவாளர் என்றும் தோன்றும்; ஆனால் இக்கட்டுரையாளரைப் போல் பலவகையிலும் அவர்களுடன் பழகிப் பார்த்து, பல இடங்களைக் கண்டுணர்ந்து தெளிந்தவர்க்குப் பாழியின் இன்றைய நிலை தெள்ளிதின் விளங்கும்.

ஆங்காங்கு, சிங்கப்பூர், ஈழம் போன்ற நாடுகளில் நிகழ்வதைப் போன்று, பெருமளவில் கள்ளக் கடத்தற்காரர் இந்தப் பாழிக்கு வருகின்றனர். வெறிநர் (பீட்டில்சு), திரிநர் (ஜிப்பிகள்) போன்ற போலிப் புனைவுகள் செய்துகொண்டு அன்றுடம் வெற்றுடம்போடும், துவருடை பூண்டும், குறும்புகள் செய்தும், வெளிநாடுகளிலிருந்து இங்குவந்து தங்கி இப்பாழியருடன் உறவு பூண்டவர் மிக அதிகம். கலை, நாகரிகம் காண வருகின்ற சாக்கில் கடத்தல் வேலைகள் மலிந்து உள்ளன என்பதைப் பாழியரையன்றிப் பிறர் அறியார்

புதுவையில் பாழியருக்குச் சொந்தமான நிலபுலங்களும், வளமனைகளும், தோட்டம் துரவுகளும், ஆலைகளும், தொழிற்சாலைகளும் கடைகளும், இல்லங்களும், மிகவும் ஏராளம். சுருங்கச் சொன்னால் புதுவை மாநிலப் பரப்பளவில் ஏறத்தாழ ஐந்தில் ஒருபங்கினை இவர்களுடைய உடைமையாக்கிக் கொண்டுள்ளனர்; பொருளியலில் செம்பாதியை முடக்கிக் கொண்டுள்ளனர். இவர்களுக்கெனத் தனி நீச்சல் குளங்கள், விளையாடும் திடல்கள், 3 மருத்துவமனைகள், பத்துப் பள்ளிக்கூடங்கள், ஒரு சித்த மருத்துவக் கல்லூரி, பல்கலைக் கழகம், திரைப்பட அரங்குகள், நிறைய வல்லியங்கிகள் (Jeeps), மூடியங்கிகள் (Vans), சரக்குந்துகள் (Lorries), உந்துகள் (Buses), பிறபிற வண்டிகள், மற்றும் கன்னெய் நிலையம், காய்கறித் தோட்டங்கள். எல்லாம் உள்ளன. இவர்கள் புழங்குவது எப்போதும் கற்றைப் புது உருபாத் தாள்களுடனும், நாணயங்களுடனுமே. ஆறு முழுத்

தெருக்கள் புதுவையில் இவர்களுக்குச் சொந்தம்: பிறன் ஓராயிரம் உருபாவுக்கு வாங்கத் தயங்கும் நிலத்தைப் பாழியான் மூவாயிரம் வரை தந்து வாங்குகின்றான். (அண்மையில் பாழியர் மேற்கொண்டு நிலமோ, மனையோ வாங்குதல் சட்டப்படி தடை செய்யப்பட்டது; ஆயினும், புதிதுபுதிதாக இங்கு வந்து தங்கி வாணிகம் செய்யும் வடவரைத் தங்கள் பாழியின் கமுக்க உறுப்பினராக ஆக்கிக்கொண்டு அவர்தம் பெயரால் நிலங்களும், வீடுகளும் வாங்கப்பட்ட வண்ண மாகவே யுள்ளன.)

சீருடை என்னும் பெயரால் அரைக்காற் (1/8) சட்டை அணிந்து, ஆண்களும் பெண்களுமாக நன்றாகத் தின்று கொழுத்து, விளையாடவும், பாழியைச் சேர்ந்த நிறுவனங்களில் பணிகள்புரியவும் செய்கின்றனர். ஒழுக்கக் கேடுகள் மிக மலிந்து இருந்த போதிலும், நடுவணரசினரின் முழுப்பரிவும், துணையும் இவர்கள்பால் உள்ளதால், இவர்களைப் பற்றிப் பேசவோ, எழுதவோ, எழுதியதைப் பதிப்பிக் கவோ புதுவை வாழ்நர் அஞ்சுகின்றனர். புதுவைப் பூங்காவும், கடற்கரையும் இவர்தம் கேளிக்கைக் களமாக விளங்குகின்றன.

இவர்கள் வைத்துள்ள பல்கலைக் கழகத்தில், (அரசின் இசைவு பெற்றதா என்பதும் தெரியவில்லை), பொறியியல், ஆராய்ச்சியியல், மற்றும் பல்வேறு பட்டப் படிப்புகளும் கற்பிக்கப்படுகின்றன; தேறி யவர்க்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. பொருத்துநர் (Fitter) துறைக்கே தகுதியற்ற ஒருவனைப் பொறியியல் வல்லுநன் என்று சான்றளித்து, பாழியில் அலுவல் பார்க்கும் பட்டம் பெற்ற புதுவையாளன் ஒருவனை நீக்கி, அந்தப் பதவியில் அவனை அமர்த்து கின்றனர். புகுமுக வகுப்பளவுகூட கல்லாத ஒருவனை முதுகலை தேறியதாகச் சான்றளிக்கின்றனர். இப்படிப்பட்ட ஏமாற்று வேலைகள் நிரம்ப நடைபெறுகின்றன. இவர்களின் இப் பல்கலைக் கழகத்தால், அரைகுறை யறிவுடைய வடவர்க்கு வாழ்வளிக்கப் பெற்று தமிழர் மேலும் வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாக நேர்கின்றது. இப் பல்கலைக் கழகத்தில் நம்மனோரை அண்டவும் விடுவதில்லை.

பாழியைச் சேர்ந்த தொழிற்சாலைகளிலும், பணிமனைகளிலும், அங்காடிகளிலும் பணிபுரியும் தமிழர்க்கு அரைச்சம்பளம் தந்து இரட்டை வேலை வாங்குகின்றனர். தொழிலாளர் துறை தொழிலா ளர்க்கு அறம் வழங்க இயலாதபடி, எல்லாத் துறைகளிலும் தக்க ஆட்கள் வழியாக வாயடைப்பு முறைமையாகச் செய்யப்பட்டு விடு

கின்றது. புதுவை அரசினர் அலுவலில் பெரும்படியான பெரும் பதவிகள் யாவும் பார்ப்பனர்க்கே வழிமுறைப் பட்டயமாக இருப்ப தால் எளிதில் அவர் துணை அந்த ஆரிய வடவர்க்குக் கிட்டுகின்றது. புதுவைப் பொதுவுடைமைத் தலைவர் திருமான் சுப்பையா (இக்கால் அமைச்சர்), தி. மு. க. தலைவர் திருமான் செ. முத்து (இக்கால் சட்ட மன்ற உறுப்பினர்) போன்ற பொதுத் தொண்டர்கள் அரும்பாடு பட்ட பின்பும் செம்மையாக அரசுக் கோட்டைக்குள் மற்றொரு குட்டி அரசாக இந்தப் பாழியின் வழியாக வடவரின் வல்லாண்மையே புதுவையில் வெற்றி பெற்று வருகின்றது.

உலகெங்கிலுமிருந்து மக்கள் வந்து பாழியில் தங்குகின்றனர் என்பது ஓரளவுக்கு உண்மை யென்றாலும், பாழியை மேலாண்மை செய்வதும், நடத்துவதும் 'இந்தி' யாரே! சிறு அளவில் வங்காளிய ரும் பெருமளவில் குசராத்தியரும் கூடித் தென்னகத்தின் அனைத்து வாணிகங்களுக்கும் சந்தைக் களமாகப் புதுவையைத் தேர்ந்தெடுத்து இப்பாழியை அமைத்துள்ளனர். இப்பாழியில் ஒவ்வொரு மாநிலத்தை யும் சேர்ந்த அமைச்சர்கள் (அவர்கள் எக்கட்சியரேயாயினும்) எவ் வாறுகிலும் தொடர்பு வைத்துள்ளனர். பணத்திற்கும், பெண்ணிற் கும் மயங்காத அமைச்சர் இக்கால் யாருளர்! மிகப் பெரும் 'நேரு' தொடங்கி 'சுப்பிரமணியன்' அடங்க அனைவரும் இப்பாழியின் தொடர் பாளர்களே! "இப்பாழி அறத்தை வளர்க்கின்றது; அன்பைப்போற்று கின்றது; ஒழுக்கத்தைக் காக்கின்றது" என்றெல்லாம் உலகை நம்ப வைத்துக்கொண்டு, தமிழர் பண்பை, கலையை, நாட்டைப் புழுதிக் களமாக்குகின்றது; பொருளியல் சுரண்டலை மிகுக்கின்றது; தமிழ ரைத் தம் நாட்டிலேயே அடிமைகளாக்கி வைத்திருக்கின்றது.

ஆண்டு தோறும் எட்டு முறை 'அன்னை'யின் 'அருட்பார்வை' (தரிசனம்) மக்கட்கு அருளப்படுகின்றது. ஒவ்வொரு முறையும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வட மாநிலங்களிலிருந்து ஏராளமான மக்கள் வருகின்றனர்; நிகழ்ச்சி முடிந்தவுடன் மூன் றில் ஒரு பகுதியினர் புதுவையிலேயே தங்கி விடுகின்றனர்; அவர் கட்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காகப் பாழியின் பல துறைகளில் அலுவல் பார்க்கும் சிறு சம்பளக்காரத் தமிழர்கள் வேலைகளிலிருந்து நீக்கப்பட்டு விடுகின்றனர். என்ன முயன்றும் எவர்க்கும் அறம் மட் டிலும் கிட்டுவதே யில்லை.

'ஆரவில்' என்னும் பெயரில் 200 கோடி உருபாவைச் சில குறுக் கங்கள் (ஏக்கர்) கொண்ட மண்ணில் கொட்டிப் புதிய 'உலகநகர்'

அமைக்கப் பாழியர் ஏற்பாடு செய்துவருகின்றனர். அவர்களின் இச் செயலுக்கு உலகநாடுகள் ஒன்றிப்புக் கழகமும்; பல மேனாடுகளும் பெருந்தொகை தருவது ஒன்றே இவர்களின் ஊடுருவல் திறனையும், அதனால் வெளி நாட்டவர்க்கு உள்ள ஊதியத்தையும் காட்டுவதாக வுள்ளது. திருமான் பாலகிருட்டிணன் என்ற தமிழகச்சட்டமன்றத் தி.மு. க. உறுப்பினர் அரும்பாடுபட்டுப் பார்த்தும் இயலாமல் புதுவை யும். தமிழகமும் ஆரவில் நகருக்கு நிலத்தை வழங்கின; இச்செயலைத் தமிழரின் கால்வழியினர் என்றும் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். 200 கோடி உருபாவிற்குத் தமிழகத்தையே விற்கும் செயலாகும் இஃது என்பதை அறிவினர் அறிக!

இந்த உலக நகர் அமைக்கப் பெறுமானல், புதுவையில் குடி யேறப் போகின்ற வெளிநாட்டவர்க்குக் கூலிகளாகப் புதுவை மக்கள் அமைவர் என்பது வெளிப்படை! குடியிருக்கும் வீடுகளையும், பயிர் செய்யும் நிலங்களையும், செய்யும் தொழில்களையும் ஆரிய வடவரின் கையில் கொடுத்து என்றென்றும் மீளா வழி வழி அடிமைகளாகத் தமிழர் குமுகாயம் இருத்தல் நன்று? இன்றுவரை இந்த இழிவைத் துடைத்திட எந்த அரசியற் கட்சியும் முன் வரவில்லை என்றால் தமிழ கத்தின் போகூழை என்னென்பது!

புதுவையில் உள்ள சவகர்லால்நேரு மருத்துவக் கல்லூரி (சிப் மர்)யில் சேர இந்தியத்துணைக்கண்டம் முழுவதிலுமிருந்து விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. ஆயின் தெரிந்தெடுக்கப்படுவோரிலேயோ பெரும்பான்மையோர் பாழியின் உள்ளுறைநர்களே. எல்லா மாநில மக்களும் இப்பாழியில் இருப்பதால் அந்தந்த மாநிலத்திற்கான விழுக் காட்டு ஒதுக்கீட்டை இவர்களே பெறுகின்றனர்.

ஒற்றர் மடமாகவும், குற்றக் கிடங்காகவும், பணம்பறி கொள் கைக் கூடமாகவும்; பொருளியல் சுரண்டலாளரின் அடைக்கலப் புக லிடமாகவும், பார்ப்பனப் பேய்களின் இரண்டன்மைக்கான திருவிட மாகவும், தமிழர்தம் புதைகுழியாகவும் உள்ள இந்த அரவிந்தர் பாழியைப் புதுவையினின்று அகற்றுவதற்குப் புதுவைமாநில உல கத்தமிழ்க் கழகம் கடுமையாகப் போராடவிருக்கின்றது. ஆளும் திரா விடர் முன்னேற்றக் கழகத்தாரும் நம்முடன் ஒத்துழைத்து வெற் றிக்கு வழி வகுப்பார்கள் என நம்புகின்றோம். இப் போராட்டம் குறித்து வேறு விளக்கம் வேண்டுவோர் இக் கட்டுரையாளருக்கு எழுதி விளக்கம் பெறுமாறு வேண்டப்படுகின்றனர்.

"கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!"

—பாவேந்தர் பாரதிதாசனர்.

பழமொழியின் பொருளும் வரையறையும்

பேராசிரியர். வ. பெருமாள், க. மு., ஆ. ப.

பழமொழியின் பொருள்: பழமொழி என்னும் சொல்லிற்கு இரு வகையில் பொருள் கொள்ளலாம். பழமொழியைப் பழமை மொழி எனப் பிரித்துப் பண்புத்தொகையாகக் கொண்டு பழமையான மொழி எனப் பொருள் கொள்ளலாம். பழமை, முதுமை, தொன்மை ஆகியவை ஒரு பொருட் பன்மொழி. நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் பழமொழி முதுசொல் என்றும் முதுமொழி என்றும் குறிக்கப்பட்டிருக்கின்றது. (பழமை–முதுமை; மொழி -சொல். பழமொழி–முதுசொல்)

'பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்.'

(தொல்காப்பியம், பொருளதிகாரம்: செய்யுளியல்: 79)

பழமொழியின் தொன்மை கருதி, ஏறத்தாழக் கி. மு. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தொல்காப்பியரே அதை முது சொல் என்று குறிப்பிட்டிருப்பது பழமொழியின் தொன்மையை நன்கு உறுதிப் படுத்துகின்றது. 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகரும் பழமொழியைப் 'பழஞ்சொல்' என்று திருவெம்பாவையில் குறிப்பிட் டிருப்பது ஈண்டு கருதற்குரியது.

'உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்'

(திருவெம்பாவை–19.)

பழமொழியின் தொன்மையை உணர்ந்தே ஆங்கிலேயரும் அதனை முதுமொழி (Old Sayings) என்று வழங்குகின்றனர்.

பழமொழிக்கு மற்றுமொரு வகையிலும் பொருள் கொள்ளலாம். காய் கனியும்போது பழமாக மாறுகின்றது. உண்பதற்குத் தகுதி யாகவும் சுவையாகவும் அமைவது பழம். அத்தகைய பழம் போன்ற மொழியாக விளங்குவது பழமொழி. முத்துப்பல் (முத்துபோன்ற பல்)

மதிமுகம் (மதி போன்ற முகம்) தேன் மொழி (தேன் போன்ற மொழி) முதலியவற்றை உவமைத் தொகையாகக் கருதுவதைப் போலப் பழமொழி என்பதைப் பழம் போன்ற மொழி என்று உவமைத் தொகையாகக் கொண்டு பொருள் கொள்ளலாம். முதிர்ந்த பட்டறிவைக் குறிக்கப் பழுத்த அறிவு என்றும், முதியவரைக் குறிக்கப் பழுத்த பழம் என்றும் குறிப்பிடுகின்றோம். எனவே பழம் என்னும் சொல் நாம் உண்கின்ற கனியைக் குறிப்பதுடன் அணியியற் பொருளில் (Figurative sense) அமைந்த முதிர்ச்சியையும், குறிப்பாக அறிவு முதிர்ச்சியையும் குறிக்கின்றது. எனவே, பழமொழி என்பதற்கு முதறிவிலிருந்து தோன்றிய மொழி என்றும் பொருள் கொள்ளலாம்.

பழமொழியிலுள்ள மொழி என்னும் சொல் ஈண்டு ஆழ்ந்து நோக்கத்தக்கது. சொல்லப்படுவது சொல், பேசப்படுவது பேச்சு, பாடப்படுவது பாட்டு என்று பொருள் கொள்வது போன்று மொழியப்படுவது மொழி. பழமொழி பண்டைக்காலத்திலிருந்து வாயினால் மொழியப்பட்டு வந்ததே தவிர ஏட்டில் எழுதப்படவில்லை. ஏட்டில் எழுதப்பட்டு வந்திருக்குமாயின் பழமொழி என்று பெயர் பெற்றதற்கு மாறாகப் பழம் எழுத்து (Old Writing) என்று பெயர் பெற்றிருக்கும். பழமொழி நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலத்திலிருந்து மக்கள்வாயில் பயின்று வழங்கி வாழ்ந்துகொண்டு வருகின்றது என்பதைப் பழமொழியிலுள்ள மொழி நன்கு உறுதிப்படுத்துகின்றது. தொல்காப்பியரும் பழமொழியைக் குறிப்பிடும்போது முதுசொல் என்றும் முதுமொழி என்றும் குறிப்பிட்டாரே தவிர மூதெழுத்து என்று குறிப்பிட்டார் அல்லர். மொழி என்பது பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் சேர்த்தே குறிப்பதாக இருந்தாலும், மொழியியல் ஆராய்ச்சியாளர் கருத்துப்படி அது பேச்சுமொழியைத்தான் குறிக்கும். எனவே, பழமொழி, பழஞ்சொல், முதுசொல், முதுமொழி ஆகிய நான்கு தமிழ்ச் சொற்கள், ஆங்கில மொழியில் காணப்படும் தொன் மொழி (Old sayings), மொழியியல் ஆராய்ச்சியாளர் மொழிக்குக் கொள்கின்ற பொருள் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு ஆராய்ந்தால் பழமொழி தொன்மையான வாய்மொழி இலக்கியம் என்பதை நன்கு அறியலாம். சுருங்கக் கூறுமிடத்துப் பழமொழி காலத்தால் பழமையானது; பயனால் பழம் போன்றது; வாயினால்மொழிவது. இம் முப்பொருளையும் உள்ளடக்கிக் கொண்டு விளங்குகின்றது பழமொழி.

பழமொழி இலக்கணமும் வரையறையும்:

தொல்காப்பியர் பழமொழிக்கு மிகச் செம்மையான இலக்கணமும் வரையறையும் வகுத்துள்ளார். நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய நான்கு இலக்கணமும் வாய்க்கப்பெற்று ஒரு குறிப்பிட்ட பொருளைக் காரணத்துடன் உணர்த்தவல்லது பழமொழி என்பது, தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த இலக்கணமும் வரையறையுமாகும்.

நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்
எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப.

(தொல்காப்பியம்: பொருளதிகாரம்: செய்யுளியல்: 489)

பழமொழி மக்கள் எல்லாரும் நன்கு அறிந்த பருப்பொருளை மட்டும் உரைத்தால் போதாது. நுட்பமான பொருளையும் உணர்த்தவேண்டும் என்பதற்காக நுண்மை வேண்டும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டார். உரைக்க வேண்டிய பொருளைத் தலையைச் சுற்றிக்கொண்டு மூக்கைத் தொடுவது போலச் சுற்றி வளைத்துக் கொண்டு சொல்லாமல் நேரடியாகச் சுருக்கமாக உணர்த்த வேண்டும் என்பதைக் குறிக்கச் சுருக்கம் தேவை என்று குறிப்பிட்டார். பழமொழியின் பொருள் இதுவா அதுவா என்று மயக்கம் ஏற்படாதவாறு விளக்கமாகவும் தெளிவாகவும் அறியாமையை நீக்குகின்ற வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும் என்பதை உணர்த்த ஒளி வேண்டும் என்று குறித்தார் தொல்காப்பியர். நிகண்டையும் அகரமுதலியையும் புரட்டிப் பார்த்துப் பொருள் அறிந்துகொள்ளக்கூடிய மிகக் கடுமையான—அருமையான—வழக்கற்ற சொற்களைப் பயன்படுத்தாமல் எளிய சொற்களால் பழமொழி அமைந்திருத்தல் வேண்டும் என்பதைத் தெரிவிக்க எண்மை வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்நான்கு இலக்கணங்களையும் பெற்றுக் கேட்போர் ஏற்றுக்கொள்ளும் வகையில் காரண கருமத்துடன் பொருந்தியும் பகுத்தறிவுக்கு இசைந்தும் அமையப் பெற்றதே பழமொழி. தொல்காப்பியர் பழமொழிக்கு வகுத்த இலக்கணமும் வரையறையும் எல்லா வகையிலும் மிகச்செம்மையாக அமைந்திருக்கின்றது.

பழமொழிக்கு வெவ்வேறு நாடுகளிலிருந்து வெவ்வேறு வரையறைகளும் கருத்துகளும் தோன்றின. அவற்றுள் சிலவற்றை மட்டும் ஈண்டுக் காண்போம்.

அமெரிக்கா:

பழமொழிகள் அறிவுக் களஞ்சியம்.
பழமொழிகள் பொய்கள் அல்ல.

இருளில் விளக்குப் போன்றவை பேச்சில் பழமொழிகள். நல்ல பழமொழி எந்நேரமும் பலனளிக்கும்.

இங்கிலாந்து:

உலகத்தில் நல்லறிவெல்லாம் பழமொழிகளுக்குள் அடக்கம்.
பட்டறிவின் குழந்தைகள் பழமொழிகள்.

படிப்பில் அடிக்கடி பழமொழிகளையும் பார்த்தல் வேண்டும். ஒரு குமுகாயத்தின் மனப்போக்கைப் பழமொழிகளை விட வேறு எதுவும் எடுத்துக் காட்டுவதில்லை.

சிறு சொற்றொடர்களில் (பழமொழிகளில்) நம்முன்னோர்கள் வாழ்க்கையை அடைத்து வைத்திருக்கின்றனர்.

பழமொழிகள் மக்களின் குரலைத் தவிர வேறென்ன?

அயர்லாந்து:

பழமொழியை எதுவும் வெல்லமுடியாது.
பழமொழிகளை எவரும் மறுக்க முடியாது.
பழமொழிக்கு மேல் சொல் இல்லை.

இசுக்காத்லாந்து:

மக்கள் எப்படி பழமொழியும் அப்படி.

வேல்சு:

ஒவ்வொரு பழமொழியும் உண்மை; ஒவ்வொரு செய்தியும் [பொய்.
பழமொழிகள் உண்மையின் குழந்தைகள்.

உருசியா:

பழமொழிகள் மக்கள் புழங்கும் நாணயங்கள்.
பழமொழிகள் மக்களின் அறிவு.
பழமொழி அறிவிலிருந்து வருகிறது; அறிவு பழமொழியிலிருந்து வருகிறது.

சுவிர்சர்லாந்து:

சிறு பழமொழியிலிருந்து பெரிய ஆறுதல் கிடைக்கும்.
அழகான பழமொழி பையிலுள்ள பொன் நாணயம் போன்றது.
பட்டறிவின் எதிரொலிகள் பழமொழிகள்.
பழமொழியில் உயர்ந்த கருத்து மலிவாய்க் கிடைக்கும்.

செருமனி:

வானம் வீழ்வதில்லை, பழமொழி பொய்ப்பதில்லை.
பட்டறிவின் பொருள் விளங்கும்படி அமைந்தவைபழமொழிகள்.
நாட்டுக்கு நாடு ஒழுக்கம் வேறு; ஒழுக்கத்திற்கு ஏற்றவை பழ [மொழிகள்.

தெருக்களில் பேசும் மக்களின் அறிவு பழமொழிகள்.
பழமொழிகள் வண்ணத்திப் பூச்சிகள்; சிலவற்றைப் பிடித்துக் கொள்கின்றோம்; சில பறந்தோடி விடுகின்றன.

ஆப்பிரிக்கா:

மூடனிடம் பழமொழியைச் சொன்னால் அதன் பொருளையும் அவனுக்கு விளக்கவேண்டும்.

உரிய சூழல் வந்ததும் பழமொழியும் வரும்.
உங்கள் முன்னோர்களின் சொற்களை (பழமொழிகளை) உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள்.

பிரான்சு:

பழமொழியால் திருடனும் அறிவாளியாவான். நல்ல நினைவில் இருப்பதற்காகவே பழமொழி அமைந்துள்ளது. சில சொற்களால் அமைந்து மக்களிடையே பரவியுள்ள அறவுரையே பழமொழி.

(Maxim expressed in a few words and becoming popular).

சுவீடன்:

நினைவிலுள்ள நல்ல பழமொழி பெட்டியிலுள்ள பொன்–நாணயம் போன்றது.
பழமொழி பட்டறிவின் எதிரொலிகள்,
மாந்தனின் எண்ணம் பழமொழி.(**A proverb is what man thinks**)

பாசினியா:

பழமொழிகள் இருட்டில் வழிகாட்டும் தீவர்த்திகள்.

இந்தியா:

காலம் கழிகின்றது, ஆனால் பழமொழிகள் நிலைத்திருக்கின்றன. பழமொழிகள் பண்பாட்டின் குழந்தைகள். பழமொழியில் உமி கிடை

பால் புளிக்குமா? பழமொழியும் தவறுமா? [யாது.

சீனா:

பழமொழிகள் பொதுமக்களின் பேச்சு.

ஐசுலந்து:

பழைய பழமொழிகள் வெளியே எங்கும் பரவியுள்ளன.

போலந்து:

பழமொழிகள் வீண் சொற்கள் அல்ல.

அரேபியா:

உணவுக்கு உப்பு எப்படியோ அப்படிப் பேச்சுக்குப் பழமொழி.

இசுப்பெயின்:

பழமொழிகள் சிறு நற்செய்திகள்.
பழமொழி இறைவனின் குரல்.
மாந்தன் நினைப்பதைப் பழமொழி கூறுகின்றது.

எசுடோனியா:

பழமொழியில் பொன் நிறைந்துள்ளது.
பழமொழி எண்ணங்களின் திறவுகோல்,

ஆலந்து:

அன்றாடப் பட்டறிவின் பெண்கள் பழமொழிகள்.

யூதர்:

ஒரு மாந்தனுடைய வாழ்க்கை ஒரு பழமொழியின் மீதே அமைக்கப் பெற்றுள்ளதை அடிக்கடி காண்கின்றோம். தோட்டத்திற்குப் பூக்கள், உணவுக்குத் தவசம், உடைக்கு மணிகள், வானத்திற்கு விண்மீன்கள் ஆகியவை எப்படியோ அப்படியே பேச்சுக்குப் பழமொழிகள்.

நீக்ரோ:

சீ! அத்தனைப் பழைய (பழ)மொழிகளையும் இந்நூல் எங்கிருந்து பெற்றது!

பழமொழிகளைப் பற்றிய பல் வேறு நாட்டு வரையறைகளையும் கருத்துக்களையும் ஒருவாறு இங்குக் கண்டோம். இனி, பழமொழி பற்றிய பல்வேறு அறிஞர்களின் வரையறைகளையும் கருத்துகளையும் இவண் காண்போம்.

டப்ளின் தலைமை மதகுருவாயிருந்த ஆர். சி. டிரெஞ்சு (R. C. Trench) பழமொழிகளும் அவற்றின் படிப்பினைகளும் (Proverbs and their Lessons) என்னும் தம் நூலில் பழமொழிக்கு மிகச் சிறந்த இலக்கணங்களை வரையறுத்துள்ளார். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்வாம்;

பழமொழி ஒரேமூச்சில் சொல்லக்கூடியதாய் இருத்தல்வேண்டும்
'It (proverb) must be succinct utterable in a breath'.

பழமொழி நல்ல கருத்துரையாக இருத்தல் வேண்டும்.
'It (proverb) must have good sense.

பழமொழி மக்களிடையே செல்வாக்குப் பெறுதல் வேண்டும். மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பயன் படுத்தப்படுதல் [வேண்டும்.
'The most essential of all is its popularity, acceptance and adoption on the part of the people'.
............'It must gain recognition and currency in the multitude'.

சுருக்கமும் கூர்மையும் உடையதே பழமொழி,
'A proverb is a brief pointed saying'.

பழமொழி மிகக் குறைந்த சொற்களாலான அறிவுச் சாரமாக [விளங்குதல் வேண்டும்.
'It (proverb) must be concise, cut down, that is to the fewest possible words condensed, quiet essential wisdom'.

'நீண்ட பட்டறிவின் அடிப்படையில் அமைந்த சிறு சொற்றொடர் பழமொழி'–செர்வாண்டீசு.

A proverb is a short sentence based on long experience-Cervantes.

'பழமொழி பலருடைய அறிவு; ஒருவருடைய நுண்திறம்!
–சோன் இரசல்.

The wisdom of many and the wit of one-Lord John [Russell..

'துயரத்தைப் பழமொழிகளால் ஆற்றிக்கொள்ளவும்'
-சேக்சுபியர்

'சிதைந்து அழிந்துபோன பழைய மெய்யறிவில் எஞ்சி நிற்பவை பழமொழிகள். அவை சுருக்கமாகவும் உண்மையாகவும் இருப்பதால் காக்கப் பெற்றுள்ளன.' -அரிசுடாட்டில்.

'பழமொழி எந்த மொழியில் எழுதப் பெற்றிருந்தாலும் அதன் ஒவ்வொரு வரியும் ஒவ்வொரு சொல்லும் வரவேற்கத்தக்கது'
-மாக்சு முல்லர்.

'ஒரு நாட்டு மக்களின் நுண்ணறிவு, திறமை, உணர்ச்சி ஆகியவற்றைப் பழமொழிகள் வாயிலாக அறியலாம்' -பேக்கன்

The genius, wit and spirit of a nation are discovered in its proverbs. -Bacon

'பேச்சின் கூரிய கருவி பழமொழி' -பேக்கன்

Edged tools of speech -Bacon.

'கருத்து, சுருக்கம், கூர்மை முதலிய முக்கூறுகளைக் கொண்டதே நல்ல பழமொழி' -டிரையன் எட்வர்ட்சு.

Sense, brevity and point are the elements of a good proverb. -Tryon Edwards.

'மிகப் பெரிய மெய்ப்பொருளை விடப் பழமொழி கற்போர்க்கு அறிவு கொளுத்தி விளங்க வைக்கும்' -மதர்வெல்

The study of proverbs may be more instructive and comprehensive than the most elaborate scheme of philosophy. -Motherwell.

'அறிவின் சாரம் பழமொழி' -சோபர்ட்.

Proverbs may be said to be the abridgements of wisdom. -Joubert,

'பன்னெடுங்காலத்தின் பட்டறிவும் அறிவும் திரட்டப்பட்டு அடக்கி வைக்கப்பட்டுள்ள ஒரே பேச்சு பழமொழி' -சவுத்

The expression and wisdom of several ages ga--thered and summed up in one expression. -South.

'பழமொழி என்பது பொதுவழக்கிலுள்ள கருத்துச் செறிவு வாய்ந்த சுருக்கமான மொழி' **-ஆக்சுபர்ட் ஆங்கில அகரமுதலி.**

A short pithy saying in common use

-Shorter Oxford English Dictionary

'பழமொழி என்பது பட்டறிவு அல்லது ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்த உண்மை; எல்லாரும் அறிந்தது; சிறு சொற்றொடரில் ஆனது.' **-ஆக்சுபர்ட் ஆங்கில அகரமுதலி.**

A concise sentence, which is held to express some truth ascertained by experience or observation and famili--ar to all. -Shorter Oxford English Dictionary.

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

மேழிச்செல்வம் கோழை படாது.

தை பிறந்தால் வழி பிறக்கும்.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.

ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்.

அல்லும் பகலும் கசடறக் கல்

சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.

சால்போல வயிறும் ஊசிபோலத் தொண்டையும்.

யானைக்கும் அடி சறுக்கும்.

முதலியவை பழமொழியின் இலக்கணத்திற்கும் வரையறைக்கும் ஏற்ற இலக்கியமாகத் திகழ்கின்றன. பழமொழியின் பொருளையும், பழமொழிக்குப் பல் வேறு நாட்டினரும் அறிஞர்களும் வகுத்த பல்வேறு வரையறைகளையும், பழமொழியைப் பற்றிய கருத்துகளையும் கொண்டு நாம் கீழ்க்காணும் முடிவுக்கு வரலாம்:—

பழமொழி தொன்மையானது; வாழையடி வாழையாக வாய் மொழியாகவே வழங்கி வருகின்றது; ஒரே மூச்சில் சொல்லக்கூடிய

அளவிற்குச் சுருக்கமானது; நீண்ட பட்டறிவின் அடிப்படையில் அமைந்தது; உண்மையை உணர்த்துவது; எல்லார்க்கும் விளங்கக் கூடிய எளிய சொற்களாலும் எளிய நடையாலும் அமைந்தது; நினை வில் வைத்துக்கொள்வதற்கு உற்ற முறையில் அமைந்தது; மாந்த னுடைய எண்ணத்தை எடுத்துரைப்பது; உணர்ச்சியைஉணரவைப்பது; மாந்தப் பண்பாட்டைக் காட்டுவது; இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கின்ற பனைமரத்தின் முழு உருவத்தையும் அருகிலுள்ள பனித்துளி தன்னுள் அடக்கித் தெளிவாகக் காட்டுவதைப் போல மாந்த வாழ்க்கை வரலாறு முழுவதையும் காட்டவல்லது. மாந் தனுடைய விளைவைக் காட்டுவது வரலாறு; நம்பிக்கையைக் காட்டு வது சமயம்; கருத்தைக் காட்டுவது மெய்ப் பொருளியல்; உணர்ச்சி யைக் காட்டுவது இலக்கியம்; இவை எல்லாவற்றையும் ஒருங்கே காட்டுவது பழமொழி.

பழமொழி கருத்துக் கருவூலம்; எண்ணங்களின் சாரம்; அறிவுப் பெட்டகம்; வாழ்க்கைக்கு வழிகாட்டி; உலகெங்கும் பரவியுள்ள பொது மொழி; காலத்தால் தொன்மொழி; பயனால் நன்மொழி; எல்லோர்க் கும் ஏற்ற இன்மொழி. O

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும். ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

உலகத் தமிழ்க் கழக உறுப்பினர்க்குப்
பொங்கல் வாழ்த்து

தகைசால் உலகத் தமிழ்க்கழ கத்தீர்
நகைசேர் முகத்தொடு நலமாய் வாழ்க
புத்தாண் டாகும் பொங்கல் நன்னாள்!
கொத்தாம் மஞ்சட் கொழுங்கிழங்கு கமழ்க!
வெண்ணெலுங் கரும்பும் வீடுதொறும் பொலிக!
பாலொடு சோறும் பாற்படப் பொங்குக!
புத்தாடை யணிந்து புதிரி யுண்க!
இல்லார் மகிழ! இயன்றவை யீக!
மறைமலை யடிகள் நிறைமொழி வள்ளுவர்
மலர்முகப் படங்கள் மனைதொறும் நாற்றுக!
தமிழ்ப்பெயர் தாங்குக! தனித்தமிழ் பேசுக!
'தென்மொழி' படிக்க! தீந்தமிழ் பொழிக!
உலக முதற்றாய் உயர்தனிச் செம்மொழி
இலகு தமிழெனல் எதிர்நோக்கி இனியே.

உ. த. க. உறுப்பினர்க்கு உடனேவல்

அன்பர்காள்,

உ. த. க. விற்கு ஒரு தனியிதழ் ஏற்படும்வரை 'தென்மொழி'யே உ. த. க. இதழாக இருக்குமாதலாலும், உ. த. க. செய்திகளெல்லாம் அவ்வப்போது உடனுடன் உறுப்பினர்க்கு அறிவிக்கப்பட வேண்டியிருத்தலாலும், பொருண்முடை காரணியமாகத் தென்மொழி மாதந்தோறும் ஒழுங்காக வெளிவரவியலாதிருப்பதாலும், உ. த. க. உறுப்பினர் அனைவரும் இயலுமாயின் தென்மொழி உறுப்பினராகிக் கொள்வதோடு, அதன் பெருமையையும் தேவையையும் எடுத்துச்சொல்லிப் பிறரும் பெருந்தொகையினராக வாங்கச் செய்வாராக.

[signature]

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள், இலக்குவனார் அவர்கள் சொன்ன கருத்து. சில நேரங்களிலே நாமே வலிந்து கூடப் பிறர் பொருளை எடுத்துக்கொள்ளலாம் என்று எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அறத்தைப் பற்றிச் சொல்லும் போது. வள்ளுவர் அதனை அடியோடு மறுத்து, "கொடுக்கிறது மிகவும் உயர்ந்தது; அன்போடு கொடுப்பதானாலும் அதை வாங்கிக் கொள்கிறது மிகவும் இழிந்தது" என்று சொல்லியிருக்கிறார். இதுதான் தமிழ்க் கொள்கை. அதை விடாமல், எங்கே இந்த ஆரியச் சார்பான பழக்க வழக்கங்களிலே தமிழர் மறந்து விடுவார்களோ என்று அதை விழிப்பாயிருந்து மறுத்து இருக்கிறார். இதற்கெல்லாம் எடுத்துக் காட்டுகள் இருக்கின்றன. நேரமின்மையினாலே கருத்துகளை மட்டும் சொல்லிக்கொண்டு போகின்றேன்.

ஆறாவது கல்வி. கல்வி யாருக்கும் உரிமையில்லை. அது பிராமணர்களுக்கு மட்டும்தான் உரிமை. பிராமணர்கள் மட்டும்தான் கல்வி கற்கவேண்டும். சூத்திரர்களுக்கோ, வைசியர்களுக்கோ, சத்திரியர்களுக்கோ யாருக்கும் இடம் இல்லை. சத்திரியர்கள் போர்ப்பயிற்சியில் தான் இருக்க வேண்டும்; வைசியர்கள் வாணிகந்தான் செய்ய வேண்டும்; பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும். சூத்திரர்கள் இவர்கள் மூன்று இனத்தாருக்கும், இன்னும் சொன்னால் முதலினத்தாருக்குச் செய்தவர்கள் போக மிஞ்சியிருந்தால் அந்த அடுத்த இனத்தாருக்கும் அடிமைத்தொழில் செய்ய வேண்டும் என்று தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது. யாரும் இதை மறுக்கமுடியாது. நூல்களை எடுத்துப் படித்துப் பார்த்துவிட்டு நீங்கள் மறுக்கலாம். இதையெல்லாம் பார்த்து, கல்வி எல்லாருக்கும் உரியது என்ற ஒரு கருத்தை, அந்த ஆரியக்கருத்தை மறுத்துப் பேசுகிறார் வள்ளுவர். மநுநூல் பின்னாலே எழுந்தது. ஆனால் அந்த கருத்துப் பரவியிருந்த காலம் அது, அதைத்தான் மநு எழுதி வைத்தார். (கல்வி கற்றல் என்பது ஆறாவது) ஏழாவது கல்வி கற்பித்தல்-அந்தக் கல்வி கற்பிக்கும் உரிமையை மநு சூத்திரர்களுக்கோ, வைசியர்களுக்கோ, சத்திரியர்களுக்கோ கொடுக்கவில்லை. பிராமணன்தான் கல்வி கற்பிக்கவேண்டும். கல்வி கற்பதற்கும் அவனே உரியன்; ஒருவேளை தப்பித் தவறி எங்காவது பிராமணனுடைய வீட்டிலே வேலைசெய்கிற சூத்திரன் நல்லவனாக நடந்து அவனுடைய நிலையிலே அந்தப் பிராமணன் இரக்கப்பட்டு "தம்பி, நீ தெரியாமலிருக்கிறாய்; அதனாலே நான் சொல்லுகிற சில வேலைகளை

ஒழுங்காகச் செய்வதில்லை. நீ கொஞ்சம் கற்றவனுகயிருந்தால் நல்ல அடிமையாக இருப்பாய்'' என்று எண்ணிக் கல்வியைக் கற்றுக் கொடுத்தாலும் கூட அதை உடனே தடுக்கக்கூடிய அந்த ஆரிய மரபு, வழக்கம் அன்றிருந்தது. அதனுல்தான் கல்வி கற்பிக்கவும் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. மீறி அப்படி அவன் கற்பித்தாலும் இவன் கற்றுக் கொள்ளக்கூடாது என்று இவனுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவனே அதைப் படித்துக்கொண் டிருந்து, ஏதாவது இவன் அதைக்கேட்கிற நிலையில் அவன் சொல் லிக் கொண்டிருந்தாலும், இவன் ஓடிவிட வேண்டும், அந்த இடத்தை விட்டு என்று எல்லாம் ஒழுங்காய் எழுதப்பட்டிருக்கிறது. எட்டாவது ஒற்றுடல்—ஒற்றுப்பகுதி. இந்த ஒற்றுடல்-ஒரே ஓர் அதிகாரம் போதும் மநுநூலிலிருந்து திருக்குறள் பார்த்து எழுதப்பட்டதோ அல்லது கருத்துகளை வடித்து எழுதப்பட்டதோ அன்று என்று சொல்ல. ஒற்று டல் என்ற ஒரு செய்தியிருக்கிறதே, இந்த அரசியல் விரகு எங்குமே- அர்த்த சாத்திரத்திலே கூட—குறிப்பிட வில்லை. உலக நூல்கள் உலக அரசியல்கள் என்று நமக்கு வரலாறு தருகின்ற சில அரசுகளிலே கூட ஒற்றுப்பகுதி இருந்ததாகச் சொல்ல வில்லை. பிந்திய நூல்களில் தான் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த ஒற்றுடல் மநுநூலிலே இல் லவே இல்லை. ஒற்றுட வேண்டுமென்று சொல்லுகின்ற அந்த அறப் பகுதி இல்லவே இல்லை. இது திருக்குறளிலே இருக்கிறது. உங்களுக் குத் தெரியும். ஒன்பதாவது (இதையெல்லாம் எடுத்துக் காட்டிப் பேசு வதற்கு நேரமில்லை) தூது.அரசன் தூதுவர்களை அமர்த்த வேண்டும். பலநாட்டிற்கும் தூதுசெல்ல வேண்டுமென்றெல்லாம் வள்ளுவர் வரை யறுத்துப் பேசுகிருர். இந்தத் தூது முறையும் அந்த மநுநூலிலே சொல்லப்படவில்லை. பத்தாவது வரைவின் மகளிர், மது, சூது இவை அரசர்க்கு விலக்க வேண்டியன என்பது குறள். அரசர்க்குச் சில இன்ப நிலைகளுக்குச் சில பொருள்கள், மயக்கப் பொருள்களெல்லாம் அங்கே வைக்கப்பட்டிருக்கும். இவற்றை விலக்கிவிட வேண்டும் அரச னுனவன். ஏனென்ருல் அந்த மயக்கப் பொருள்களைக் கொடுத்து அர சனுடைய தன்மைகளை மறக்கச் செய்வான் என்கின்ற நிலை அங்கிருக் கும் ஆதலாலே நல்ல குடியை ஆளுகிற நல்ல அரசன் அவற்றை விலக்க வேண்டுமென்று கடியப்பட்டிருக்கின்றது. இவற்றை மநு நூலிலே விலக்கிப் பேசவில்லை. பதினென்ருவது சாதி ஒழுக்கம். சாதிப் பாகுபாடுகள், குலப்பாகுபாடுகள் அங்கு பேசப்பட்டிருக்கின் றன. இங்கு மறுக்கப்பட்டிருக்கின்றன. பன்னிரண்டாவது உழவு. உழவு மிகவும் சிறப்பாகப் பேசப்பட்டிருக்கிறது குறளிலே. எந்தத் தொழிலும் நடைபெருது உழவில்லையாளுல் என்று சொல்லப்பட்டிருக் கிறது. மநு நூலிலே உழவு கண்டிக்கப்பட்டிருக்கிறது. உழவு செய்

யவே கூடாது. 'பாவி'களே உழவு செய்பவர்கள் என்று எழுதியிருக்கிறது மநு நூலிலே. தப்பித்தவறி பிராமணன் அதைச் செய்துவிடப் போகின்றான் என்று பிராமணன் அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கக்கூடாது என்று அவனுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. பதின்மூன்று ஒழுக்கம். ஒழுக்கம் சில நேரங்களிலே தவறலாம், என்று விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது மநு நூலிலே. அதாவது ஒரு மனைவி கணவன் இறந்து விட்டால், குழந்தை இல்லாத நிலையிலே அவன் இறந்திருப்பானேயானால், அவள் கைம்பெண்ணாக ஆக்கப்பட்டிருந்தால் தன்னுடைய குடிமுறைக்காக அவனுடைய உடன்பிறந்தானோடோ அவனுடைய நெருங்கிய உறவினனோடோ கூடலாம்; கூடி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்துக் கொள்ளலாம் என்று மநுநூலிலே சொல்லப்பட்டிருக்கிறது. திருக்குறளிலே எந்த நிலையிலும் அதைச் செய்யக்கூடாது. ''இன்றிமையாச் சிறப்பின வாயினும் குன்றவருப விடல்'' எவ்வளவு சிறப்புக்காக அது செய்யப்படுவதாயிருந்தாலும்கூட ஒழுக்கம் குன்றுகிற அந்தச் செயலைச் செய்யாதே என்று எல்லாருக்கும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. பதினான்கு, மநுநூலிலே சொல்லப்பட்டிருக்கிற அறமுறை இருக்கிறதே அது நால்வகை முறை! பிரம்மச்சரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம். இந்த நான்குவகை அறங்களையும் முறையாகப் பேண வேண்டும் அல்லது பூணவேண்டும்; என்று மநு நூல் சொல்லுகிறது. திருக்குறளில் இரண்டுவகை. அறங்கள் (இல்லறம்; துறவறம்) மட்டுந்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப் பல வகையான நிலைகளையெல்லாம் மறுத்துப் பேசலாம். பேசினால் அது ஒரு பெரிய சொற்பொழிவாகும். அதேபோலத்தான் அந்தக் கௌடில்யனுடைய அர்த்த சாத்திரமும். வாத்சாயனருடைய காமசூத்திரம் என்னும் அந்த நூலோ பெரிதும் இழிவான நூல். அதை யாராவது ஒரு பெண்ணை வைத்துக்கூட, கணவன் தன் மனைவிக்குக்கூடப் படித்துக் காட்டமுடியாத நூல் அது. அதைப் படித்திருந்தால் உங்களுக்கு விளங்கியிருக்கும்; அவ்வளவு இழிவுச்சுவை நிரம்பியது; இன்பச் சுவையன்று. இழிவான காமநூல்; அது இயற்றப்பட்ட சூழலெல்லாம் வேறு வேறு. அதனாலே இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த வரலாற்றுக்கே உரிய அரிய நூலுக்கு வரலாற்றுச் சிறப்புடைய, மொழி அறிவுடைய, மொழி ஆற்றலுடைய பேரறிஞர் ஒருவர் உரையெழுதியிருக்கின்றார் என்றால் அதற்குமேல் ஓர் உரை தேவைப்படுமா என்பது ஐயமே என்பதை மட்டும் உங்களுக்குக் கூறிக்கொண்டு நான் எனக்காகத்தரப்பட்ட ('தமிழனின் நான்முனைப் போராட்டம்' என்ற) அந்தத் தலைப்பில் பேசாது, அப்படிப் பேசவிடாது ஒரு சூழல் அமைந்ததற்காக வருத்தப்பட்டுக் கொண்டு-இருந்தாலும் இந்த இறுதி நிலைவரை இருந்து கேட்ட உங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

வணக்கம்.

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகின்ருர் என்றும்; அரசன் அறநெறி வழுவாது ஆட்சி நடத்தி அனைத்துயிர்களேயும் காத்தல் வேண்டும் என்பதனை வள்ளுவர்,

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின்"

என எதிர்மறை முகத்தாற் சொல்லுகின்ருர் என்றும்; தேவர் முதல் சிறுபுல் வரை அடங்கிய மன்பதை முழுவதற்கும் மழை இன்றியமை யாச் சிறப்புடையது என்பதனை,

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு"

"விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றுங்கே
பசும்புற் றலைகாண் பரிது"

எனுங் குறட்பாக்களால் உணர்த்திப் போந்தார் என்றும்; திருக்குற ளுக்கு இதுவரை பலவுரைகள் தோன்றியிருந்தும், ஒன்றேனும் முழு மையாகத் திருவள்ளுவரை யறியத் துணைபுரியவில்லை யென்றும்; இவ்வகையில் அனைத்துரைகளும் குறைபாடுடையனவே யென்றும்; பாவாணர் அவர்களின் 'திருக்குறள்–தமிழ்மரபுரை' இக்குறையைப் போக்கும் என நம்புவதிற் பிழையில்லை என்றும் விளங்க வுரைத்தார்.

பிறகு, சேலம் நகராட்சிக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் திரு. தி. வை. சொக்கப்பனர், க. மு. ப. உ. அவர்கள் "திருக்குறள் தீட்டும் தமிழன் சித்திரம்" என்னும் பொருள் பற்றிப் பேசிய காலை, திருவள்ளுவரின் 2000 ஆண்டு விழாவில் திருக்குறளைப் பற்றிய தலைப்பில் பேசத் தமக்கு வாய்ப்புக் கிடைத்தது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியுறுவதாகக் குறிப்பிட்டு, திருவள்ளுவருக்கு முன்னும் பின் னும் வாழ்ந்த அறநூல் ஆசிரியர்களைவிட அவர் தமிழனின் மனப் பாங்கைத் திறம்படத் தம் நூலில் விளக்கியிருக்கும் வகையைப் பல மேற்கோள்களுடன் விளக்கினுர். (முழுப்பேச்சு பின்னர் வெளிவரும்) பின்னர்த் திருவாடானை வட்டத்தலைவர் திரு. நா. ப. தென்னகவேந் தன் நன்றிகூற முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

பிற்பகல் நிகழ்ச்சிகளில் முதலாவதாக மெல்லிசையரங்கு 3 மணி யளவில் தொடங்கப் பெற்றது. திரு. சுப. இலக்குமணன் குழுவினர் பாவலர். பெருஞ்சித்திரனுரின் "உருப்படியாகாதடா" "ஊரைத் திருத்துமுன்" போன்ற பாடல்களைப் பாடினர். பிறகு திரு. க. ஆ.

படைத்தலைவர் அவர்கள் "அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?" "இன்பம்தரும் தமிழில் அன்பு பிறந்ததுண்டு" என்பன போன்ற பாரதிதாசன் பாடல்களைப் பாடினுர்.

அடுத்து, மூர்த்திக்குப்பம் (கடலூர்) திரு. திருக்குறள்பெருமாள் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் இயற்றிய சத்திமுத்தப் புலவர் கதையைத் தக்க மெய்ப்பாடுகளுடன் திறம்படப்பாடி நடித்துக்காட்டினுர்கள்.

பின்னர், மாணவர் பேச்சரங்கம் தொடங்கியது.

திருவாடானைக் கிளைச் செயலர் திரு ஆயர்கோ அவர்கள், தலைவர் திரு. வி. பொ. பழநிவேலனுர் அவர்களையும் பேச்சரங்கிற் பங்கு கொள்ள வந்திருந்த மாணவர்களையும் வரவேற்றுப் பேசினுர்.

தஞ்சை மாவட்ட உ. த. க. அமைப்பாளரும், "மாணுக்கன்" இதழாசிரியரும் ஆகிய திரு. வி. பொ. பழநிவேலனுர், கீ. க. இ. அவர்கள் தமது தலைமையுரையில், இன்றுள்ள நிலையில் மாணவர் குழுவிற்கே முன்னேற்றம் தேவையென வற்புறுத்தினுர். இக்கால மாணவர்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தும் வழிகள் சிறந்தனவாக இல்லையென்றும், மாணவர்கள் தவருன வழிகளில் அறிவைச் செலுத்துவதால், அவர்களுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் தீமைகளே விளைகின்றனவென்றும், மாணவர்கட்குக் கல்வியில் நாட்டம் மிகல்வேண்டும் என்றும், உணவுச் சுவையில் நாட்டம் குறைதல் வேண்டும் என்றும், வாழ்க்கையைச் செப்பனிட்டுக்கொண்ட பிறகே பிற அலுவல்களில் கவனம் செலுத்துதல் வேண்டும் என்றும், மாணவர்க்குத் தனித்தமிழ்ப்பற்று இன்றியமையாதது என்றும், ஆங்கிலப் புலமைபெற அவர்கள் விரும்பின் முழுவதும் ஆங்கிலத்திலேயே பேசலாம் என்றும், ஆங்கிலப் பயிற்சிக்காகக் கலவைத் தமிழ்பேசி மொழித் தூய்மையைக் கெடுத்தல் வேண்டா என்றும், மாணவர்களுக்கு அறிவு புகட்டும் முறையில் தெளிவுற மொழிந்தார்.

திருநெல்வேலி இந்துக்கல்லூரி மாணவர் திரு சி. தமிழ்வென்றி அண்ணுமலைப் பல்கலைக்கழக மாணவர் திரு. இரா. அறிவுடைநம்பி, காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரி மாணவர் திரு. இரா. செ. அரசன், மதுரைக் கல்லூரி மாணவர் திரு. இரா. மாறன், காரைக்குடி அழகப்பர் பொறியியற் கல்லூரி மாணவர் திரு. முகில்வண்ணன், பாளையங்கோட்டை இந்தியமுறை மருத்துவக் கல்லூரி மாணவர் திரு. புது. தமிழ்த்தென்றல், மதுரைத் தியாகராயர்

பொறியியற் கல்லூரி மாணவர் திரு. சேது இராவணன் ஆகியோர் சொற்பொழிவு ஆற்றியபின், வடார்க்காடு மாவட்ட உ. த. க. அமைப்பாளர் திரு. ந. அ. அண்ணாமலை, மாணவர்கட்கு வாழ்த்துக் கூறினார்.

அவர், தமது உரையில், தனித்தமிழ்நாடு கண்டு உலக அரங்கில் உரிய இடத்தை நாம் பெறச்செய்வது உ. த. க. வின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும் என்றும், இதில் மாணவர்கட்கும் பங்கு உண்டு என்றும், உ. த. க வுக்குத் தேவையான அளவு ஆட்சியாளர் உதவி கிடைக்கும் என எதிர்பார்த்தல் இயலாமையின், தன் குறிக்கோள்களை நிறைவேற்ற உ. த. க. அரசியற் சார்புடைய ஓர் இயக்கமாக மாறவேண்டிய தேவை ஏற்படுதலும் கூடும் என்றும், தனித் தமிழ்ப்பற்று மொழிவெறியாகும் என்கின்றனர் என்றும், அது மொழிப்பற்றாகுமேயன்றி மொழிவெறியாகாது என்றும், மக்கள் முன்னேற்றம் ஏற்பட்டாலன்றி மொழி முன்னேற்றம் ஏற்படாது என்றும், எனவே அதிலும் நம் இயக்கம் கருத்துச் செலுத்துதல் வேண்டும் என்றும், உ. த. க. வின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் "தென்மொழி"யே முதற் காரணம் என்றும், இன்றும் இப்படியோர் இயக்கம் இருப்பதைத் தென்மொழி படிப்போரே அறிவர் என்றும், எனவே உ. த. க. வளர்ச்சியில் உண்மையான நாட்டம் உடையோர் தென்மொழியின் நலத்திற் கருத்துச் செலுத்துதல் வேண்டும் என்றும் கூறினார்.

தலைவர் தமது முடிவுரையில், தொடக்கப் பள்ளியிலிருந்தே மாணவர்கட்கு மொழிப்பற்றும், தனித்தமிழ்த் திறனும் உண்டாகச் செய்தல் வேண்டும் என்றும், அதற்கேற்றவாறு ஆசிரியர்களைப் பயிற்றுதலும் வேண்டும் என்றும், தமிழின் முன்னேற்றத்திற்குத் தமிழ்கற்ற ஒரு சிலரே பகையாயுள்ளனர் என்றும் தமிழ்க் கல்லூரி முதல்வர் ஒருவர் தம்மிடம் மேற்படிப்புப்பற்றி அறிவுரை கேட்ட மாணவனுக்கு வடமொழி படிக்கச் சொன்னதைத் தாம் கேட்டபோது திகைப்பும் வருத்தமும் அடைந்தாரென்றும், தாளிகைத் துறை. வானொலி நிலையம் போன்ற மொழிவளர்ச்சித் துணைகளும் தமிழ்க்குத் தீங்கு பயக்கும் வகையிலேயே இயங்கிவருகின்றன என்றும் இதனை மாற்றியமைக்க ஒல்லும் வகையில் முயலல் வேண்டும் என்றும் கூறினார்.

பறம்புக்குடி வட்டப் பொருளாளர் திரு. சி. வேழவேந்தன் அவர்கள் நன்றி நவில, மாணவர் நிகழ்ச்சி முடிவுற்றது.

இரவு 7-மணியளவில் பட்டிமன்றம் தொடங்கியது. திரு. திருப்பதி அவர்கள் தமிழ்வணக்கம் பாடினார். மதுரை யாதவர் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு இரா. அரசு, க. மு. அவர்கள், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களை வரவேற்றுப் பட்டிமன்றத்திற்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டார்.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில், தமிழ் பெருமை வாய்ந்ததாகவும் தமிழ் இலக்கியம் மிகப் பழமை வாய்ந்ததாகவும் இருந்தும், தமிழன் மட்டும் ஏன் இன்னும் இழிந்த நிலையிலேயே இருக்கின்றான் என்றால், காரணம் தமிழனின் திறமைக் குறைவே யென்றும், திருக்குறளுக்குப்பல்வேறு வகைகளில் உரை வகுப்பதிற்காட்டிய அவ்வளவு அக்கறை, திருக்குறட் கருத்துகளைப் பின்பற்றுவதிற் காட்டவில்லை யென்றும், ஒரே வட்டத்திற் சுற்றும் செக்குமாடு போலச் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து, பேசியதையே திரும்பத் திரும்பப் பேசி, எழுதியதையே திரும்பத் திரும்ப எழுதித் தன் காலத்தையெல்லாம் தமிழன் வீணாக்கி வந்திருக்கிறான் என்றும், தமிழன் சென்று குடியேறும் நாட்டையெல்லாம் தன் நாடாகவும், ஊரையெல்லாம் தன் ஊராகவும் செய்தல் வேண்டும் என்றும், அப்படிச் செய்தாலும் தமிழனோ, தமிழோ உலகை யாளுதல் இயலாது என்றும், தமிழிற் சொல்லப்பட்ட மெய்ம்மையான (அழியாத) கருத்துகளே உலகை ஆளுதல் இயலும் என்றும், கருத்து மாறுபாடு தவிர்க்க இயலாததென்றும், எனவே அதன் பொருட்டுப் பகைமை பாராட்டுவது தவறென்றும் தீஞ்சுவைத் தமிழில் தெளிவுறப் பேசினார்கள்.

பட்டிமன்றத்துக்கு உரிய தலைப்பு, 'இன்று தமிழை வளர்க்கும் பொறுப்பு அரசினுடையதா? மக்களுடையதா?. என்பது. அரசினுடையதே என்னும் கொள்கையை வலியுறுத்தி மூகவை மாவட்ட அமைப்பாளர் திரு. தமிழ்க்குடிமகன், க. மு., திருச்சிராப்பள்ளிப் பெரியார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அரவரசன், க. மு. அவர்களும், மேலூர் அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆசிரியர் திரு. அ. இறையன், க இ., ப, இ. அவர்களும் பேசினர். மக்களினுடையதே என்னும் கருத்தை வற்புறுத்திப் பாளையங்கோட்டை யோவான் கல்லூரிப் பேராசிரியர் திரு. வளன் அரசு, க. மு,, திருவைகுண்டம் குமரகுருபரர் கல்லூரிப் பேராசிரியர் திரு. நெல்லைக்கூத்தன்

க. மு., சேலம் மாவட்ட உ. த. க. அமைப்பாளர் திரு. மி. மு. சின்னுண்டார் ஆகியோர் பேசினர்.

நடுவராய் அமர்ந்த திரு. அடிகளார் அவர்கள், மக்கள் இன்றி அரசு இல்லையாதலின், குடியரசுக் கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள நம் நாட்டில் தமிழை வளர்க்கும் பொறுப்பு மக்களுடையதே எனத் தீர்ப்பு வழங்கினுர்கள்.

நீலமலை மாவட்ட உ. த. க. அமைப்பாளர் திரு, நா. இளமாறன் அவர்கள் நன்றியுரை கூறப் பட்டிமன்ற நிகழ்ச்சி முடிவுற்றது.

இரவு 10-30 க்கு இசைவிருந்து தொடங்கியது. திருச்சி மாவட்ட உ. த. க அமைப்பாளர் திரு. சேந்தமாங்குடியார் அவர்கள் இசைவாணர் மதுரை திரு. திருப்பதி அவர்களை வரவேற்றுப் பேசினுர். புலவர். குழந்தை அவர்களின் பாடல்கள் சிலவற்றை இன்னிசையுடன் திரு. திருப்பதி அவர்கள் பாடினுர்கள். திருவாடானை வட்ட உ. த. க. தலைவர் திரு சோம. வீரப்பனுர் அவர்களின் நன்றியுரைக்குப் பின், நாட்டுப் பண்ணுடன் முதல்நாள் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

சிலை-௧௪-ஆம் பக்கல் (28-12-69) ஞாயிறு காலை 9-30 மணிக்குப் பாட்டரங்கம் தொடங்கியது ஆ. தெக்கூர். திரு. செல்லப்பன், தமிழ்வணக்கம் பாடினுர். முகவை நகர். உ. த. க. கிளைத் தலைவர் திரு. இரா. சேதரசு பாட்டரங்கிற்குத் தலைமை தாங்க வந்திருந்த பாவலர். திரு. பெருஞ்சித்திரனுர் அவர்களையும் பாட்டரங்கிற் பங்கு கொள்ள வந்திருந்த பாவலர்களையும் பாட்டாலேயே வரவேற்றுர். பின்னர், உலகத் தமிழ்க் கழகப் பொதுச் செயலாளரும், "தென்மொழி" ஆசிரியரும் ஆகிய திரு. பெருஞ்சித்திரனுர் அவர்கள் தம் முன்னுரையைப் பாட்டாலேயே நிகழ்த்தினுர். "தமிழின் எண்மைச் சிறப்பு" களுள் தாய்மை குறித்துப் பாடவேண்டிய பண்டாரகர். திரு தமிழண்ணல் அவர்கள் வராமையின், தூய்மை என்னும் தலைப்பில் புதுவை, தாகூர் கலைக்கல்லூரி விரிவுரையாளர் திரு. ம. இலெ. தங்கப்பா, க. மு., அவர்களும், இனிமை என்னும் பொருள் பற்றிக் காரைக்குடி அழகப்பர் கல்லூரி விரிவுரையாளர் திரு. இளவரசு, க. மு., அவர்களும், தனிமை எனும் பொருள் குறித்துப் புலவர் திரு. இரா. இளங்குமரன் அவர்களும், புதுமை எனும் பொருள் குறித்துப்

புலவர். திரு. கழாத்தலையார் (மதுரை) அவர்களும், பழமை எனும் பொருள்பற்றிப் புதுவை. திரு. அரிமதி. தென்னகன் அவர்களும், வளமை என்னும் தலைப்பில் தளவாய்புரம் புலவர். திரு. ம. முத்தரசு அவர்களும், இளமை என்னும் தலைப்பில் தென்மொழி அமைச்சர். திரு. கு. ஐந்தெழுத்தன் அவர்களும் தாந்தாம் இயற்றிக் கொணர்ந்த பாட்டுகளை அரங்கேற்றினர். அதன்பின் தலைவர் திரு. பெருஞ்சித்திரனுர் தம் பாட்டரங்கப் பின்னுரையை நிகழ்த்தினுர். பின்னுரையில் தமிழின் எண்வகைச் சிறப்பையும் வரலாற்றுப் பின்னணியுடன் தெளிவுபட விளக்கினுர். (முழுப்பாடலும் பின்னர் வரும்).

தேவகோட்டைக் கிளைத் தலைவர் திரு. நாவுக்கரசன் அவர்களது நன்றிப்பாடலுக்குப்பின் தலைவர் அவர்கள் பாவலர் எழுவர்க்கும் அவையோர்க்கும் அன்பும் நன்றியும் தெரிவித்துப் பாட்டினுல் முடிவுரை கூற, பிற்பகல் 2-15 மணியளவில் பாட்டரங்கம் முற்றுப் பெற்றது.

பிற்பகல் 2-30 மணிமுதல் 5-30 மணிவரை. கோவிற்பட்டிப் புலவர். திரு. பெ. இராமையனுர் அவர்களின் திருக்குறள் எண்கவன் ஆற்றல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இரவு 7-மணி யளவில், பாவாணர் அவர்களின் திருக்குறள் தமிழ் மரபுரை வெளியீட்டு விழா, காரைக்குடி அழகப்பர் கல்லூரி முதல்வர் திரு. வ. சுப. மாணிக்கனுர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திரு அ. இறையன், க. இ., ப. இ., தமிழ்வணக்கம் பாடினுர் தென்னுர்க்காடு மாவட்ட அமைப்பாளர் திரு. த. மொழிக்கரசு அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

தலைவர் முன்னுரைக்குப்பின், விசவனூர் உ. த. க. கிளைத்தலைவர் திரு. செ. சந்தனம் அவர்கள், அறிஞர் பாவாணர் அவர்களைப் புரந்துவந்த சென்னை இரா. முத்துக்கிருட்டிணனுர் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தினுர். திரு. பாவாணர் அவர்கள், தம்மைக் காத்துப் பேணிய முத்துக்கிருட்டிணனுர் அவர்களின் தந்நலம் கருதாத் தன்மையையும், குறிப்பறிந்து வழங்கும் கொடைத்தன்மையையும் பற்றிப் பாராட்டிப் பேசினுர்கள்

தலைவரவர்கள் தம் முன்னுரையைச் சிறப்புற ஆற்றியபின், ''இராவண காவிய'' ஆசிரியர் புலவர். திரு. குழந்தை அவர்கள், திருக்குறளுக்குக் காலமாறுதல்கட்கேற்பப் புதுவுரைகள் தோன்றுதல் வரவேற்கத்தக்கதே யென்றும், இவ்வகையில் பாவாணர் உரை மட்டுமேயன்றி, வேறு யாவர் உரையாயினும் தமிழகத்திற்குத் தேவையே யென்றும், பழங்காலத் தமிழ்ப் புலவர்கள், ஏறத்தாழ 45 ஆண்டுகட்குமுன் இருந்தவர்கள் திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரையைத் தவிர வேறு சிறந்த உரையே இல்லையென்று கருதியது மட்டுமல்லாமல், மற்றவர்கள் உரைசெய்வது தவறென்றுகூடச் சொல்லிவந்தனரென்றும், இதனால் தமிழரிடையே இனஉணர்ச்சி குன்றி, அடிமை யுணர்ச்சியே விஞ்சியிருந்ததென்றும், 1938-இல் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புப் போராட்டமே தமிழரிடையே இனவுணர்ச்சியை எழுப்பிற்றென்றும், அதன் பின்னரே தமிழின் தூய்மையையும் வளத்தையும் காக்கும் வகையில் மன்றங்கள் பல தோன்றின என்றும், திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரைப்பற்றிய செய்திகள் நமக்கு விளக்கமாகத் தெரியவில்லை யென்றும், இன்றுள்ள திருக்குறள் உரை நூல்கள் திருவள்ளுவரின் முழுவடிவை நாம் அறியத் துணைபுரியவில்லை யென்றும்; திருக்குறளுக்கு யார் வேண்டுமானாலும் உரை யெழுதலாமென்றும், எனினும் எத்தனை உரைகள் தோன்றினும், வள்ளுவரின் 1330 குறட்பாக்களுக்கும் உண்மையான உரை கிடைத்தல் அரிதே யென்றும், பரிமேலழகர் உரை தமிழ் மரபுக்குப் பலவகையிலும் மாறுபட்டிருந்ததால் புதிய உரை யொன்று வகுக்குமாறு பெரியார் அவர்கள் தமிழறிஞர் அறுவர் கொண்ட குழுவை அமைத்து, அதில் தம்மையும் ஓர்உறுப்பினராக அமர்த்தியபின், நாள் பல கடந்தும், மற்றவர்களைக் கண்டு பேசி உரை யெழுத இயலாமையின், பெரியார் கட்டளைப்படித் தாமே 25 நாட்களுக்குள் ''கடவுள் வாழ்த்து'' நீக்கிப் புதிய உரையொன்று எழுதி முடித்தார் என்றும்,

''அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்'' (குறள்-௫௦௧)

என்ற குறளுக்குப் பரிமேலழகர் கூறும் உரை தமிழ் மரபுக்கு முற்றும் மாறுபட்டது என்றும், எனவே,

''கற்க குறளைக் கசடறக் கற்றபின்
நிற்க அதற்குத் தக''

எனப் புதிய குறளைப் படைத்து அதன்வழி நடத்தல் வேண்டும் என்றும், பரிமேலழகர் போன்றாரின் போலியுரையை ஒதுக்கித் தமிழ் மரபுக்கேற்ற வகையில் குறட்பாக்களுக்குப் பொருள் காணப் பாவாணர் அவர்களின் உரை பெரிதும் பயன்படும் என்றும் கூறினார்.

பிறகு, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஐதராபாத்து உசுமானியாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பண்டாரகர். திரு. சி. இலக்குவனார் அவர்கள், பேரறிஞர் திரு. பாவாணர் அவர்களும், பாவலர். திரு பெருஞ்சித்திரனார் அவர்களும் "உலகத் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவித் தனித்தமிழ் வளர்த்து வருவது கண்டு தம் நெஞ்சம் பெரிதும் மகிழ்வுறுகிறது என்றும், "உலகத் தமிழ்க் கழகம்" என்னும் பெயர் மிக்க பொருட் சிறப்புடையதென்றும், ஆங்கிலரைப்போல் தமிழர்க்கும் மதிநுட்பமும் வினைத்திட்பமும் இருந்திருப்பின், இன்று உலகம் முழுவதுமே தமிழ் வழங்கும் நிலமாய், தமிழ் உலகம் முழுவதற்கும் உரியது என்னும் உண்மைக்கு எடுத்துக்காட்டாய் இலங்கும் என்றும், தமிழன் முதலிற் பனிமலையாகிய வடவெல்லையைக் கைவிட்டுக் கடைசியில் வேங்கடத்தையும் இழந்தான்; தமிழன் மொழியை இழந்ததனாலேயே இன்றைய கேரள, ஆந்திர கருநாடகப் பகுதிகளாகிய பழந்தமிழகத்தை இழந்தான் என்றும், ஆரியத்தால் தமிழரின் மொழி, பண்பாடு, ஆட்சி என்னும் மூன்றுமே கேடுற்றன என்றும், மொழியைக் காக்கத் தோன்றியதே தொல்காப்பியம் என்றும், அவ்வாறே தமிழரின் பண்பாட்டை, வாழ்வியலைக் காக்கத் திருக்குறள் தோன்றிற்று என்றும், திருக்குறள் ஆரியக் கருத்துகளை மறைமுகமாக எதிர்ப்பதாலேயே இன்றுவரை தமிழ்நாட்டில் நிலைபெற்று வந்துள்ளது என்றும், வெளிப்படையாக எதிர்த்திருப்பின் இன்று இருக்குமிடம் தெரியாமல் மறைந்து போயிருக்கும்; ஆரியர்கள் அதில் தங்கள் கோட்பாடுகளுக்கும் இடமிருப்பதாலேயே அதனை வாழவைத்தனர் என்றும், அந்த நோக்கத்துடனேயே வள்ளுவரின் அறத்துப்பாலுக்கும் சுக்கிர நீதிக்கும் தொடர்புண்டு; பொருட்பாலுக்கும் அர்த்த சாத்திரத்துக்கும் இயைபுண்டு; காமத்துப்பாலுக்கும் காம சூத்திரத்திற்கும் கருத்தொற்றுமை யுண்டு என்றெல்லாம் ஆரியச் சார்பினர் கூறி வருகின்றனர் என்றும், ஆயின் அவர்கள் கூற்றுப் பொருந்தாதென்பதை,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

"நல்லா றெனினும் கொளறிது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்பன போன்ற குறட்பாக்களால் அறியலாம் என்றும், திருக்குறள் ஆரியச்சார்பான கருத்துகளையுடையது என்னும் கொள்கையுடையோர் பெரும்பான்மையராக இருந்த காலத்தில் எழுதப்பட்டதால் தான் பரிமேலழகர் ஆரியக் கோட்பாடுகளைத் தழுவித் திருக்குறளுக்கு உரை வரைந்துள்ளார் என்றும், எனவே அஃது அவர் தவறுகாதென்றும்; பாவாணர் அவர்கள் தம் உரை, பரிமேலழகருரை போன்று ஆரியச் சார்புடையதன்று என்பதனை விளக்கு முகத்தான் "திருக்குறள்–தமிழ் மரபுரை" என்ற பெயருடன் இந்நூலை வெளியிட்டிருத்தல் பெரிதும் பாராட்டத்தக்கதாகும் என்றும், இந்நூலைத் தமிழன்பர்கள் அனைவரும் வாங்கிப் படித்து, வாழ்வில் உயர்வு பெறுதல் வேண்டும் என்றும், கபிலர்க்குப் பாரியும், ஔவைக்கு அதியமானும் கிடைத்தது போல, பாவாணர்க்கு முத்துக்கிருட்டிணனர் என்னும் புரவலர் கிடைத்தது மகிழ்ச்சிக் குரியதென்றும், பாவாணர்–'ஒப்பியன் மொழி நூல்" எழுதிய காலத்தில் தாம் ஒரு மாணவரே யென்றும், பாவாணர்க்கும் தமக்கும் கருத்து வேறுபாடு இருப்பினும் கொள்கை வேறுபாடு இல்லையென்றும், பாவாணரின் தனித்தமிழ்ப் புலமைக்கும் பற்றுக்கும் தாம் என்றும் அன்புகாட்டும் இயல்பினரென்றும், பாவாணர் அவர்கள் தலைமையில் தோன்றியுள்ள இவ்வியக்கம், நல்ல சூழ்நிலையில் தோன்றி வளர்ந்துள்ளது போலவே நன்முறையிற் செயலாற்றிச் சிறந்து விளங்குதல் வேண்டும் என்றும் சுவைபடப் பேசினர்கள்.

இறுதியாகத் "தென்மொழி" ஆசிரியரும், உலகத்தமிழ்க் கழகப் பொதுச் செயலாளரும் ஆகிய பாவலர். திரு. பெருஞ்சித்திரனர் அவர்கள் உரையாற்றினர்கள். (சொற்பொழிவு பிறிதோரிடத்தில் தனியே தரப்பட்டுள்ளது.)

பின்னர் இரவு 10-30 மணியளவில், தகடூர் மாவட்ட உ. த. க. அமைப்பாளர் திரு. அருள்மணி, க. இ., ப. இ. அவர்கள், இசைவாணர் திரு. பொன்னப்பர் அவர்களையும், அவர் தம் குழுவினரையும் வரவேற்றுப் பேசினர். திரு. பொன்னப்பர் குழுவினர் திரு. பாவாணர் அவர்களின் "இசையரங்கு இன்னிசைக் கோவை" என்னும் நூலிலிருந்து சில பாடல்களை இசைத்தார்கள்.

முகவை மாவட்ட அமைப்பாளர் திரு. தமிழ்க்குடிமகன், க. மு. அவர்கள், இசைவாணர் திரு. பொன்னப்பர் குழுவினர்க்கும், மற்றும் மாநாட்டிற்பங்குகொண்ட அறிஞர்கட்கும், கலந்துகொண்ட தமிழன்பர்கட்கும் நன்றிகூற, நாட்டுப்பண்ணுடன் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் இரவு 12-மணி அளவில் முடிவுற்றன. 0

அயர்வைக் கொல்லடா! தோளை உயர்த்தடா!

-துரை-மாணிக்கம்.

(1) உள்ளம் விழுந்ததா? தூக்கி நிறுத்தடா!
உடலம் சோர்ந்ததா? மேலும் வருத்தடா!
கள்ள மாந்தராம் கயவர் நடுவிலே,
கடுமை உழைப்படா; மகிழ்ச்சி முடிவிலே!

(2) உறவு பகைத்ததா? உதறித் தள்ளடா!
ஊரும் வெறுத்ததா? எதிர்த்து நில்லடா!
துறவுப் போக்கிலே, தூயர் துணையிலே
துணிவைக் காட்டடா, கொள்கைப் புணையிலே!

(3 வறுமை உற்றதா? பசியைக் கொல்லடா!
வாழ்க்கை கசந்ததா? துயரை வெல்லடா!
பொறுமை கொள்ளடா, புல்லர் உரையிலே!
பூட்கை சாற்றடா வெற்றிக் கரையிலே!

(4) சூழ்ச்சி மிகுந்ததா? உரையில் விழுத்தடா!
சூடு பறக்கநின் உணர்வில் கொளுத்தடா!
தாழ்ச்சி செய்யுமுன் பகைவர்க் கிடையிலே,
தமிழை நினையடா, வேங்கை நடையிலே!

(5) பொய்ம்மை நிறைந்ததா, வெடித்துச் சிரியடா!
பூண்ட வெற்றிகள் சரிக்குச் சரியடா!
மெய்ம்மை ஒளிர்வதே பொய்ம்மை இருளிலே!
மேட்டைக் காண்பதே பள்ளச் சரிவிலே!

(6) புகழ்ச்சி மொழிகளோ தூசென் றெண்ணடா!
புனைவுச் சொற்களோ புழுதி மண்ணடா!
இகழ்ச்சி நெரித்ததா? சோர்வைப் புதையடா!
ஏசு புத்தரும் உணர்ந்த கதையடா!

(7) வினைக்குத் தனியனோ? வெற்றி நினக்கடா!
விரகு, சூழ்ச்சிகள் துண்டு துணுக்கடா!
நனைக்கும் பனி,மழை, நறுக்கும் வெப்பமோ,
நலிவைத் தருமெனில் தொண்டுக் கொப்புமோ?

(8) ஒற்றை உழவிலும் கற்றை விளைவடா!
உண்மைப் பயிரிலும் ஊழ்க்கும் களையடா!
அற்றைப் புகழெலாம் இற்றை உயிர்ப்படா!
அயர்வைக் கொல்லடா! தோளை உயர்த்தடா!

பாவாணர் நூல் வெளியீட்டுக் குழு வேண்டுகோள்.

அருந்தமிழ் அன்பரீர்! வணக்கம்.

தமிழ் உலகமுதற்றாய் உயர்தனிச் செம்மொழியாயிருந்தும் அதன் அருமைபெருமைகள் இன்றும் தமிழரால் அறியப்படாதிருத்தலையும், அதனாலேயே இத்திங்கட்செலவுக் காலத்திலும், தமிழர் எல்லா வகையிலும் அடிமைப்பட்டுக் கிடத்தலையும் காண்கிறோம். சென்னைப் பல்கலைக் கழக அகரமுதலியில் ஆயிரக்கணக்கான தென்சொற்கள் இடம்பெறாது போனதுமன்றி, தமிழைக் கலவை மொழியாகவும், வடமொழிக் கிளையாகவும் காட்டுதல் முதலிய குறைகளைக்களைந்து தமிழ்க்கடல் மறைமலையடிகள் வழிநின்று செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் அகரமுதலி (Etymological Dictionary of Tamil) தொகுக்கப்பெறுவது தமிழர் அடிமை நீங்கி முன்னேற்றத்திற்கு வழிகாணும் சிறந்ததொரு பணியாகும்.

தமிழ், திராவிட மொழிகட்குத் தாயாகவும், மேலையாரிய மொழிகட்கு மூலமாகவும், விளங்குகின்றதென்பதை அஃகியகன்ற ஆராய்ச்சி அறிவான் மெய்ப்பிப்பவர் உலக மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களே ஆவார்கள். மறைமலையடிகளால் "எனக்குப் பின் மொழியாராய்ச்சியில் சிறந்தவர் இவரே" என இருபது ஆண்டுகட்கு முன்னரே பாராட்டப் பெற்றவராவார்கள். எனவே, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி தொகுப்பிற்கும், அவர்கள் எழுதியுள்ள தமிழர் வரலாறு, தமிழர் மதம் முதலிய நூல்களை அச்சிடுவதற்கும் நூறாயிரம் உருபா வேண்டியுள்ளது. மாதந்தொறும் பொருள் உதவக்கூடிய தமிழன்பர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பாவாணர்நூல் வெளியீட்டுக்குழுப் பொறுப்பாளரிடம் கொடுத்துதவ வேண்டுகிறோம்.

செல்வர்களும், வணிகர்களும் மனமுவந்து பெருந்தொகை வழங்கித் தன்னேரில்லாத் தமிழ்த் தொண்டிற்குத் தகைமை கொள்ள வேண்டுகிறோம்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதுபோல் தொகை சேர்த்துத் தமிழ்த்தாயின் சீரிய பணிக்கு மாணவர்களும், ஆசிரியர்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும், உலகத் தமிழ்க் கழகக் கிளைகளும், தமிழ் மன்றங்களும் பொதுப்பணி மன்றங்களும் தங்களால் இயன்ற அளவு பொருள் தண்டியுதவ வேண்டுகின்றோம். தமிழ்த்தாயின் தொன்மைப்புகழ் என்றும் நின்று நிலவச்செய்யும் உயர் தொண்டிற்கு உற்ற துணையாமாறு பணிவன்புடன் மீண்டும் வேண்டுகின்றோம்.

இன்னணம்,

பாவாணர் நூல் வெளியீட்டுக் குழு.

தலைவர்- பேராசிரியர் தி. வை. சொக்கப்பனார், க. மு.,
'தமிழ்க்குடில், அளகாபுரம், சேலம்-4.

செயலர்- புலவர் மி. மு. சின்னாண்டார், 'திருக்குறளகம்'
50, நத்தமர்தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3.

பொருளர்: செங்கை. செந்தமிழ்க்கிழார், க. இ., ப. இ.,
'தொல்காப்பியர் இல்லம்' செங்காட்டுப்பட்டி, (அ. நி.)
திருச்சி மாவட்டம்.

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க. 10/2001

I. கழகச் செய்திகள்.

கீழ்க்காணும் ஊர்களிலும் நகரங்களிலும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினராகச் சேர்ந்து நாட்டுத் தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

க. தென்னார்க்காடு மாவட்டம்

(அ) நெய்வேலி–கீழைக்கிளை; தொடக்கம்: துலை–க௦; தலைவர் திரு. சுப. திருமாறன்; செயலர்: திரு. ஆ. ந. அன்பரசன்; பொருளர்: திரு. திருவம்பலம்.

(ஆ) நெய்வேலி-ஆலைக்கிளை: தொடக்கம்: 14-11-69, தலைவர்: திரு. அருட்குவை; செயலர்: திரு. திருமாவளவன்; பொருளர்: திரு. தமிழ்ச்செழியன்.

(இ) கப்பியாம்புலியூர்க்கிளை: தொடக்கம்: துலை–உ௩. தலைவர்: திரு. விழுப்பரையன்; செயலர்: திரு. அ. தண்டபாணி; பொருளர்: திரு. வ. பழனிசாமி.

(ஈ) நமச்சிவாயபுரம் ஊர்க்கிளை: தொடக்கம்: 13-11-69. தலைவர்: திரு. பெரியசாமி; செயலர்: திரு. செயராமன்; பொருளர்: திரு சோலைமுத்து.

(உ) முண்டியம்பாக்கம் ஊர்க்கிளை: தொடக்கம்: 7—12—69. தலைவர்: திரு. அ. பாலகிருட்டிணன்; செயலர்: திரு. இரா. கலியமூர்த்தி; பொருளர்: திரு. பால. இராமச்சந்திரன்.

(ஊ) ஆதனூர்க்கிளை: தொடக்கம்: 8-12-69. தலைவர்: திரு. ஆதனிளங்கீரன்; செயலர்: திரு இளந்தமிழன்; பொருளர்: திரு. வடவரைமுதல்வன்.

(எ) காட்டுக்கூடலூர்க் கிளை: தொடக்கம்: 11-12-69. தலைவர்: திரு. வைரக்கண்ணு; செயலர்: திரு. சஞ்சீவிராயர்; பொருளர்: திரு. கலியபெருமாள்.

(ஏ) மருங்கூர்க்கிளை: தொடக்கம்: சிலை-கஎ. தலைவர்: திரு த. ஆதிமூலம்; செயல்ர்: திரு. உ. குமரேசன்; பொருளர்: ம. சி. இராமலிங்கம்.

(ஐ) கோட்டேரி ஊர்க்கிளை: தொடக்கம்: 11-1-70. தலைவர்: திரு. மு. கலியமூர்த்தி, செயலர்: திரு. கோ. சண்முகாநந்தம்; பொருளர்: திரு. ப. ஆதிமூலம்.

உ. சேலம் மாவட்டம்

(அ) அயோத்தியாப்பட்டணம் ஊர்க்கிளை: தொடக்கம்: நளி-௪0 தலைவர்: திரு. அன்புவாணன்; செயலர்: திரு. பொன்மாறன்; பொருளர்: திரு. ப. க. ஆறுமுகம்.

(ஆ) பெரியகவுண்டாபுரம் ஊர்க்கிளை: தொடக்கம்: நளி-கக. தலைவர்: திரு. தெ. இளம்பரிதி; செயலர்: திரு. இரா. ஏழுமலை; பொருளர்: திரு. தமிழ்ச்செழியன்.

(இ) அத்தம்பட்டி ஊர்க்கிளை: தொடக்கம்: நளி-உ0. தலைவர்: திரு. தமிழரசன்; செயலர்: திரு. முகிலரசன்; பொருளர்: திரு. வெற்றிச்செல்வன்.

(ஈ) சலகண்டபுரம் ஊர்க்கிளை: தொடக்கம்: 3-1-60. தலைவர் திரு. த. க. குருநாதன்; செயலர்: திரு. நா. க. தமிழவேள்; பொருளர்: திரு. அ. அரியபுத்திரன்.

(உ) இரா: புதுப்பாளையம் ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்.௫. தலைவர்; திரு. ஆ. பச்சைமுத்து; செயலர்: திரு. இர. பூமாலை; பொருளர்: திரு. சி. மணிமாறன்.

(ஊ) மின்னும்பள்ளி ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்-௪ தலைவர்: திரு. சே. கணேசன்; செயலர்: திரு. செ. சி. இளந்திரையன்; பொருளர்: திரு. க. தமிழ்வேந்தன்.

௩. திருச்சி மாவட்டம்

(அ) கீரம்பூர்க் கிளை தொடக்கம்: 20-9-69. தலைவர்: திரு. பெ. பெருமாள்; செயலர்: திரு. சேக்கிழார்; பொருளர்: திரு. பெ. இளங்கோ.

(ஆ) காடுவெட்டி ஊர்க்கிளை; தொடக்கம்: சுறவம்-உ. தலைவர்: திரு. மு. சேவகன், செயலர்: திரு. சே. திருமேனி; பொருளர்: திரு. மா. தருமலிங்கம்.

(இ) பேட்டைவாய்த்தலை ஊர்க்கிளை: தொடக்கம்: சுறவம்-௪. தலைவர்: திரு. கருவூர்ப்பாரி; செயலர்: திரு. பெரி. வளவன்; பொருளர்: திரு. தென்னவன்.

(ஈ) ஆமூர்க்கிளை: தொடக்கம்: சுறவம்-௧௨. தலைவர்: திரு. ச. சின்னத்தம்பி; செயலர்: திரு. சி. கிருட்டிணன்; பொருளர்: திரு. அர. நாராயணன்.

௪. தஞ்சை மாவட்டம்

(அ) விளக்குடி ஊர்க்கிளை: தொடக்கம்: மேழம்-௩0. தலைவர்: திரு. மு. சு. மணியன்; செயலர்: திரு. மா. தமிழினியன்; பொருளர்: திரு. நிலவொளியன்.

(ஆ) குடந்தை நகரக்கிளை: தொடக்கம்: சிலை-௧௭. தலைவர்: திரு. இரா. சந்திரசேகரன்; செயலர்: திரு. கதிர். சுப்பையன்; பொருளர்: திரு. வை. மு. கும்பலிங்கன்.

௫. கோவை மாவட்டம்

(அ) சூலூர்க் கிளை: தொடக்கம்: நளி-௧௫. தலைவர்: சூ. நா. தமிழ்நெஞ்சன்; செயலர்: திரு. அ. வள்ளுவராசன்; பொருளர்: திரு. சூ. இரா. சுப்பிரமணியன்.

(ஆ) அளுக்குளி ஊர்க்கிளை: தொடக்கம்: நளி-௧௧. தலைவர்: திரு. கோ. கி. பழநிசாமி; செயலர்: திரு. மா. அரசு; பொருளர்; திரு. தமிழமுதன்.

(இ) ஈரோடு நகரக்கிளை: தொடக்கம்: சுறவம்-௩. தலைவர்: திரு. சி. சக்திவேல்; செயலர்: திரு. மா. சுப்பிரமணியன்; பொருளர்; திரு. க. இராமலிங்கம்.

௬. மதுரை மாவட்டம்

(அ) மதுரை நகரக்கிளை-2: தொடக்கம்: அறிவிக்கப்படவில்லை. தலைவர்: பேரா. திரு. கு. மா. திருநாவுக்கரசு; செயலர்: புலவர். திரு. கரு. மருதவாணன்; பொருளர், திரு. சுடரோன்.

(ஆ) மதுரை நகரக்கிளை–3: தொடக்கம்: அறிவிக்கப்படவில்லை. தலைவர்: திரு. புலவர். திரு. நா. மாயோன்; செயலர்: திரு. தா. முத்து; பொருளர்: புலவர். திரு. அ. கி. அழகர்.

(இ) மதுரை நகரக்கிளை–4: தொடக்கம்: அறிவிக்கப்படவில்லை. தலைவர்: திரு. சு. அறிவன்பன்; செயலர்: கோ. இளஞ்செழியன்; பொருளர்: திருவாட்டி. கலைக்கண்.

(ஈ) மதுரை நகரக்கிளை–5: தொடக்கம்: அறிவிக்கப்படவில்லை. தலைவர்: திரு. சு. ம. முருகு; செயலர்: திரு. ஆ. அரவரசன்; பொருளர்: திரு. க. அழகன்.

எ. முகவை மாவட்டம்

உச்சிப்புளி ஊர்க்கிளை: தொடக்கம்: துலை–௩௦; தலைவர். திரு. இளந்திரையன்; செயலர்: திரு. அமுதன்; பொருளர்: திரு. தண்டபாணி.

ஏ. புதுவை மாநிலம்

பாரதிதெருக் கிளை: தொடக்கம்: 6-12-69. தலைவர்: திரு. இறையரசு; செயலர்: திரு. த. முத்து; பொருளர்: திரு. கு. த. முதல்வன்.

க. தென்னார்க்காடு மாவட்டம்- வட்டக்கிளை.

கடலூர் வட்டக்கிளை:- தொடக்கம்: 7-12-69. தலைவர்: திரு. இரா. அப்பாவு; செயலர்: திரு. இரா. அன்பரசன்; பொருளர்: திரு. இலக்குவன்.

உ. பிற செய்திகள்

1. தென்னார்க்காடு மாவட்ட நெய்வேலி ஆலைக்கிளையைச் சேர்ந்த அன்பர்கள் சார்பில், சென்னைப் பல்கலைக்கழக அகரமுதலியைத் திருத்துதற்கு ஆவன செய்யுமாறு, பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கட்குக் கிளைத் தலைவரும் செயலரும் சேர்ந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர். மற்றும் இந்த ஆண்டு பாரிசில் நிகழ இருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு, உலகத் தமிழ்க் கழகத் தலைவர் மொழிப்பேரறிஞர் திரு. தேவநேயப்பாவாணர் அவர்களையும், பொதுச்செயலாளர், பாவலர். திரு. பெருஞ்சித்திரனார் அவர்களையும் அனுப்பல் வேண்டும் என்று தமிழகக் கல்வியமைச்சர்க்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2. முகவை மாவட்ட வாள்வாங்கி உ. த. க. கிளை 31-12-69 அன்று அருப்புக்கோட்டைத் தமிழாசிரியர் திரு. நா. அரவரசு அவர்கள் தலைமையில், வள்ளுவர் ஈராயிரமாண்டு நிறைவு விழாவினைச் சிறப்புறக் கொண்டாடிற்று. அவ்விழாவில் உ. த. க. தலைவர் திரு. பாவாணர் அவர்களின் உருவப்படம் திறந்து வைக்கப்பெற்றது.

3. தெ. ஆ. மாவட்ட முதனை உ. த. க. கிளையின் சார்பில், சுறவம் ௮-அன்று திரு. தே. இரா. கோவிந்தராசன், க. மு., ப. இ. தலைமையில், உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்கான பேச்சுப் போட்டி நிகழ்வுற்றது. போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கட்குத் திரு. சீ. தியாகராசனார் பரிசு வழங்கினார்.

4. மதுரை நகர உ. த. க. முதற்கிளை தனது முதலாண்டு நிறைவு விழாவினைத் தி. பி. உ௦௦௧ சுறவம்-௧௨-ஆம் நாளன்று கொண்டாடியது. உலகத் தமிழ்க் கழகத் துணைச்செயலர் புலவர். திரு. இறைக்குருவனார் தலைமையிற் கருத்தரங்கும், முகவை மாவட்ட அமைப்பாளர் திரு. மு. தமிழ்க்குடிமகனார் தலைமையிற் பட்டிமன்றமும் நிகழ்வுற்றன. "தமிழியக்கம்" என்னும் கையெழுத்து இதழும் வெளியிடப்பெற்றது.

5. கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த கோலார்ப் பொன்வயல் பி. இ எல். எம். தமிழ்மன்றத்தின் சார்பில் 25—1—70 இல் நிகழ்ந்த தமிழ் விழாவில், மாலை ௬-மணியளவில் "தென்மொழி" ஆசிரியரும், உ. த. க. பொதுச் செயலாளரும் ஆகிய பாவலர். திரு பெருஞ்சித்திரனார் அவர்கள் தனித்தமிழ்க் கொள்கைகள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

6. கோவை தொழில்நுட்பக் கல்லூரி முத்தமிழ் மன்றத்தின் கலை விழா 29—1—70-இல் நிகழ்ந்தது. மாலை 4-மணியளவில் "தென்மொழி" ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள் "ஏன் தனித்தமிழ்?" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். அதைத் தொடர்ந்து மாணவர் கருத்தரங்கும் நடைபெற்றது. (ஆசிரியரின் இரண்டு சொற்பொழிவுச் சுருக்கங்களும் பின்னர் வெளிவரும்.)

அறிக்கை எண்: உ. த. க: 2/1/2001.

1. தி. பி. ௧௯௯௯. கன்னி.௨௦-ஆம் பக்கல் திருச்சிராப்பள்ளியில் நிகழ்ந்த உலகத் தமிழ்க் கழக அமைப்புக் கூட்டத்தில், கழகத்தின் துணைத்தலைவராக அமர்த்தப்பெற்ற திரு. பர். மெ. அழகனார் (சுந்தரம்), தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு, எவ்வகை முன்னறி

விப்பும் இன்றி, வாராமல் நின்றதால், உ. த. க. நெறிமுறை கக-4-ஆம் உட்பிரிவின்படி தம் பதவியை இழந்தவர் ஆகின்றார்.

2. கழகத்தின் முதலாம் ஆட்சிக்குழுக்கூட்டம் தி. பி. உ௦௦௧ மீனம் கசு-ஆம் பக்கல் (29—3—70) காலை 10-மணியளவில் திருச்சிராப் பள்ளி அசோகா உண்டிச் சாலையில் நிகழும். தலைமைக்குழு உறுப் பினர்களும், மாவட்ட அமைப்பாளர்களும் தவறுமற் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

3. பறம்புக்குடி மாநாட்டு வரவுசெலவுக் கணக்கினை விரைவில் முடிக்கவேண்டி யிருத்தலால், மாநாட்டிற்கென நன்கொடை திரட் டிய மாவட்ட அமைப்பாளர்களும், கிளைச் செயலர்களும், பிறரும் அது பற்றிய கணக்கு விளக்கத்தையும், நன்கொடைப் பற்றுமுறிச் சுவடி களின் அடிக்கட்டுகளையும் (Counter foils) கீழ்க்கண்ட முக வரிக்கு விரைவில் விடுக்குமாறு அறிவிக்கப்படுகின்றனர்.

திரு. தமிழ்க்குடிமகன், தமிழ்விரிவுரையாளர்,
யாதவர் கல்லூரி, மதுரை-2.

4. பொறுப்பு மாற்றங்கள்:

(அ) மதுரை மாவட்ட அமைப்பாளராக அமர்த்தப்பெற்றதிரு. இ. மறைமலை அவர்கள் தம் பொறுப்பைத் திரு. வையைநம்பி (அமா னுல்லா) அவர்களிடம் ஒப்படைத்துள்ளார். புதிய அமைப்பாளர் முகவரி:

திரு. கா. வையைநம்பி (அமானுல்லா)
80, தெற்குப் பெருமாள் மேத்திரிதெரு,
தெற்குவாயில், மதுரை-1.

(ஆ) கருநாடக மாநிலத்திற்குத் திரு. வ. பெருமாள் அவர் களுக்கு மாறாகத் திரு. வே. மாறன் அவர்கள் அமைப்பாளராக அமர்த் தப்பெற்றுள்ளார். அவரது முகவரி:

திரு. வே. மாறன், எண் 111, மூன்றுவதுசாலை,
பிரகாசநகர். சீராமபுரம், பெங்களூர்-21.

(இ) தகடூர் (தருமபுரி) மாவட்டத்திற்குத் திரு. இரா. அருள் மணி, அவர்கள் அமைப்பாளராக அமர்த்தப்பெற்றுள்ளார். முகவரி:

திரு. இரா. அருள்மணி. க. இ., ப. இ.,
ஆசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி,
மோரணஅள்ளி, சாப்பரத்தி (அ. நி.)
(வழி) காவேரிப்பட்டணம், தகடூர் மாவட்டம்.

அன்பர்கள் இனிப் புதிய மாவட்ட அமைப்பாளர்களிடமே தொடர்புகொள்ள வேண்டுகிறேன்.

மே/பா. தென்மொழி
கடலூர்-1.

பெருஞ்சித்திரன்,
பொதுச் செயலாளர், உ. த. கழகம்.

முகவை மாவட்டப் பறம்புக்குடியில் நிகழ்ந்த உலகத் தமிழ்க் கழக முதல் மாநாட்டில் நிறைவேறிய

தீர்மானங்கள்.

1. திருவள்ளுவர் ஈராயிரமாண்டினை முன்னிட்டு, அரசு அலுவலகங்களிலும் நிறுவனங்களிலும் திருவள்ளுவராண்டையே நடைமுறையில் கையாள வேண்டும் என்று உலகத் தமிழ்க்கழகம் வலியுறுத்தி வேண்டுகிறது; ஆவன செய்யுமாறு அரசினரைத் தூண்டுகிறது.

2 தமிழக முதல்வர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்கு உலகத் தமிழ்க் கழகம் தன் உள்ளார்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

3. இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு சாகிர்உசேன் அவர்கள், மறைவுக்கு உலகத் தமிழ்க் கழகம் தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

4. தமிழ்நாடு வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு கோவிந்தசாமி, 'இலக்கணக்கடல்' திருமிகு. கந்தசாமிப் புலவர், கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் திருமிகு. சுந்தரேசனார் ஆகியோர் மறைவுக்கு உலகத் தமிழ்க் கழகம் தன் நெஞ்சார்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

5. புலவர் குழந்தை அவர்கள் எழுதிய இராவண காவியத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையினை அகற்றி, அந்நூல் மக்களிடையே பரவவும் வழிவகை செய்திடுமாறு தமிழக அரசினரை உலகத் தமிழ்க் கழகம் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

6. பாவாணர் நூல்கள் நூலகங்கள் அனைத்திலும் இடம்பெற ஏந்தாக முதலில் அரசு நூலகங்கள் எல்லாவற்றிலும் பாவாணர் நூல்களை இடம்பெறச் செய்யுமாறு தமிழக அரசினரை உலகத் தமிழ்க் கழகம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

7. 1970-ஆம் ஆண்டில் பாரிசு மாநகரில் நடைபெறவிருக்கும் மூன்றாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கிற்குத் தமிழகத்தின் தனிப் பெருஞ் சிறப்புடைய ஆட்பேராளராக மொழிநூல் மூதறிஞர் பாவாணர் அவர்களை அனுப்பிவைக்க ஆவன செய்தருளுமாறு தமிழக அரசை உலகத் தமிழ்க் கழகம் விரும்பி வேண்டுகிறது.

8. தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினர் வழங்கும் (பயண) வழிச்சீட்டு அனைத்தும் தமிழில் விளங்கிட உடனடியாக ஆவன செய்யுமாறு தமிழக அரசினரை உலகத் தமிழ்க் கழகம் வலி யுறுத்தி வேண்டுகிறது.

9. 1971-ஆம் ஆண்டில் தொகுக்கப்படவிருக்கும் 'குடிமதிப்புக் கணக்கீட்'டில் நாட்டினம் என்னும் பகுதியில் தமிழ் மக்கள் அனை வரும் "தமிழர்" என்றே குறிக்கப்பெற ஆவன செய்தருளுமாறு அர சினரை உலகத் தமிழ்க் கழகம் அன்புடன் வேண்டுகிறது.

10. புலவர் வகுப்பு முதலிய தமிழ்த் தேர்வுகளுக்குத் திருக்குறள் தமிழ் மரபுரையினையே பாடத்திட்டத்தில் சேர்த்தருளுமாறு சென்னை, அண்ணுமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களைத் தூண்டுமாறு தமிழக அரசினரையும், ஏற்று ஆவன செய்யுமாறு முப்பெரும் பல்கலைக் கழ கத்தினரையும் உலகத் தமிழ்க் கழகம் வற்புறுத்திக் கேட்டுக்கொள் கிறது.

11. புதுவை தாகூர் கலைக்கல்லூரியில் வணிகவியல் பயிலும் கல்லூரி மாணவரிடையே இந்தி படிக்கும் மாணவர்க்கு வழங்கப் படும் உதவித்தொகை தமிழ் படிக்கும் மாணவர்க்கும் வழங்கப்பெற வழி வகுத்தருளுமாறு புதுவை அரசினரை உலகத் தமிழ்க் கழகம் விரும்பி வேண்டுகிறது.

12. தமிழகக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி மாணவர்களிடையே தேசிய மாணவர் படைப்பயிற்சி ஆணைச்சொற்கள் ஆங்கிலத்தில் மாற்றம் பெற்ற பின்னரும், பயிற்சி வகுப்புகள் இந்தியில் நடத்தப் படுவதைச் சுட்டிக்காட்டி, உடனடியாக அதனைத் தடுத்து ஆங்கிலத் திலேயே பயிற்சிகள் தரப்பெற ஆவன செய்யுமாறு தமிழக அரசி னரை உலகத் தமிழ்க் கழகம் வலியுறுத்துகிறது.

13. தமிழக உயர்நிலைப்பள்ளி மாணவரிடையே தமிழ்நாட்டு வர லாற்றறிவு விரிவாகவும் தெளிவாகவும் விளங்கும் வகையில் உயர் நிலைப்பள்ளிப் பாடத்திட்டத்தை ஏற்றவாறு மாற்றியமைக்க அரசின ரையும் பல்கலைக்கழகத்தாரையும் விரும்பி வேண்டுகிறது உலகத் தமிழ்க் கழகம்.

14. சென்னைப் பல்கலைக்கழகத்தினர் வெளியீடாகிய 'அகரமுதலி' யின் சீர்கேட்டைப் போக்கிச் செப்பமுறத் திருத்தியமைக்கவும், சீராக் கவும் தக்க வகையில் 'அகரமுதலிச் சீர்திருத்தக்குழு' ஒன்றை

அமைத்து ஆவன செய்திடுமாறு தமிழக அரசை உலகத் தமிழ்க் கழகம் விரும்பி வேண்டுகிறது.

15. பெங்களூரில் தொம்மலூர் என்னுமிடத்தில் கோவில் ஒன்றைப் புதுப்பித்தபொழுது கண்டெடுக்கப்பட்ட இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டையும் பிறபொருட்களையும் கருநாடக மாநிலத் தொல்பொருள் வாரியத்தாரும் இந்தியத் தொல்பொருள் ஆய்வகத்தாரும் கைப்பற்றிப் பேணிப் போற்றவும், மேலும் அவ்விடத்தில் அகழ்வாராய்ச்சியினைத் தொடர்ந்து நடத்தவும் உரிய முயற்சிகளை மேற்கொள்ளுமாறு உலகத் தமிழ்க் கழகம் தமிழக அரசினரை வலியுறுத்தி விரும்பி வேண்டுகிறது.

16. பிலிப்பைன்சு நாட்டு மக்களிடையே நற்றமிழ்ப் பற்றையும் நாட்டுணர்வையும் வளர்க்கும் வகையில் தமிழ் நூற்களை அனுப்பித் தரும் பெரும்பணிக்கு உலகத் தமிழ்க் கழகத்திற்கு முழு உரிமையினையும் வழங்குமாறு தமிழக அரசினரை விரும்பி வேண்டுகிறது; பிலிப்பைன்சு தீவைப்போன்று பிற தீவுகளிலும் வாழும் தமிழ்ப்பெருங்குடி மக்களுக்கு முறையாகத் தமிழ் நூல்களை விடுக்கும் வகையில் ஆவன செய்தருளுமாறு தமிழக அரசினரை உலகத் தமிழ்க் கழகம் வலியுறுத்துகிறது.

17. தமிழர் மிகுதியாக வாழும் பிறநாடுகளுக்குத் தமிழறிந்து மொழிநலம் பேணும் பெருமக்களையே தூதுவராக அனுப்பித் தருமாறு இந்திய நடுவணரசை உலகத் தமிழ்க் கழகம் விரும்பி வேண்டுகிறது.

18. கோவில் (ஆலயக்) கருவறைக்குள் ஒரு குலத்தவர் மட்டுமே நுழையலாம் என்னும் நிலையை நீக்கி உள்ளன்புடைய எவரும் நுழையலாம் என்று பொதுச்சட்டம் இயற்றி ஏற்றத் தாழ்வற்ற குமுகாயச் சீர்மைக்கு வழி வகுத்தருளுமாறு தமிழக அரசினரை உலகத் தமிழ்க் கழகம் வலியுறுத்துகிறது.

19. 'வித்துவான்' தேர்வெழுதி வெற்றிபெறும் அனைவருக்கும் ஒரு சீராக முப்பெரும் பல்கலைக் கழகங்களும் "புலவர்" என்னும் பட்டம் வழங்கத் தூண்டிய தமிழக அரசை உலகத் தமிழ்க் கழகம் போற்றிப் பாராட்டுகிறது.

20. பல்கலைக் கழகங்கள் மூன்றிலும் தமிழை முதற்பகுதிப் பாடமாக்கியமைக்குப் பல்கலைக்கழகத்தாரையும் அரசினரையும் உலகத் தமிழ்க் கழகம் பாராட்டி மகிழ்கிறது.

21. 'டால்மியாபுரம்' என்னும் பெயரினை மாற்றிக் "கல்லக்குடி" என்னும் பெயரையே சூட்டுமாறு பெருமுயற்சி செய்த தமிழக அரசினரைப் போற்றிப் பாராட்டும் உலகத் தமிழ்க் கழகம் தமிழ்நாட்டின் ஊர்ப் பெயரனைத்தும் தமிழாகவே சீர்பெற்றிலங்க வழி வகுத்திடுமாறு தமிழக அரசினரை விரும்பி வேண்டுகிறது.

22. பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழகத்தின் மாநில மாநாட்டினைத் திறமாகவும் சிறப்பாகவும் நடத்தியுள்ள முகவை மாவட்ட அமைப்பாளர் திருமிகு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு உலகத் தமிழ்க் கழகம் நன்றி பாராட்டிப் போற்றி மகிழ்கிறது.

23. உலகத் தமிழ்க் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டினைத் தென்னார்க்காடு மாவட்டத்தில் நடத்துவது என்று உலகத் தமிழ்க் கழக ஆட்சிக்குழு முடிவு செய்துள்ளது. O

பாராட்டும் நன்றியும்.

பறம்புக்குடியில் நடைபெற்ற உ. த. க. வின் முதல் மாநாடு மிகவும் அமைப்பாகவும் சிறப்பாகவும் நடைபெற்றதற்கு முதற் காரணியம், மாநாட்டின் அமைப்பாளர் திரு. மு. தமிழ்க்குடிமகனின் அரிய முயற்சியே. அவர் மாநாட்டின்பொழுது மதுரையில் பணியாற்றிக் கொண்டிருந்தும் மாநாட்டின் எல்லா அமைப்புகளையும் தாமே முன்னின்று மேற்பார்த்ததும், சோர்வும் சுணக்கமுமின்றி அவ்வப்பொழுது உ. த. கழகத் தொடர்புடைய எல்லார்க்கும் மடல் எழுதித் தொடர்பு கொண்டதும், விளம்பரங்களைத் தக்கவாறு பரப்பியதும், அடிக்கடி பறம்புக்குடி சென்று மாநாட்டு மலர், பாவாணர் நாள்காட்டி முதலியவற்றின் அச்சு வேலைகளைக் கவனித்ததும், மாநாட்டில் ஈடுபாடுள்ளவர்களைத் தக்கபடி ஊக்குவித்ததும், மாநாடு எல்லா வகையிலும் சிறப்பாக நடைபெற உதவின. ஓரிரு குறைபாடுகளிருந்தாலும் உ. த. க. வின் இம் முதல் மாநாடு இனி கழகம் அடையப்போகும் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்தது மிகவும் பாராட்டத்தக்கது. இவ்வகையில் திரு. மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், அவர்க்கு எல்லா வகையாலும் துணையாக நின்று தோள்கொடுத்த திரு. பறம்பை அறிவன், திரு. சுதி. அறவாழி ஆகியோர்களுக்கும் உ. த. கழகச் சார்பில் என் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெருஞ்சித்திரன்
பொதுச் செயலாளர், உ. த. க.

எவரும் மறுக்க முடியாது. இந்தத் தமிழ்க் குமுகாயம் 'தென் மொழி'க்கு மிகவும் கடமைப்பட்டுள்ளது. இது வெள்ளி விழாவுக்காக வும், பொன்விழாவுக்காகவும், வைரவிழாவுக்காகவும், நூற்றாண்டு விழாவுக்காகவும் சொல்லப்படுகின்ற செய்தி அன்று. உள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற உண்மையாகும். 'தென்மொழி'யின் உரை களால் முறுக்கேறி விழித்தெழுந்து நிற்கும் தமிழகம் தன் இலக்கை நோக்கி நடையிடட்டும்! வெற்றி வெள்ளிடைமலை!

—பொன். மணிமொழி, வாழைக்குறிச்சி.

O 161. தாங்கள் எழுதும் தென்மொழியைப் படித்ததிலிருந்து, எனக்கு நம் நாட்டின்மீது பற்று ஏற்பட்டு, நம் தமிழ்நாட்டைத் தனி நாடாகப் பிரிக்கப் போராட வேண்டும் என்றும், நம் நாட்டை நாமே ஆட்சி செய்யவேண்டும் என்றும், ஆவல் கொண்டுள்ளேன். இதற்கு இசைந்து நீங்கள் 'தென்மொழி'யால் தமிழரின் ஒற்றுமையை வளர்த் துப் போராட வேண்டும் என்று உங்களை இறைஞ்சிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—க. மாயவன், தேனாம்பேட்டை, சென்னை.

O 162. தமிழ்நலங் கனிந்த தென்மொழிக் காவல! சீர்மிகு தமி ழர்க்கன்றோ செந்தமிழ்ப் பொங்கல் விழா! இன்றைத் தமிழனின் நிலை என்ன? இன்றுள பண்பாடும் பற்றும் என்ன? இந்நிலையில் புத்தரிசி யும் புதுப்பாலும் கலந்துண்ண நினைவது அகத்தே பிணம் புறத்தே மணம் போலன்றோ இருக்கும்! ஆரிய பார்ப்பனரும், அவர்தம் அடி வருடிப் போலித் தமிழர்களும் நம்மகத்தை விட்டு விலகும்வரை, இந் நாள் பொன்னாளாமோ? நாடும் மொழியும் தனிநிலை எய்தித் தூய்மை பெற்று நன்னிலை எய்தும் நாளே தமிழரின் ஒய்வுத்திருநாள்—உயர் பொங்கல் நாள்! உணர்த்திடுக தமிழர்க்கே! என்னுயிரும் உடலும் மறையும்வரை தமிழ்க்கேடரை அழிக்கத்தங்களின் அடியில்நடப்பேன் பிறழேன். உறுதி. வணக்கம். மு. ஆறுமுகம், சாத்தனூர்.

O 163. சென்ற சில திங்கள்களில் தென்மொழியில் வெளிவரும் தங்களின் ஆசிரியவுரைகள் மிகப் பயனுள்ளவை. தமிழ்க் குமுகாயச் சீர்கேட்டினை மிக நுணுக்கமாக ஆய்ந்து அவற்றைக் களையும் வகை யைத் தெள்ளிய முறையில் எடுத்துரைத்து வருகிறீர்கள். தமிழகம் விழிப்புற்று மறுமலர்ச்சி அடையும் நேரம் மிக நெருங்கிவிட்டது. இதை ஒவ்வொரு தமிழ் மாந்தனும் உணர்ந்து செயல் படுவானே யானால் மிக விரைவில் நாம் உலக முன்னணியில் தன்னுரிமை பெற்று விளங்குவது திண்ணம். தங்களின் அரும் முயற்சி வெற்றி பெற்று இத்தமிழினம் வீறுகொள்ள இயற்கை துணை புரியுமாக.

—வளர்தமிழ் அறிவன், திருச்சி.

O 164. சென்ற திங்கள் 'தென்மொழி' இதழில் திருவாட்டி தாயம்மை எழுதியிருந்த மொழியியல் கட்டுரை ஆங்கில இலக்கியம் பயிலும் முதுகலை மாணவர்க்கு மிகவும் பயனுள்ளதாக உளது. இத் தகு ஒப்பாய்வுக் கட்டுரைகள் தமிழின் விழுப்பத்தைக் காட்டுவதுடன் அல்லாமல் என்போலும் மாணவர்க்கு நிறைபயன் நல்குகின்ற இயல் பின. எனவே எதிர்நாளில் மொழி ஆய்வுத்துறைக் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம். தமிழ் மாணவர்காள்! தென்மொழி ஒரு கலங் கரை விளக்கு, அதன் ஒளிதான் ஆடும் தமிழ் மரக்கலத்தை அமைதித் துறைக்கு அழைக்கவல்லது! —ஒரு தமிழ்மாணவன், திருச்சி.

165\. உயிரெனத் தமிழை எண்ணி உயர்வுற உழைத்து நாளும்
அயர்வுறுப் புலவர் ஏறே! அருந்தமிழ்க் கடல்க டந்தோய்!
நயமுறப் பாவால் மக்கள் நல்லுணர் வடையச் செய்தே
வியன்தமிழ்ப் புலத்தை மீட்க விழைந்திடும் மறவர்வேந்தே!

கொண்டதோர் கொள்கை யன்றிக் குறிபிறிதெதிலு மின்றி
அண்டினோர் அகன்ற போதும் அரசினர் எதிர்த்த போதும்
மண்டிடும் வறுமை யாலும் மயங்கிடா துழைக்கும் நும்போல்
கண்டிலேன் ஐயா! தம்மைக் கருத்துடன் வணங்குவேனே!

ஊருக்கே உழைக்கின் றீர்நும் உறவினை நினைந்தீ ரல்லீர்!
பாருக்குள் தமிழ்ப்பு லத்தில் பசுமைமண் டிடச்செய் தற்கே
ஆருக்கும் அஞ்சா தீவ்வா(று) அருந்தமிழ் நாட்டை மீட்கும்
போருக்கே படைதி ரட்டப் புறப்பட்டீர் பகலும் அல்லும்!

நன்னெறி வகுத்துச் செல்லும் நாவலர் உமைத்தொ டர்ந்தே
பின்னிலையாமற் செல்வோர் பெருந்தொகை இல்லை; ஆயின்
கன்னுளக் கயவர் செய்வார் கணக்கிலாத் துயர் நுமக்கே!
முன்நகை முகத்தோ டேத்தி முதுகிடைக் குறைசொல் வாரே!

வண்டமிழ் புரப்போ மென்று வாய்ப்பறை முழக்கி னோர்கள்
மண்டிலம் ஆள வந்தார் மதித்திலர் தமிழ்ச்சான் றோரை!
தொண்டருந் தமிழ்க்கி யற்றும் தூயரை ஊக்க வில்லை!
சண்டியர் கிறுக்கித் தள்ளும் தாளிகை வளரச் செய்வார்!

உடனிருந் தறிவு பெற்றோர் ஒதுங்கியே இடுக்கண் செய்ய,
அடிமையுற் றோரி யர்க்கிவ் வரசினர் ஊமை யாக,
மடமைமண் டிக்கி டக்கும் மண்டையைத் தூய்மை செய்யாது
இடர்வுறும் தமிழர்க்காக ஏங்குவீர் நெஞ்சம்! அந்தோ!

சிறுதுரும்(பு) உதவி கொண்டே திரைக்கடல் கரையைச்சேர
முறிவிலா(து) உஞற்றும் தங்கள் முனைவினுக் குடன்நிற்
சிறுதொகை யாளர்! நன்றி சிறிதள வேனு மில்லா [பாரும்
அறிவறை போகி யார்க்(கு) அலைந்துழைக் கின்றீர் ஐயா!

நற்றமிழ் வளர்க்கும் தாங்கள் நல்குர(வு) அடையக் கண்டும்
சற்றுநெஞ்(சு) அலம ருதத் தரமிலா மக்க ளுக்காய்
இற்றைநாள் ஓடாய்த் தேய்வீர்! எண்ணவுங் கலங்கு கின்
முற்றுவெம் பகையழிப்பீர்! முத்தமிழ் காப்பீர் ஐயா! [றேன்!

செந்தமிழ்ப் புலவா! தாங்கள் செயுமெலா முயற்சி கட்கும்
வெந்திறல் மறவர் கூட்டம் விரைந்துடன் துணைநிற் றற்கும்,
சிந்திடு குருதி என்றால் சிந்திடு தற்கும் உள்ளோம்!
தந்திடு தலையென் றாலும் தயங்கிடோம்! தளர்ந்தி டாதீர்!

ஆரியச் சழக்கர், சற்றும் அறமிலா வடவர் நம்மை
வேருடன் அழிக்கும் செய்கை வினையாண்மை கொண்டிலங்
நேரியர் தாங்களேதாம் நிலைகுலைந்திடும்நம் நாட்டைச் [கும்
சீருற வைப்பீ ரென்றே திண்ணமாய் நம்புகின்றோம்!

—பா. கு. சுப்பிரமணியன், பாதூர்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,